பக்கங்கள் : 22+VIII=30

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (14.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :261

## படையினர் திடீரென வீதியை மூடியதால் ஓமந்தை, முகமாலையில் பயணிகள் அவதி

### கண்காணிப்புக்குழு தலையிட்டதால் நண்பகலுக்குப் பின் போக்குவரத்து

யாழ்ப்பாணம், ஓக.14

ஏ-9 வீதியில் ஓமந்தையிலும் முகமாலையிலும் அமைந்திருக்கும் இராணுவச் சோதனைச் சாவடிகளும் மன்னார் - உயிலங்குளம் வீதி சோதனை நிலையமும் நேற்றுக் காலை திறக்கப்படாததால் அந்த வீதிகள் ஊடான போக்குவரத்துகள் தடைப்பட்டன. படையினர் தமது சோதனை நிலையங்களைத் தன்னிச்சையாகத் திடீரென மூடியதால் பெரும் எண்ணிக்கையான பயணிகள் அங்கும் இங்கும் பயணம் தடைப்பட்டு அவலப்பட நேர்ந்தது. எனினும், பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தலையிட்டதால் நண்பகலுக்குப் பின்னர் போக்குவரத்து அனுமதிக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் சொல்ஹெய்ம் தொடர்பு

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அடுத்து உருவாகி இருக்கும் நிலைமை தொடர்பாக நோர்வேயின் விசேட ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

படுகொலை இடம்பெற்று சுமார் நான்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

### உண்மையைக் கண்டறிய முயலாமல் வழமையான பாணியில் குற்றச்சாட்டு

# கதிர்காமர் படுகொலையுடன் புலிகளுக்குத் தொடர்பில்லை!

## ஆணித்தரமாக மறுக்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி, ஓகஸ்ட் 14



**வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்றவாறு அரசுத்தரப்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அந்த இயக்கம் அடியோடு நிராகரித்திருக்கின்றது.**

**கொலையின் உண்மையான பின்னணியைக் கண்டறிவதற்கு முயற்சிக்காமல் விடுதலைப் புலிகள் மீது பழிபோடும் வழமையான பாணி இது என்று தெரிவித்துக் கடும் ஆட்சேபத்தை வெளியிட்டிருக்கின்றார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

சர்வதேச ரீதியில் புலிகள் அமைப்புக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காகத் தீவிரமாக முயன்றுவந்த கதிர்காமரின் பிரசார ராஜதந்திரம் இப்போது மிகவும் பலவீனமான நிலைக்கு வந்துவிட்டது. இந்தக் கட்டத்தில் அவரை இலக்கு வைத்துக் கொல்லவேண்டிய தேவை இல்லை என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.

அமைச்சர் கதிர்காமரின் கொலையுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி தெரிவிக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் நேற்று உதயனுக்கு கருத்து வெளியிட்டார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

(2ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே சூரியகாந்தியில்....


- ஈழப்போரின் அடுத்த நகர்வுக்கு சர்வதேச அழுத்தம் குறுக்கே!
- ரணிலுக்கா, மஹிந்தவுக்கா ஆதரவுப் பலம் யாருக்கு?
- துறைமுக மேலாண்மைக்குப் பொருத்தமானது வல்வெட்டித்துறை.
- "...காத்திரமான சினிமா உருவாக்கத்தில் அக்கறை செலுத்துகின்றோம்..." – செவ்வி.

இவற்றுடன்

- திலகம் • சிறுவர் பொழில்
- யாழ்–பாணம்
- மூத்தான மூத்தவர்கள்


### புலிகள் கூறுவதை ஏற்கமுடியாது! அமைச்சர் பதில்

கொழும்பு, ஓக.14

அமைச்சர் கதிர்காமர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் தங்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று விடுதலைப் புலிகள் இயக்கம் கூறியிருப்பதை ஏற்கமுடியாது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா.

கொழும்பில் நேற்றைய தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா இதனைக் கூறியிருக்கிறார்.

கதிர்காமரின் கொலைக்கும் தமக்கும் -

(22 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ், சங்கரி உட்பட முக்கியஸ்தர்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த விசேட திட்டம்

### அவசர பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு,ஓக.14

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, வீ.ஆனந்தசங்கரி உட்படக் கொலை அச்சுறுத்தல்களுக்கு இலக்காகக் கூடிய முக்கியஸ்தர்களின் பாதுகாப்பை உடனடியாக அதிகரிப்பது என்று தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகையோரின் பாதுகாப்பை உறுதிசெய்யும் விதத்தில் விசேட பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பொலீஸ் தலைமையகத்துக்கு விசேட நிதி ஒதுக்கீடு செய்யவும் உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து பாதுகாப்பு நிலைவரங்களை ஆராய்வதற்காக நேற்றுக் காலை கூட்டப்பட்ட விசேட பாதுகாப்

(22 ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் கதிர்காமரின் பூதவுடல் அவரது இல்லத்தில் அரச மரியாதையுடன் வைக்கப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## சினைப்பர் சுடுகலன் மீட்பு! தேடுதல் தொடர்கின்றது!

கொழும்பு, ஓக 14

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைச் சுட்டுக் கொன்ற கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு பொதுமக்களின் உதவியைப் பொலீஸார் நாடியிருக்கின்றனர்.

தலைநகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதற்குத் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் அதேவேளை சந்தேக நபர்கள் தொடர்பாகத் தகவல் கிடைத்தால் அருகில் உள்ள பொலீஸ் நிலையத்துக்கு அறி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர சதுக்கத்தில் இறுதிச்சடங்கு நாளை தேசிய துக்கதினம் பிரகடனம்

கொழும்பு,ஓக.14

அமைச்சர் கதிர்காமரின் இறுதிச் சடங்குகள் நாளை திங்கட்கிழமை முழு அரச மரியாதைகளுடன் நடைபெறவுள்ளன. அன்றையநாள் தேசிய துக்கதினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

சுதந்திரச் சதுக்கத்தில் பிற்பகல் 3 மணிக்கு முழு அரச மரியாதைகளுடன் இறுதிச்சடங்கு நடைபெறும். இறுதிச்சடங்கு தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

அரசு நியமித்திருக்கும் இங்கக் குழுவில்

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசியல் தீர்வுக்கு எதிரானோரே கதிர்காமரைக் கொன்றுள்ளனர்

## ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அறிக்கை

கொழும்பு, ஓக.14

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதைத் தடுப்பதற்கு முயன்ற அரசியல் எதிரிகளாலேயே லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான வன்செயல்களுக்கு ஒருபோதும் அடிபணியமாட்டோம்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டிருப்பது குறித்து வெளியிட்ட அறிக்கையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி மாளிகையில் இருந்து நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரவு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்வியுற்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடும் கவலையடைந்துள்ளார். இப் பயங்கரச் சம்பவத்தைக் கண்டிக்கும் அதேவேளை தனது அரசு இவ்வாறான வன் செயல்களுக்கு ஒரு போதும் அடி பணியப்போவதில்லை எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை மேற்கொள்ளவும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குமாக அரசு அவசரகால நிலையைப் பிறப்பித்துள்ளது. லக்ஷ்மன் கதிர்காமர் மதி நுட்பத்திறனும், அரசியல் துணிவும், நேர்மையும் கொண்ட உயர் திறன் மிக்க தலைவராவார்.

ஒன்றிணைந்த இலங்கைக்குள் ஜனநாயக வழியில் பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக அயராது உழைத்தவர். வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த பதினொரு ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் சர்வதேச உறவுகளில் அளவிடமுடியாத வெற்றிகளை இந்த நாட்டுக்குப் பெற்றுத்தந்துள்ளார். பல வெளிநாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடைவிதித்தமை உட்பட.

அவர் இந்தக்காலத்தின் வீர புருஷன். தமது உயிருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்பட்ட நிலையிலும் பயங்கரவாதத்தை அதன் சகல மட்டங்களிலும் எதிர்த்து உறுதியுடன் செயற் பட்டவராவார்.

லக்ஷ்மன் கதிர்காமர் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்படுவதைத் தடுப்பதற்கு முயன்ற அரசியல் எதிரிகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி குமாரதுங்க, கதிர்காமரின் குடும்ப உறுப்பினர்களுக்கும், மனைவிக்கும் தனிப்பட்ட முறையிலும் நாட்டு மக்கள் சார்பிலும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலஞ்சென்ற அமைச்சர் கதிர்காமருக்கு கௌரவமளிக்கும் முகமாக குறிப்பிட்ட காலத்தை துக்க தினமாக ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார்.

காலஞ்சென்ற அமைச்சர் கதிர்காமரின் மரணச்சடங்குகள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு அமைச்சர் ரத்ன சிறி விக்கிரமநாயக்கவின் தலைமையிலான குழு ஒன்றினையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இக் கோழைத்தனமான தாக்குதலை எதிர்கொண்டு பொறுமையும் அமைதியும் காக்குமாறு ஜனாதிபதி நாட்டு மக்களை வேண்டிக் கொள்கிறார் - என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# கதிர்காமரின் படுகொலை சமாதானத்துக்குச் சோதனை!

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் அறிக்கை

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை இலங்கை சமாதான முயற்சிகளுக்குத் கடும் சோதனையாக அமைந்துவிட்டது. இந்த வேளையில், போர்நிறுத்த உடன்படிக்கை உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுவதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்.

- நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இந்தச் செய்தியைக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் நேற்று விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் வைத்துக் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை துக்ககரமானதொரு சம்பவமாகும்.

இலங்கை அரசில் முக்கிய பொறுப்புவகித்த அரசியல்வாதியான லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை கண்டிக்கத்தக்கது. இலங்கைப் பொதுமக்கள், அரசு, ஜனாதிபதி மற்றும் அமைச்சரின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சரின் இப்படுகொலைச் சம்பவம் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்குக் கடும் சோதனையாக ஆகியுள்ளது. இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் இவ்வேளையில் போர்நிறுத்த உடன்பாடு உரிய முறையில் கடைப்பிடிக்கப் படுவதற்கு உதவும் வகையில் செயற்படவேண்டியது அவசியமாகும் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# கதிர்காமர் கொலையுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

✱ *கேள்வி:-* லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று எழுந்துள்ள குற்றச்சாட்டுக் குறித்து... உங்கள் கருத்து என்ன?

● *பதில்:-* கதிர்காமரின் கொலை நடந்த உடனேயே அரசுத்தரப்பு, படைத்தரப்பு மற்றும் பொலீஸ் தரப்பு ஆகியவை விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சுமத்த ஆரம்பித்துவிட்டன. கொலையாளிகள் பற்றியோ கொலையாளியின் பின்னணிபற்றியோ ஆராயாமல், உடனடியாகப் புலிகள்மீது குற்றஞ்சாட்டி கொலையாளிகள் தப்பித்துக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனைநாங்கள்வன்மையாகக்கண்டிக்கின்றோம்.

கதிர்காமர் மிகவும் பாதுகாப்பான பிரதேசத்தில் - நூற்றுக்கு மேற்பட்ட பாதுகாவலர்கள் சூழ - பாதுகாக்கப்பட்டுவந்தவர்.

இப்படிப் பாதுகாப்புடன் இருந்தவரை, உள்நுழைந்து இப்படியான தாக்குதலைச் செய்வது என்பது சாத்தியமற்ற நடைமுறை. ஆகவே, அவர்கள் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு, உண்மை நிலையை அறிந்து, ஆதாரங்களுடன் வெளிப்படுத்தினால் நல்லது. எழுந்தமானத்தில் அவர்கள் புலிகள்மீது குற்றஞ்சுமத்துவது என்பது புலிகளை சர்வதேச அரங்கில் தனிமைப்படுத்துவதற்கும் தப்பபிப் பிராயத்தை ஏற்படுத்துவதற்குமான முயற்சி.

எமது தாயகப் பிரதேசத்தில் ஆயுதக் குழுக்களுடன் இணைந்ததான படைத்தரப்பின் நடவடிக்கைகள், நடமாட்டங்கள், யுத்தநிறுத்தத்தைக் குலைக்கும் முயற்சியாக நடக்கின்றன என்று ஏற்கனவே கூறியுள்ளோம். எச்சரிக்கையும் விடுத்திருந்தோம். நோர்வேத்தரப்பு, கண்காணிப்புக்குழு ஆகியவற்றுக்கும் தெளிவாக இதனை எடுத்துக் கூறியிருந்தோம்.

கொழும்பில் நடக்கும் கொலைகள் கூட, அவர்களின் உள்முரண்பாடுகள், படைத்தரப்புடன் இணைந்துள்ள குழுக்கள் அவற்றின் செயற்பாடுகள் ஆகியவற்றின் காரணமாக இருக்கலாம். இதற்கான உண்மையான காரணத்தைக் கண்டறிவதை விடுத்துப் புலிகள் மீது எழுந்தமானத்தில் குற்றஞ்சாட்டுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சர்வதேச சமூகத்துக்கும் எமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கத் தயாராக இருக்கின்றோம். விடுதலைப் புலிகளை இக்கொலையுடன் சம்பந்தப்படுத்துவது மிகவும் தவறானது.

### கதிர்காமரின் செயற்பாடுகள்

✱ *கேள்வி:-* கதிர்காமர் பல வருடங்களாக விடுதலைப் புலிகளுக்கெதிராக சர்வதேச அரங்கில் பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வந்தார். சிறுவர்களை விடுதலைப் புலிகள் படைக்குச் சேர்ப்பதாக அவர் கூறிவந்தார். அமெரிக்கா விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய இவர் காரணமாக இருந்தார் என்றும் கூறப்பட்டது. இவை குறித்து...?

● *பதில்:-* கதிர்காமரைப் பொறுத்தவரையில் அவர் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றினார். அரசின் கொள்கைகளைப் பலமாகக் கொண்டு செல்கின்ற பொறுப்புவாய்ந்த அமைச்சராக இருந்தார். அதனால், அதைச் செய்தார். தமிழருக்கு எதிரானபோக்கை அவர் நீண்டகாலமாக கடைப்பிடித்தார் என்பது ஊடகங்கள் வாயிலாகவும் மக்கள் வாயிலாகவும் வெளிவந்த உண்மையான பக்கம். அவரது தமிழர் விரோத நடவடிக்கைகள் தமிழர் போராட்டத்துக்கு எதிரான போக்கு. தமிழர் படுகொலைசெய்யப்பட்டமையை மூடி மறைப்பதில் அவர் பெரியளவில் ஈடுபட்டார் என்பது எல்லாம் உண்மைதான்.

ஆனால், இப்போது சமாதான காலம். பேச்சு மற்றும் அமைதிமுயற்சிகளை முன்னெடுக்கின்ற காலம். இந்தக் காலத்தில் அவரது நடவடிக்கைகள் பலவீனமாகத்தான் இருந்தன. இப்போது நாங்கள் நேரடியாகச் சர்வதேச சமூகத்துடன் பேசுகின்றோம். உறவுகளை வைத்திருக்கின்றோம். நெருக்கமான உறவுகளைப் பேணுகின்றோம். எமது நிலைப்பாட்டை நேரடியாக விளக்குகின்றோம்.

கதிர்காமரின் நடவடிக்கைகள் கடந்தகாலத்தில் வெற்றிபெற்றிருக்கலாம். அண்மைக் காலமாக கதிர்காமரின் போக்கு மற்றும் அவரது நடவடிக்கைகளைச் சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருடைய உண்மைக்குப் புறம்பான பிரசாரங்கள் சர்வதேச அளவில் எடுபடவில்லை.

இந்த நிலையில், புலிகள் அவரைக் கொல்ல வேண்டிய தேவையும் இல்லை. அவர் பற்றிய கருத்துக்களை நாங்கள் தவிர்த்துத்தான் வந்தோம்.

தெற்கில் அரசியல் அதிகாரப்போட்டி, சுதந்திரக் கட்சிக்குள் ஜனாதிபதி, பிரதமர் வேட்பாளர் தொடர்பாக உள்முரண்பாடுகள். படைத்தரப்புக்குள் ஆயுதக்குழுக்களின் ஊடுருவல், செயற்பாடுகள் போன்றவை அதிகரித்துள்ளன. இப்படி வேறுபட்ட பிரச்சினைகள் அங்கு இருக்கின்றன. அங்கு நடக்கும் கொலைகளை எல்லாம் புலிகள் மேல் சுமத்துவது ஏற்கக்கூடியதாக இல்லை.

✱ *கேள்வி:-* சர்வதேச மட்டத்தில் தமிழர் தரப்புக்குள்ள செல்வாக்கில் இக்கொலையின் பின்னர் பாதிப்பு ஏற்படுமா?

● *பதில்:-* நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தாது. ஏனெனில், இங்குள்ள நிலைமை சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாகத் தெரியும். போர்நிறுத்தக் கணிக்காணிப்பாளர்கள் இருக்கிறார்கள் சர்வதேச சமூகத்துடன் நேரடித் தொடர்பை வைத்திருக்கின்றோம். அவர்கள் எமது கருத்தை அறிந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலையில் உடனடியாகப் புலிகள் மீது பழிசுமத்தி, புலிகளைத் தனிமைப் படுத்தி புலிகள்மீது ஒரு அவப் பெயரை உருவாக்குவதற்கு இவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் சிங்களப் பேரினவாதிகள் இதைச் செய்திருக்கிறார்கள். தங்கள் மத்தியில் உருவாகியுள்ள மோதல்களைப் புலிகள்மீது சுமத்தி அப்படியான சூழலை உருவாக்க முனைகிறார்கள். இது வெற்றியளிக்கப் போவதில்லை. நாங்கள் எமது உண்மை நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திற்குத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றோம்.

### சமாதான முயற்சி பாதிப்படையுமா?

✱ *கேள்வி:-* சமாதான முயற்சிகளை - போர் நிறுத்த உடன்படிக்கையை - இக்கொலை பாதிக்க வாய்ப்புள்ளதா?

● *பதில்:-* இரு தரப்புகளின் மீறல்கள் தான் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்கும். இருதரப்புகள் என்ற ரீதியில் இக்கொலை அத்தரப்புகளுடன் சம்பந்தப்பட்டது அல்ல.

தெற்கில் அவர்களது உயர் பாதுகாப்பு வலயத்தில் கொலை நடந்துள்ளது. பாதுகாப்பு மிக்க ஒரு சூழலுக்குள் இக்கொலை நடந்துள்ளது. ஆகவே, படைத்தரப்பும் சம்பந்தப்பட்டவர்களும் உள்ளக விசாரணையை மேற்கொண்டு உண்மையைக் கண்டறியவேண்டும். அதனை விடுத்து சமாதான முயற்சிகளை சீர்குலைக்கும் விடயமாக இதனைப் பூதாகரமாக்கிக் கொண்டுபோவதைத்தவிர்த்து கொள்ளவேண்டும்.

✱ *கேள்வி:-* சர்வதேச சமூகம், விடுதலைப் புலிகளுக்கு எதிராகவோ தமிழர் தரப்புக்கு எதிராகவோ கடும் போக்கைக் கடைபிடிக்கும் நிலையை இக்கொலை உருவாக்குமா?

● *பதில்:-* அப்படி சர்வதேச சமூகம் கடும் போக்கை எடுக்கும் என நம்பவில்லை. ஏனெனில், சர்வதேச சமூகம் எப்போதும் உண்மையின் பக்கம் நின்று முடிவு எடுக்கும். அவர்களுக்கு உண்மையை அறியக்கூடிய வாய்ப்பு நிறைய உண்டு.

அவர்கள் நேரடியாக வருகிறார்கள். எமது விடயங்களை கவனிக்கிறார்கள். கருத்துகளைப் பரிமாறுகிறார்கள். ஏதாவது, தெளிவுபடுத்தல் தேவை என்றால் தெளிவுபடுத்த நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆகவே, இன்றுள்ள சூழலில் சர்வதேச சமூகம் கடும்போக்கு நிலையை எடுக்கும் என நாம் கருதவில்லை.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், அவர்களது அபிலாஷை மற்றும் மனிதாபிமான பிரச்சினைகள் ஆகியவற்றை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்துவைத்துள்ளது.

சர்வதேச சமூகத்தால் பரிந்துரைக்கப்பட்ட இறுதியாக முன்வைக்கப்பட்ட பொதுகட்டமைப்பைக் கூட இலங்கை அரசு, உயர் நீதிமன்றம் போன்றவை எப்படிச் செயலிழக்கச் செய்துள்ளன என்பதும் -

தமிழ் மக்கள் எத்தகைய நெருக்கடி நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் - சர்வதேச சமூகத்துக்குத் தெரியும்.

### அரசின் செயற்பாடு

✱ *கேள்வி:-* கொலை நடந்தவுடன் ஜனாதிபதி அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து தேடுதல் மற்றும் ஏ-9 பாதை மூடுதல் போன்றவற்றை மேற்கொண்டுள்ளமை குறித்து ....?

● *பதில்:-* கொலையாளிகளைக் கண்டு பிடிக்க அரசு சில நடவடிக்கைகளை எடுக்கின்றது. ஆனால், அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்துவது போக்குவரத்து பாதையை மூடுவது போன்றவை குறித்து எமக்குத் தெளிவுபடுத்தப்படவில்லை. அது சம்பந்தமான தெளிவுபடுத்தலை கண்காணிப்புக்குழு மற்றும் நோர்வேத் தரப்பிடம் கேட்டுள்ளோம்.

இந்தச் சம்பவத்திற்காக ஏ-9 பாதையை மூடி நெருக்கடி நிலையைக் கொண்டுவரும் நோக்கம் என்ன? - என்று கேட்டுள்ளோம்.

கொலையாளிகளைக் கண்டுபிடிப்பது அரசின் கடமை, சட்டம் ஒழுங்கைப் பேணுபவர்களின் கடமை. அதை அவர்கள் கட்டாயம் செய்ய வேண்டிய தேவை - கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

கொழும்பில் அவர்களது உயர் பாதுகாப்பு வலயத்தில் நடந்த கொலையை கண்டறிவதற்காக, முகமாலை, ஓமந்தை சாவடிகளை மூடி போக்குவரத்தை நிறுத்தி தமிழ் மக்களுக்கு பாரிய வாழ்வியல் நெருக்கடியை ஏற்படுத்தத் தேவையில்லை.

✱ *கேள்வி:-* இக்கொலையை விடுதலைப் புலிகள் ஏன் கண்டிக்கவில்லை?

● *பதில்:-* இக்கொலையின் உண்மைத் தன்மையை அறிந்த பின்னர்தான் மேலதிகமாக எமது கருத்துக்களை சொல்ல முடியும்.

விடுதலைப் புலிகள் மீது அவர்கள் குற்றஞ்சாட்டியதைத்தான் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எந்தவித விசாரணையோ, பின்னணியோ தெரியாத நிலையில் உடனடியாக புலிகள் மீது குற்றஞ்சுமத்துவது என்பது சமாதானச் சூழலை - புலிகளின் நல்லெண்ணத்தை- உறுதிப்பாட்டை - சர்வதேச அரங்கில் பலவீனப்படுத்தும் அரசின் முயற்சியாகவே நாம் பார்க்கின்றோம்.

(ஓ-3)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# கதிர்காமரின் கொலை போர் மூள ஏதுவாகக் கூடாது

அரசின் மூத்த அமைச்சர்களில் ஒருவரான லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டுள்ளார். நாட்டின் வெளிநாட்டு அமைச்சராக அவர் விட்டுவிட்டு, எட்டு வருடங்கள் பணியாற்றியவர்.

இப்போது ஆட்சியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளரான அவர், சந்திரிகா குமாரதுங்க 1994 ஆம் ஆண்டில் பிரதமராகப் பதவியேற்றதோடு, வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்னர் சந்திரிகா ஜனாதிபதியான பின்னர், அவரின் ஆலோசகர் என்ற வகையிலும் வெளிவிவகார அமைச்சர் என்ற நிலையிலும் சேவையாற்றினார். ஜனாதிபதிக்கு மிக நெருங்கிய ஒரு மூத்த தலைவராகவும் திகழ்ந்தார்.

சட்டத்துறையில் வல்லவரான கதிர்காமர், ஜெனிவா சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் ஆலோசகராகக் கடமைபுரிந்தவர். சட்டத்துறையில் மட்டுமன்றி இலக்கியத்துறையிலும் புலமைமிக்கவர்.

இலங்கை அரசைப் பொறுத்தவரையில் - ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரையில் - அவர், ஒரு விசுவாசமான அரசியல் தலைவர். தமிழர் பிரச்சினையில், சந்திரிகா எதிர்பார்த்ததற்கும் மேலாக எத்தனையோ மடங்கு அதிகமாகத் தமிழர் விரோதச் செயற்பாடுகளில் முன்னணி வகித்தவர் - தானாகவே முன்னின்று உழைத்தவர்.

வெளிவிவகார அமைச்சராகுவதற்குக் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை மாசுபடுத்தும் விதத்தில், வெளிநாடுகளில் பிரசாரம் செய்தவர். தமக்கிட்ட பணியை - ஒதுக்கப்பட்ட சேவையை - எசமானர் எதிர்பார்த்ததற்கும் மேலாக ஒப்பேற்றிப் பாராட்டுப் பெற்றவர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்குவதற்குத் திட்டம் வகுத்த ஸ்ரீல.சு.க. அரசின் உள்வீட்டுப் பிள்ளையாக மாறியவர்.

உள்நாட்டில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் அவர் அறிஞராக, திறமை மிக்கவராக மதிக்கப்பட்டவர். அவரது தொடர்பாடல், சொல்லாடல் சக்தி வல்லமையானதாக விளங்கியது. அதனால், ராஜதந்திர வட்டாரங்களில் பெயர் பெற்றவரானார்.

இத்துணை திறமைகளும், ஆற்றல்களும், மதிநுட்பமும் இருந்தென்ன? தனது சொந்த இன மக்களின் ஒடுக்கப்பட்ட நிலையை உணர்ந்துகொள்ள அவரது மனம் மறுத்தது. தமது எசமானிக்கு விசுவாசமாக இருக்கவேண்டும் என்று கருதி தமது இனமக்களுக்கு - அவர்களின் உரிமைப் போராட்டத்துக்கு - எதிராகச் செயற்பட்டார்.

அதன் விளைவு, தமிழர்களின் உரிமைப் போராட்டம் வெறும் பயங்கரவாதமாக வெளியாருக்கு வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டது. தனது சொந்த இனத்துக்கு எதிராகச் செய்யும் தவறை, பெரும் சாதனையாகவே, சாதுரியமாகவே அவர் பார்த்திருப்பார் போலும்!

அரசியல் பதவியில் இருந்த காலங்களில் மட்டுமன்றி, அதில் இல்லாத வேளைகளிலும் கதிர்காமர் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்கும் வேலையையே -மாசு கற்பிக்கும் சின்னத்தனத்தையே - ''கனகச்சிதமாகச்'' செய்தார்.

அரசியல் சித்தாந்தங்களில், கோட்பாடுகளில், செயற்பாடுகளில் ஆளுக்கு ஆள் கருத்து வேறுபாடுகள் இருப்பது ஒன்றும் புதியதல்ல. அதனைத் தவறு என்று சொல்வதற்கும் இல்லை.

ஆனால், ஒடுக்கப்பட்ட இனம் ஒன்று தனது இழந்த உரிமைகளுக்காகப் போராடுவதனை, தாமும் அதே இனத்தைச் சேர்ந்தவராக இருந்துகொண்டும், கொச்சைப்படுத்தும் இலக்குடன் செயற்பட்டமை கண்டிக்கத்தக்கது. தமிழ் மக்களை ஒடுக்குவதற்குத் துணைபோன அவரது செயற்பாடுகளால், அவர் ஈழத்தமிழர்களில் தொண்ணூற்றொன்பது சதவீதத்தினரால் வெறுக்கப்பட்டவர் ஆனார். கதிர்காமர் என்ற பெயரால் மட்டுமே அவர் தமிழர்; அரசியல் செயற்பாடுகளில் வேற்று இனத்தவரை விடவும் வெறுக்கத்தக்கவர் ஆனார்.

எனினும் -

ஒரு சிறந்த புலமையாளர், திறமையாளர், ராஜதந்திரி, சாதுரியம் மிக்கவர் என்ற முகங்களைக் கொண்ட அவருக்கு இந்தக் கதி நேர்ந்திருப்பது ஏற்புடையதல்ல. அந்தவகையில் இக்கொலை கண்டிக்கப்பட வேண்டியதே.

அவரது கொலை குறித்து ஐ.நா. செயலாளர் உட்பட சர்வதேச மட்டத் தலைவர்கள் இரங்கலும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். அவரது கொலையினால், போர் நிறுத்த ஒப்பந்தத்துக்குப் பங்கம் விளையக்கூடாது; போர் மூள்வதற்கு அவரது மரணம் ஏதுவாகக் கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை வாழ் சகல இன மக்களினதும் கருத்தும் விருப்பமும் அதுவே. எல்லோருக்கும் நல்லன விளைக்கக் கூடியதும் அதுவே.

## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம்,ஓக.14

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கின் 5ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை தாரணி ரஞ்சனின் பாட்டுக்கச்சேரி நடைபெறும்.

பாக்கிலட்சுமி நடராசா வயலின், எம்.லோகேந்திரன் மிருதங்கம் ஆகியோர் பக்கவாத்தியங்கள் வாசிப்பர். (எ-204)

## செயற்றிட்டப் பயிலரங்கு

கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் வட இலங்கை சர்வோதயம் நடத்தும் சமாதானமும் அபிவிருத்திக்குமான செயற்றிட்டப் பயிலரங்கு-5 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குப் புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய சேவை வளாகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

சர்வோதய அறங்காவலர் பொ. ஜமுனாதேவியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 'சமாதானமும் அபிவிருத்தியும்' என்னும் தலைப்பில் 'செப்பாக்' நிறுவனத்தைச் சேர்ந்த அருட்சகோதரி ஜெயசீலி சிங்கராசா கருத்துரை நிகழ்த்துவார். 'இலங்கையில் சமாதான ஒப்பந்தத்தின் பின் விளைவுகள்' என்னும் கருத்துரையும் இடம்பெறும். (எ-202)


## சமுர்த்தி முத்திரை விநியோகம்

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட இரண்டாயிரத்து 83 குடும்பங்களுக்குச் சமுர்த்தி நிவாரணம் முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன என பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமுர்த்தி நிவாரணம் பெறத் தகுதியுடைய மேலும் ஒரு தொகுதி குடும்பங்களின் பெயர் விவரங்கள் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - கடந்த டிசெம்பர் மாதம் பூர்த்தி செய்யப்பட்ட சமூக நலன்புரி நன்மைகள் சட்ட விண்ணப்பப்படிவங்களின் அடிப்படையில் சமுர்த்தி நிவாரணம் பெறத்தகுதியுடைய குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு பெயர் பட்டியல் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக்கூறப்பட்டது.(எ-73)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

ஐந்தாம்நாள் உற்சவம்



### கொடி இழந்து மாள்வதோ

பண்டு தொட்டு இந்த மண்ணில்
பரவி வாழ்ந்த தமிழினம்
தொன்று தொட்டுக் காத்த பண்பை
தொலைத்துவிட்டுத் தேடுகிறோம்

அன்று எம்மைக் காத்து நின்ற
ஆறுமுக வேலவா
இன்று எம்மைக் கண்டு நீயும்
இரங்க மறுத்தல் நீதியே

மன்றில் ஆடும் ஈசன் கூட
மறந்துவிட்ட எங்களை
சென்று கயிலை நண்ணி நீயும்
சீர்ப்படுத்த முந்துவாய்

உந்தன் உரை கேட்டு ஈசன்
உளம் மாற மறுத்திடில்
நன்றி கெட்ட தமிழர் சாதி
நடுத்தெருவில் அலையட்டும்

குன்றில் நின்று நீயும் ஆடி
குதூகலித்துப் பார்த்திட
கொன்று கொன்று தமிழர் சாதி
கொடி இழந்து மாழ்வதோ

-விகடகவி.

### நெஞ்சிலுறை நல்லைப்பதி முருகன்

நல்லைப்பதி நீடுபுகழ் நல்ல நல்லை ஆதீனமும்
நாவன்மை மிக்கவுயர் நாவலர்க்கு மண்டபமும்
வல்லமைசேர் வேல்முருகன் வடிவழகும் அருளும்
வித்துவமும் வேரூன்றி விளைந்திருக்க வழிசமைக்கும்
பல்துறைசார் பாங்கும் பக்குவமும் சேர்ந்தேவர
பக்தியுடன் நாற்றிசையும் சுற்றிவரும் பக்தருக்கு
நல்லைவாழ் முருகனவன் நீன்றகன்ற வேலொளியால்
நாளுமே பெருவாழ்வு பெருகவருள் தாராயோ.

- அல்லையூர் கே.ஆர்.திருத்துவராஜா.

# அமைச்சர் கதிர்காமரின் வாழ்வில்....

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி பிறந்தார்.

தமிழரான அவர் கண்டியில் உள்ள டிரினிடி கல்லூரியில் கற்றார். அப்போது சிறந்த மாணவருக்கான தங்கப் பதக்கம் பெற்றவர். 1953 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பில் சிறப்புப் பட்டம் பெற்றார். இலங்கை சட்டக் கல்லூரியில் வழக்கறிஞர்களுக்கான இடைநிலைத் தேர்வில் முதலிடம் பெற்றார். அவர் 1955 ஆம் ஆண்டில் இலங்கையில் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்டார். இங்கிலாந்தில் படித்து 1958 கலாநிதி பட்டம் பெற்றார். 1959 இல் 'ஒக்ஸ்போட்' பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்தார்.

'ஒக்ஸ்பேட்' பல்கலைக்கழகத்தில்



படித்து 1960 இல் பட்டம் பெற்றார். 2001 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ கலாநிதி பட்டம் வழங்கியது.

லண்டன் பிரிவியூ கவுன்சிலில் 1955 முதல் 1960 வரை வழக்கறிஞராகப் பணியாற்றிய அவர், 1960 முதல் 1971 ஆம் ஆண்டு வரை இலங்கையில் வழக்கறிஞராக இருந்தார். 1974 இல் ஜெனிவாவில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆலோசராக இருந்தார். 1991 இல் இலங்கை ஜனாதிபதியின் சட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டார். இலங்கையில் சட்ட சீரமைப்பு நிபுணர் குழுவின் ஆலோசகர்களில் ஒருவராகவும் இருந்தார்.

1963 ஆம் ஆண்டு வியட்நாமில் கத்தோலிக்க, பௌத்த மதத்தவர்களிடையே ஏற்பட்ட பிரச்சினை குறித்து ஆராய்வதற்காக சர்வதேச மனித உரிமை குழுவினால் அமைக்கப்பட்ட குழுவின் ஆணையராக இருந்தார். சட்டம் குறித்து பல்வேறு சர்வதேச சஞ்சிகைகளில் ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

1994 ஆம் ஆண்டு முதல் 2001 வரை இலங்கையின் வெளியுறவு அமைச்சராக இருந்தார். 1998 ஆம் ஆண்டிலிருந்து 2001 வரை சார்க் அமைப்பின் அமைச்சர்கள் குழுவின் தலைவராக இருந்தார். 2002 முதல் 2004 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி சந்திரிகாவின் வெளியுறவு விவகார மூத்த ஆலோசகராக இருந்தார்.

2004 ஆம் ஆண்டில் சிறிது காலம் தகவல் மற்றும் தொலைதகவல் தொடர்புத் துறை அமைச்சராக இருந்தார். இறக்கும்போது அவர் வெளியுறவுத் துறை அமைச்சராக பதவி வகித்தார்.

1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அரசியலில் பிரவேசித்த இவர், அந்த அரசில் வெளி விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவிற்கு மிக நெருக்கமான அமைச்சராக விளங்கிய இவர், அவரது முக்கிய ஆலோசகராகவும் விளங்கினார். விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் தடை செய்தமைக்கு முக்கிய காரணகர்த்தாவாக இவர் விளங்கினார்.

இவரது கொலைச் சம்பவத்தையடுத்து நாட்டில் அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் நேற்று அதிகாலை வெளியிடப்பட்டது. பொதுஜன முன்னணி முன்னர் ஆட்சியிலிருந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்த அவசர காலச் சட்டம் நான்கு வருடங்களுக்கு முன்னர் செயலிழந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புப் படைகள் அதிகபட்ச உசார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்திருக்கின்றார். அத்துடன், குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக 10 விசேட பொலீஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

## உதயவாக்கு

முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள் - கட்டளையிடும் பதவி பின்னர் உனக்குத் தானாகவே வந்து சேரும். -சுவாமி விவேகானந்தர்.

## நாளை

ஆடி 30
திங்கட்கிழமை
15.08.2005
திதி: தசமி
நண்பகல் 12.00 வரை
நட்சத்திரம்: கேட்டை
பிற்பகல்: 03.04 வரை
சுபநேரம்: 12.05 - 01.35
ராகுகாலம்: 07.35 - 09.05
(யாவும் பழைய நேரப்படி)

## மஹா சாஸ்தா பிரதிஷ்டா விதி நூல் வெளியீட்டு விழா



இடம்: கோண்டாவில் ஸ்ரீ சபரீச ஐயப்பன் ஆலய மண்டபம்
காலம்: இன்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 2.30 மணி *(புதிய நேரம்)*
தலைமை: அதிவந்தனீய சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்
(இந்துமத குருபீடாதிபதி)
நிகழ்ச்சிகள்: மங்கல விளக்கேற்றல், வேதபாராயணம், திருமுறை ஓதல்
வரவேற்புரை: பிரம்மஸ்ரீ ஹரிஹரசுதசர்மா
(ஆதீனகர்த்தா - ஐயப்பன் தேவஸ்தானம், கோண்டாவில்)
ஆசியுரை: சிவஸ்ரீ நா யோகீஸ்வரக் குருக்கள்
(அத்தியடிப் பிள்ளையார் கோயில்)
சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்
(அதிபர் - தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)
தலைமையுரை: இந்துமத குருபீடாதிபதி அவர்கள்
வெளியீட்டுரை: பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (B.A.(Hons)
(கோப்பாய் சிவம்)
ஆய்வுரை: பிரம்மஸ்ரீ சி.நித்தியானந்தக் குருக்கள்
(சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோயில்)
நன்றியுரை: சிவஸ்ரீ சோ.வரதராஜக் குருக்கள் (புளியங்கூடல்)

**நூற்பிரதி ஒன்றின் விலை ரூபா 250/-**

74/1, பலாலி வீதி, சிவஸ்ரீ சோ.வரதராஜக் குருக்கள்.
திருநெல்வேலி. (38837)(26-14)

## 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 11 - 01 - 1992 |  | 14 - 07 - 2005 |

### செல்வன் நாகேந்திரம் மிதுலன் (மிது)

(யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் ஆண்டு - 9)

எத்திக்கும் ஒளிவீசும் - உன்
முத்தான முகமெங்கே?
சொல்லாமல் சென்றாயே!
சொல்லியழ வார்த்தையில்லை
எங்கு சென்றாய் எம்மைவிட்டு
ஏங்குதையா எம் நெஞ்சு!
எந்நாளும் உனை மறவோம்
எம் நெஞ்சில் நீ வாழ்வாய்!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

ஆவளை,
சண்டிலிப்பாய் வடக்கு. - குடும்பத்தினர்.

(38841)(26-14)

## A/L பௌதிகவியல், இணைந்த கணிதம்

பல ஆண்டுகளாக மேற்படி பாடங்களைக் கற்பித்துவரும் ஆசிரியரினால் முழுப்பாடத்திட்டமும் குறுகிய காலத்தில் ஏராளமான பயிற்சிகளுடன் (20 வருட வினாத்தாள் உட்பட) மிகச் சிறப்பாக முடித்துக்கொடுக்கப்படும். பயிற்சிகள் வழங்கப்பட்டுத் திருத்திக்கொடுக்கப்படும். M.C.Q. ஆயிரக்கணக்கான விளக்க விடைகளுடன் செய்துகொடுக்கப்படும். பெற்றோர் தொடர்பு விரும்பத்தக்கது. (38845)

T.P.No. 077 6648751.
R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey) Dip.in Ed.
17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### திருமதி மகேஸ்வரி சிவலிங்கம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவலிங்கம் அவர்கள் நேற்று (13-08-2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் மகாதேவா (லண்டன்), முருகவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதா, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மாவதி, கௌரீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மறோசன், விதுஷன், கஜிந்தன், நவசங்கரி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-08-2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மூத்தவிநாயகர் கோவிலடி, மகன்மார் -
ஆனைக்கோட்டை. தேவா (லண்டன்),
(38856)(46-14-26) வேல்.

## சகாயபுரத்தில் இன்று புகைத்தல் குறித்த ஆய்வு

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் மாதகல், சகாயபுரம் கிராமத்தில் போதைப்பொருள் புகைத்தல் தொடர்பான ஆய்வு ஒன்றை நடத்தவுள்ளது. இந்த ஆய்வு இன்று ஞாயிற்றுக்கிழமை கிராமத்தில் உள்ள வீடுகள்தோறும் செல்லும் சம்மேளனத் தொண்டர்களால் நடத்தப்படவுள்ளதென சம்மேளனத்தின் செயலாளர் செ.குமாரசிங்கம் தெரிவித்துள்ளார். (எ-135-202)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்தம்பி தெட்சணாமூர்த்தி



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி தெட்சணாமூர்த்தி 13-08-2005 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லதம்பி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் சிவகிரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வணஸ்பதி மற்றும் காண்டீபன், கரிகாலன், தயான் காலஞ்சென்ற கல்பனா மற்றும் கவியரசன் (கவி களஞ்சிய உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-08-2005) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கேணியடி, தகவல்:
கொக்குவில். கவியரசன் (கவி - மகன்)
(38847)(46-14-26) (கவி களஞ்சிய உரிமையாளர்).

### திருமதி ஞானப்பிரகாசம் திரேசம்மா



போயிட்டி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் திரேசம்மா (பெரியபிள்ளை) 12-08-2005 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஞானப்பிரகாசத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (15-08-2005) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற்று, போயிட்டி லூர்து மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பூதவுடல் போயிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

போயிட்டி தகவல்:
இளவாலை. ஞானப்பிரகாசம்
T.P.No. 07776120466. (பாக்கியம் - கணவர்)

## நெஞ்சை விட்டகலா நினைவுகளுடன்

### ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 - 12 - 1927 |  | 24 - 08 - 2004 |

திருமதி
**சண்முகநாதன் சரஸ்வதி**

### 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 - 12 - 1914 |  | 16 - 08 - 1990 |

அமரர்
**பொன்னம்பலம் சண்முகநாதன்**

பெற்றெடுத்த நாள் முதலாய் பிரியமுடன் எமை வளர்த்து
அன்போடும் பண்போடும் அரவணைத்து அறிவூட்டி
எம்மை எல்லாம் பிரியமுடன் வழிநடத்தி நின்றீரே
எப்பிறவி எடுத்தாலும் உம் வயிற்றில் பிறந்திட
வரம் ஒன்று வேண்டுமென்று இறைவனிடம் வேண்டுகின்றோம்.


15, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (38797)(51-11-19)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கொலம்பியாவால் ஏற்பட்ட தோல்வியை டிஸ்கவரியினால் ஈடுசெய்தது 'நாஸா'

அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளி ஆய்வு மையம் கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி விண்ணில் செலுத்திய 'டிஸ்கவரி' விண்கலம் பலத்த எதிர்பார்ப்புக்கும் அச்சத்துக்கும் மத்தியில் எவ்வித பிரச்சினைகளுமின்றிக் கடந்த 9 ஆம் திகதி பத்திரமாகத் தரையிறங்கியது.

இதனையடுத்து, ஒரு பெரிய சவாலை எதிர்



விண்ணில் ஏவப்படும் 'டிஸ்கவரி'

கொண்டு சாதனை ஒன்றை நிகழ்த்திய வெற்றிக்களிப்பில் 'நாஸா' தலையை நிமிர்த்தி நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றது. 'டிஸ்கவரி' ஆபத்தின்றித் தரையிறங்குமா என ஒருவாரகாலமாக நிலவிய அச்சம் கடந்த 9ஆம் திகதி மாலையுடன் தீர்ந்தது. அதனை எதுவித ஆபத்துமின்றித் தரையிறக்கிவிடவேண்டுமென்ற எண்ணம்தான் 'நாஸா' விஞ்ஞானிகளின் மனதில் சூறாவளியாகச் சுழன்றது.

விண்வெளிக்கு விண்கலத்தைச் செலுத்துவதில் கடந்த 22 ஆண்டுகளாகக் கோலோச்சிக் கொண்டிருக்கிறது அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளி ஆய்வு மையம். ஆயினும், கடந்த ஜூலை மாதம் 26 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட 'டிஸ்கவரி' விடயத்தில் அதன் விஞ்ஞானிகளால் அலட்சியமாக இருந்துவிட முடியவில்லை. விண்வெளிக்கு இப்போதுதான் முதன் முதலில் ஓடத்தைச் செலுத்திய பரபரப்பு. பதற்றம் அதற்குக் காரணம் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் 'கொலம்பியா' விண்கலத்துக்கு ஏற்பட்ட பரிதாபகதி.

கடந்த 2003 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 'நாஸா' விண்வெளிக்கு அனுப்பிய 'கொலம்பியா' விண்கலம் விண்வெளியில் பல வெற்றிகரமான சோதனைகளை நடத்தி அது பற்றிய பல்வேறு புதிய தகவல்களுடனும் சான்றுகளுடனும் 16 நாள்களின் பின்னர் பூமிக்குத் திரும்பிக்கொண்டிருந்தவேளையில் நடுவானில் வெடித்துச் சிதறியது. அதில் பயணம் செய்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு வீரர்களும் பலியானார்கள்.

கொலம்பியாவை விண்ணில் ஏவியபோது அதன் எரிபொருள் கலனில் இருந்து சில பாகங்கள் கழன்று வீழ்ந்தன. கலத்தின் பாதுகாப்பு ஓடு



விண்கலத்தில் பழுதைச் சீர்செய்யும் வீரர்

களை அவை சேதப்படுத்தின. ஆயினும், 'நாஸா' விஞ்ஞானிகள் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. 'கொலம்பியா' விண்வெளியில் இருந்து வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது சேதம் ஏற்பட்ட பகுதியைக் கடும் வெப்பம் தாக்கியது. இதனால் 'கொலம்பியா' வெடித்து சுக்குநூறானது.

இந்தத் துயரச் சம்பவத்துக்குப் பின்னர் தான் 'நாஸா' விஞ்ஞானிகளின் மனதைப் பீதி தொற்றிக்கொண்டது. இதன் பின்னர் விண்கலத்தின் பாதுகாப்பில் தீவிர கவனம் செலுத்தினார்கள். விண்கலம் ஏவப்படும்போது அதில் சேதம் ஏற்பட்டாலும் அதனை விண்வெளியில் வைத்தே சீர்செய்யும் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்தினார்கள். விண்கலத்தின் பாதுகாப்பு ஆய்வுக்காக மட்டும் பல ஆயிரம் கோடி ரூபாய்களைச் செலவழித்தனர்.

'கொலம்பியா' வெடித்துச் சிதறிய பிறகு கடந்த மாதம் 26ஆம் திகதி புளோரிடாவில் உள்ள 'கெனடி' விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து 'டிஸ்கவரி' விண்கலத்தை 'நாஸா' விஞ்ஞானிகள் முதல்முறையாகச் செலுத்தினார்கள். ஆயினும், கொலம்பியாவில் ஏற்பட்டது போன்ற சேதம் 'டிஸ்கவரி'யிலும் ஏற்பட்டது. இதனால், 'நாஸா' விஞ்ஞானிகளின் நிம்மதி பறிபோனது.


கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது. 'டிஸ்கவரி'யில் சென்ற விண்வெளி வீரர்களில் இருவர் விண்வெளியில் மூன்று முறை நடந்தனர். மூன்றாவது முறையாக நடக்கும்போது டிஸ்கவரியின் வயிற்றுப் பகுதியில் வெப்பப் பாதுகாப்பு ஓடுகளில் ஏற்பட்ட சேதத்தைச் சீர்செய்தனர். இதனால், டிஸ்கவரிக்கு ஆபத்து ஏற்படாது என விஞ்ஞானிகள் நம்பினார்கள். இருப்பினும், அவர்கள் மனதில் ஓர் இனம்புரியாத அச்சம். 'டிஸ்கவரி' வெற்றிகரமாகப் பூமிக்குத் திரும்புவதற்கு எல்லா விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

'டிஸ்கவரி' விண்ணில் ஏவப்பட்டபோது 12 நாள்களில் அது பூமிக்குத் திரும்புவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும், சர்வதேச

## அமெ.விண்வெளி ஆய்வில் மற்றுமொரு படிக்கல் இது

விண்வெளி நிலையத்தில் ஏற்கனவே தங்கியுள்ள வீரர்களுக்கு உதவுவதற்காக அதன் பயணம் 13 நாள்களாக மாற்றப்பட்டது.

இதனையடுத்து, கடந்த 8ஆம் திகதி 'டிஸ்கவரி' பூமிக்குத் திரும்புவதற்கு நேரம் குறிக்கப்பட்டது. தரையிறங்க ஏதுவாகக் கடந்த 6 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்தில்



எட்வேர்ட் விமானத் தளத்தில் தரையிறங்கி நிற்கும் 'டிஸ்கவரி'

இருந்து அது பிரிந்தது. ஆயினும், கெனடி விண்வெளி ஆய்வு மையம் அமைந்துள்ள பகுதியில் மோசமான காலநிலை நிலவியது. ஓடம் தரையிறங்க இது இடையூறாக அமைந்தது. கொலம்பியாவில் பட்ட அனுபவம் நாஸா விஞ்ஞானிகளுக்கு ஒருபாடமாக அமைந்ததால் இப்படியானதொரு சூழலில் விண்கலத்தைத் தரையிறக்கினால் அசம்பாவிதம் ஏதும் ஏற்படலாம் என விஞ்ஞானிகள் அஞ்சினார்கள்.

விண்கலம் தரையிறங்கும்போது வானம் தெளிவாக இருக்கவேண்டும். பலத்த காற்றோ, மழையோ, மின்னலோ இருக்கக்கூடாது. விண்கலத்தை இயக்கும் ஓட்டிக்கும் கட்டளை அதிகாரிக்கும் ஓடு பாதையைச் சுற்றி ஐந்து கிலோமீற்றர் வரையான பிரதேசம் தெளிவாகப் பார்க்கக்கூடியவாறான வானிலை இருக்கவேண்டும்.

ஆனால், கெனடி விண்வெளி ஆய்வு மையப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி கடுமையான மேக மூட்டம் நிலவியது. இதனால், பலப்பரீட்சையில் ஈடுபட 'நாஸா' விரும்பவில்லை. விண்கலத்தைத் தரையிறக்கும் திட்டத்தை ரத்துச்செய்து ஒருநாள் ஒத்திவைத்தனர். இதன்பின்னர் கடந்த 9 ஆம் திகதி 'டிஸ்கவரி'யைத் தரையிறக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

புளோரிடாவில் தொடர்ந்து மோசமான வானிலை நிலவினால் கலிபோர்னியாவிலுள்ள எட்வேட் விமானப் படைத்தளத்தில் விண்கலத்தைத் தரையிறக்குவதென முடிவுசெய்யப்பட்டது. அங்கும் வானிலை கைகொடுக்காவிட்டால் நியூ மெக்சிக்கோவில் உள்ள 'ஒயிட் சான்ட்' விமானத் தளத்தில் தரையிறக்கத் திட்டமிடப்பட்டது. இதற்காக இந்த விமானத் தளங்களின் ஓடுபாதைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

விண்கலம் புளோரிடாவில் தரையிறங்குவதற்குப் பிற்பகல் 2.17 மணிக்கு முதல் முயற்சியும் மாலை 4.13 மணிக்கு இரண்டாவது முயற்சியும் மேற்கொள்ளமுடிவானது. அதுவும் முடியாமற்போனால் மாலை 5.42 மணிக்குக் கலிபோர்னியாவில் தரையிறக்கத் தீர்மானிக்கப்பட்டது.

எதிர்பார்த்தது போலவே புளோரிடாவில் வானிலை தொடர்ந்து மோசமாக இருந்தது. இதனால் அங்கு தரையிறக்குவதற்கான இரண்டு முயற்சிகளும் கைவிடப்பட்டன. விஞ்ஞானிகள் சற்றும் தளராமல் அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொண்டனர். கலிபோர்னியாவில் வானிலை மிகவும் தெளிவாக இருந்தது. இலங்கை நேரப்படி மாலை 6.12 மணிக்கு அங்கு தரையிறங்கும்படி டிஸ்கவரியின் கட்டளை அதிகாரி எலின் கொலின்ஸுக்கு நாஸா விஞ்ஞானிகள் உத்தரவிட்டனர். கலிபோர்னியாவில் தரையிறங்கும்படி நாஸாவிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோது பூமி மட்டத்திலிருந்து 330 கிலோமீற்றர் உயரத்தில் விண்வெளியில் டிஸ்கவரி மிதந்துகொண்டிருந்தது. இந்தியப் பெருங்கடலில் உள்ள மடகாஸ்கார் தீவுக்குமேல் நான்கு லட்சம் அடி உயரத்தில் இருந்தபோது விண்கலத்தின் இரண்டு இயந்திரங்களை அதன் கட்டளை அதிகாரி இயக்கினார். இதனையடுத்து பூமியை நோக்கி டிஸ்கவரி இறங்கியது. வளிமண்டலத்தினுள் மணிக்கு 27 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் அது ஊடுருவியது.

வளிமண்டலத்தில் உள்ள வெப்பத் தாக்குதலில் இருந்து தப்பிக்க விண்கலம் பல கோணங்களில் திருப்பப்பட்டது. மாலை 5.40 மணிக்கு விண்கலத்தைக் கடும் வெப்பம் கவ்வியது. வெப்பத்தை அதன் வயிற்றுப் பகுதி தாங்கியது. எதுவித ஆபத்தும் இல்லாமல் அப்பகுதியைக் கடந்து வந்தது. கலிபோர்னியாவை நெருங்கியபோது வேகம் மணிக்கு 322 கிலோமீற்றராகக் குறைக்கப்பட்டது. இலங்கை நேரப்படி சரியாக மாலை 6.12 மணிக்கு கலிபோர்னியாவின் எட்வேர்ட் விமானத் தளத்தில் பெரும் முழக்கத்துடன் 'டிஸ்கவரி' வெற்றிகரமாகத் தரையிறங்கியது. எட்வேர்ட் விமானத் தளத்தின் 22ஆம் இலக்க ஓடுபாதையில் 'டிஸ்கவரி' நிதானமாக ஓடியது. கலத்தின் வேகத்தைக் குறைப்பதற்காக அதில் இணைக்கப்பட்டிருந்த பலூன்கள் விரிக்கப்பட்டன.

விண்கலம் தனது விண்வெளிப் பயணத்தை முடித்துத் தரைக்கு வந்துநின்றபோது அமெரிக்காவில் அதிகாலை 5.11 மணி. விண்கலம் தரையிறங்கிய பின் அதில் பயணம் செய்த 7 வீரர்களும் ஒரு மணி நேரத்துக்கு மேலாக உள்ளேயே இருந்தனர். பின்னர் அவர்கள் அணிந்திருந்த விண்வெளி வீரர்களுக்கான செம்மஞ்சள் நிற உடையைக் களையும்படி பணிப்புரை விடுக்கப்பட்டது. அதன்படி, அந்த உடையைக் களைந்து வேறோர் உடையை அணிந்தவாறு விண்வெளி வீரர்கள் அனைவரும் இறங்கி வந்தனர். அவர்களுக்கு அங்கு பலத்த வரவேற்பளிக்கப்பட்டது.

விண்வெளியில் சரியாக 13 நாள்கள், 11 மணி நேரம் டிஸ்கவரி இருந்தது. டிஸ்கவரி கடந்த 26 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. 28 ஆம் திகதி சர்வதேச விண்வெளி நிலையத்தை அது சென்று சேர்ந்தது. ஒன்பது நாள்கள் அதனுடன் இணைந்திருந்தது. சர்வதேச விண்வெளி நிலையத்துக்குத் தேவையான ஆய்வுக்கருவிகளும் அதில் உள்ள இரண்டு வீரர்களுக்கு உணவு மற்றும் குடிதண்ணீரும் ஓடத்தில் கொண்டு செல்லப்பட்டன. அதன் மொத்த எடை 15 தொன், 'டிஸ்கவரி'யில் சென்ற ஏழு வீரர்களும் இப்பொருள்களைச் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மாற்றினர்.

சர்வதேச நிலையத்தில் கடந்த இரண்டரை ஆண்டுகளாகப் பயன்படுத்திப் போடப்பட்டு இருந்த 12 தொன் எடையுள்ள கருவிகள் மற்றும் குப்பைகளை டிஸ்கவரி கொண்டு வந்துள்



விண்கலத்திலிருந்து வீரர்கள் இறங்கி வருகின்றனர்.

ளது. தனது பயணத்தின்போது பூமியின் சுற்றுப் பாதையில் 219 முறை 'டிஸ்கவரி' சுற்றியது. 90 லட்சத்து 33 ஆயிரம் கிலோமீற்றர் பயணித்தது.

கலிபோர்னியாவில் 'டிஸ்கவரி'யைத் தரையிறக்கியதால் 'நாஸா'வுக்கு இலங்கை நாணயப்படி 9 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

புளோரிடா கெனடி விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து 'டிஸ்கவரி'யைச் செலுத்திய 'நாஸா' விஞ்ஞானிகள், இதே ஆய்வு மையத்தில் விண்கலம் தரையிறங்க வேண்டும் என்று விரும்பினர். வானிலை இடம்கொடுக்காததால், கலிபோர்னியாவில் தரையிறக்கினர்.

கலிபோர்னியாவில் இருந்து கெனடி விண்வெளி ஆய்வு மையத்துக்கு 'டிஸ்கவரி'யை மீண்டும் அவர்கள் எடுத்துச்செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. 100 தொன் எடை கொண்ட 'டிஸ்கவரி' போயிங்-747 விமானத்தின் மூலம் புளோரிடாவுக்குக் கொண்டுசெல்லப்படவுள்ளது. இதற்கு 9 கோடி ரூபா செலவாகும். ஒரு வாரத்தில் இது ஈடுசெய்யப்படும் என்று விஞ்ஞானிகள் கூறினர்.

### ஆன்

பல நாள்கள் பதற்றத்துக்குப் பின், 'டிஸ்கவரி' வெற்றிகரமாகத் தரையிறங்கிய மகிழ்ச்சியில் நாஸா விஞ்ஞானிகள் திளைத்தனர்.

கலிபோர்னியாவில் 'டிஸ்கவரி' வெற்றிகரமாகத் தரையிறங்கியதும் 'நாஸா' விஞ்ஞானிகள் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். கொலம்பியா சம்பவத்துக்குப் பின் அதேபோன்ற சிக்கல் டிஸ்கவரியில் ஏற்பட்டதால் டிஸ்கவரியின் வருகையை உலகமே ஆர்வத்துடன் எதிர்பார்த்து இருந்தது.

விண்வெளியில் இருந்து சிறிய பந்து வடிவத்தில் விண்கலம் பயணித்து வருவது நாஸாவில் இருந்து நேரடியாகக் காட்டப்பட்டது. கலிபோர்னியாவில் அது வெற்றிகரமாகத் தரையிறங்கியபோது அதை தொலைக்காட்சியில் பார்த்த மக்கள் மகிழ்ச்சியினால் ஆர்ப்பரித்தனர்.



விண்வெளியில் நடக்கும் வீரர் ஒருவர்.

கலிபோர்னியாவில் தரையிறங்கிய டிஸ்கவரியின் வீரர்களை அதன் திட்ட அதிகாரி பாராட்டினர். வீரர்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்த அவர் உண்மையான, நேர்த்தியான பயணத்துக்காகப் பாராட்டுகின்றோம்; வீரர்களே உங்களை வரவேற்கின்றோம் - என்றார்.

டிஸ்கவரியை வெற்றிகரமாகத் தரையிறக்கியதன் மூலம் கொலம்பியா விபத்தினால் ஏற்பட்டிருந்த தலைகுனிவிலிருந்து நாஸா மீண்டிருக்கின்றது. அத்துடன், விண்வெளி ஆராய்ச்சிப் பணிகளில்தான் இன்னும் முன்னிலை வகிப்பதை அது மீண்டும் உறுதிப்படுத்திக் கொண்டது. உலகில் ஒரு வல்லரசாக விளங்கும் தான் எந்த வகையிலும் தோல்வியைக் கண்டு சளைத்தவர் அல்லர் என்பதை நிரூபித்திருக்கின்றது.

அந்த இறுமாப்புடன் விண்வெளிக்கு மேலும் விண்கலங்களை அனுப்புவதற்கு அது திட்டமிட்டுள்ளது. எவற்றிலும் முந்தி விழுந்து கொண்டு செயற்படும் அமெரிக்காவின் இந்தக் கூற்று ஆச்சரியப்படத்தக்கதல்ல. ஆயினும், கொலம்பியாவை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அதன் விண்வெளி தொடர்பான நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் சிறந்தது என்றே கூற வேண்டும். ✱

## கணபதி ஜோதிட நிலையம்

பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)(26.14.19)



## பெண்பிள்ளைகள் தேவை

எமது மிக்சர் கம்பனியில் மிக்சர் பொதி செய்வதற்கு பெண்பிள்ளைகள் தேவை. நேரில்வரவும். தொடர்புகளுக்கு:

**நயிலாஸ்**
**கொமினிக்கேஷன்,**
நெல்லண்டை வீதி,
தும்பளை, பருத்தித்துறை.
(38813) 0777 114405.



## St.JOHN'S COLLEGE JAFFNA

*ANNUAL PRIZE GIVING - 2005*

Friday 19th August 2005
at 10 a.m.

CHIEF GUEST
*Dr.Devanesan Nesiah*
&
*Mrs. Anita Nesiah*

CHAIRMAN
Ven. S .P. Nesakumar
Archdeacon of Jaffna.

Parents, Old Boys & Well - Wishers are cordially invited

(சி-44615)(26.14.19) Principal, Staff & Students.



## TEACHER WANTED

To teach energetic European child the following subjects:
❖ **English** ❖ **Mathematics** ❖ **Science**
Using UK curricular materials and methods
Must have the following characteristics:
❖ Patience ❖ Good spoken and written English
❖ Commitment ❖ Competence in above subjects
❖ 'Learning is fun' approach
Five hours/week in home environment -fees to be arranged

Please contact:
**Adi Walker**
**021 222 3934-evenings after 6 p.m.**


## கமநல சேவை நிலையம் ஊடாக தென்னங்கன்றுகள் விநியோகம்

வலிகாமம்தெற்கு, ஓக.14

நல்லூர் கமநல சேவை நிலையத்தின் ஊடாக நல்ல இன தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி எஸ்.சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

நல்ல இன தென்னங்கன்றுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் கமநல சேவை நிலையத்திற்கு வருகைதந்து தென்னங்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மானிய விலை அடிப்படையில் ஒவ்வொரு தென்னங்கன்றும் 25ரூபா விலையில் பெற்றுக்கொள்ளலாம் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(த-152)

## மிதிவெடி செயற்பாட்டு வாரம்

யாழ்ப்பாணம் ஓக.14

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் மிதிவெடி செயற்பாட்டு வார ஆரம்ப விழாவை நடத்தவுள்ளது.

மேற்படி நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார்.

(9-204)


## ஒளிக்கலை ஒன்றியம்

வலிகாமப் பிரதேச வீடியோ, புகைப்பட அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 16-08-2005 அன்று பிற்பகல் 3மணிக்கு (தாயக நேரம்) இல.43, பிரப்பங்குளம், கே.கே.எஸ். வீதியில் உள்ள ஒளிக்கலை ஒன்றியத்தில் மாதாந்தக் கூட்டம் நடைபெறும். அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இத்துறையின் வளர்ச்சி இத்துறை சார்ந்தோர் வளர்ச்சியினூடாக தேசத்தின் வளர்ச்சி*

செயலாளர்,
ஒளிக்கலை ஒன்றியம்,
யாழ்.மாவட்டம்.

(38834)(26.14.19)



## VACANCIES IN A GLOBAL MNC

Our client is a part of a Global MNC and in furtherance to their business objective they seek talented professionals to join their pursuit of excellence. We invite applications for:

**Senior Sales Professionals**
With a good educational background preferably a Graduate in Business Administration and a proven track record.

Talent and experience requested.

- 6 – 10 years in sales experience with a reputed organization with a minimum of 4 years experience as a Sales Manager, leading a team.
- Proven ability to handle 7 – 8 retail outlet operations independently and resolve day to day regular issues.
- Proven ability in management of resources and business relationships, contributing to overall business success.
- Proven ability in sales planning, reporting and analysis, and exposure to computer systems.
- Proven track record in achieving sales targets and executing successful sales strategies.
- **Proven ability in managing and developing a successful sales team.**

The job entails travel, and strong interpersonal and analytical skills are expected of the incumbent
An attractive compensation package with a successful career awaits you

Please apply in full confidence by email / post indicating the position in the subject line, or on the top left corner of the envelope.

MA FOI

Selvam Sundaram
Ma Foi Management Consultants Lanka Pvt. Limited
Floor 7, BoC Merchant Towers ,
28, St. Michael's Road, Colombo 03.
Tel:- 2392269 / 4736619 / 4736337
**E-mail :- selvam@mafoi.com**

Thank you for your interest. Only short-listed candidates would be notified.



## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ஸ்ரீ பாலகங்காதர சாஸ்திரிகள்

கல்வி. வியாபாரம். திருமணப் பொருத்தம். கணவன்-மனைவி உறவு. அரசியல் பிரச்சினைகள். வீடு - கடை வாஸ்து. வெளிநாட்டுப் பிரயாணம். பிள்ளைகள் பாக்கியம். ஆயுள்ரேகை. எண்கணிதம்.

கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

**அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,**
**இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி),**
**யாழ்ப்பாணம்.** T.P.: 021 2225680, 0776627373.



இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- **ROYAL** INDUSTRIES
COLOMBO 12
☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப்பூங்கா
266, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
T.P.: 021 222 2567.
(C-44191)



## BBS

ஆகஸ்ட் 19 தொடக்கம்

மானிப்பாய் ஆலடிச்சந்தியில்....

ஆங்கிலம் முற்றாகத் தெரியாத வளர்ந்தோருக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி

காலம் 6 மாதம்

ஆங்கில மொழி மூலம் பாலர் பாடசாலை பாட விதானங்கள்

PLAY GROUP [2+ முதல் 3+ வரை]
MONTESSORI SCHOOL [3+ முதல் 4+ வரை]
PRE-SCHOOL [4+ முதல் 5+ வரை]

விசேட அம்சங்கள்
- ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை
- தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

சிறார்களுக்கான ஆங்கிலப் பாட நெறிகள்

5+ to 14+ சிறார்களுக்கு
- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

**Year 1-5 English Medium**

*Week End Classes* நடாத்தப்படும்.

மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.

**PRE - FOUNDATION**

ஆங்கிலம் முற்றாக தெரியாத 5 வயது தொடக்கம் 8வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கான விசேட ஆங்கில பாடநெறி காலம் 6 மாதம்

- Diploma in English
- Certificate in English
- IELTS

**BRITISH BUSINESS SCHOOL**

| | | | |
|---|---|---|---|
| இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி. | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,மானிப்பாய். |

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL





## HOME FOR RENT ARIYALAI - AVAILABLE SEPTEMBER 1

LARGE RENOVATED BUNGALOW, NEAR SITHI VINAYAGAR TEMPLE, 15 MINUTES TO JAFFNA TOWN, MODERN FACILITIES IN 10 LARCHAM PROPERTY
IDEAL FOR NGO'S
CONTACT # 0776435611
(38825)



## தேவை

*யாழ்.நகரிலுள்ள ஆங்கில மருந்தகத்திற்கு விற்பனை உதவியாளர் தேவை. விண்ணப்பதாரர் க.பொ.த.சாதாரண தரம் அல்லது உயர்தரம் (ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட) சித்தியுடன் அனுபவமுள்ளவராகவும் யாழ். நகரின் அண்மித்த பகுதிகளில் வசிப்பவராகவுமிருத்தல் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும்.*

விளம்பர இல: 2669,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(38811)(26-32-14-19)

# சர்வதேசத் தடையை மீறி ஈரான் யுரேனிய செறிவூட்டலை ஆரம்பித்தது

**உலக வலம்**
**மேனா**

சர்வதேச அணுசக்தி முகவர் அமைப்பினால் போடப்பட்டிருந்த தடை முத்திரைகளை உடைத்துக்கொண்டு ஈரானிய அணு நிபுணர்கள் யுரேனியத்தை உருமாற்றவும் செறிவூட்டவும் தொடங்கியுள்ளனர். இந்த நடவடிக்கை மூலம் ஈரான் ஐரோப்பிய நாடுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறியிருப்பதுடன் அணு ஆயுத உற்பத்தியிலும் இறங்கக்கூடும் என்று ஐ.நா. வட்டாரங்களில் பேசப்படுகின்றது.



இஸ்பஹான் அணு ஆலையில் ஈரானிய தொழில்நுட்பவியலாளர்கள் யுரேனியம் தயாரிப்பு - செறிவூட்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஈரானின் இந்தச் செயற்பாடு அதன்மீது ஐ.நா. பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடையை விதிப்பதற்கு வழிவகுக்கக்கூடும் என்றும் தெரிகின்றது. ஈரான் முழு அளவில் யுரேனிய செறிவாக்கத்தில் இறங்குவதை ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் கடுமையாக எதிர்த்துவருகின்றன. மத்திய கிழக்கில் ஈரான் ஓர் அணு வல்லரசாக மாறுவதற்கு இது இடமளித்துவிட்டக்கூடாது என்று இவர்கள் கவலையடைந்துள்ளனர்.

ஈரானின் இஸ்பஹான் அணு உலையில் தடைசெய்யப்பட்டு முத்திரையிடப்பட்டிருந்த பகுதியில் பணியாளர்கள் முத்திரைகளை உடைத்து யுரேனிய எஃகு அல்ல 'மஞ்சள் கட்டி'களை வாயுக்களாக மாற்றுகிறார்கள். பின்னர் இவை செறிவூட்டிய யுரேனியமாக மாற்றப்படும். இதிலிருந்து அணு எரிபொருள் சக்தியாக அல்லது உயர் மட்ட சுத்திகரிப்பின் பின்னர் அணுகுண்டுக்குத் தேவையான வெடிபொருளாக மாற்றப்படும்.

## அணு ஆயுத பரவலுக்கு வழிவகுக்கும் அபாயம்

அணுஆயுதப் பரவலை சர்வதேச மட்டத்தில் கட்டுப்படுத்தி முடிவுகட்டுவதற்கான முயற்சிகள் ஐ.நா. மட்டத்திலும் செல்வாக்குப் படைத்த நாடுகள் மட்டத்திலும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் அதேவேளை, அணுஆயுதத் தயாரிப்புக்கு வழிகோலக்கூடிய முயற்சிகளில் சில நாடுகள் இன்னும்கூட தீவிரமாக இறங்குவதற்குத் தயாராகிவருவது உலகத்தைக் கவலைக்குள்ளாக்கி வருகின்றது.

அணு ஆயுத உற்பத்தியில் இறங்கத் துடிக்கும் நாடுகள் அதற்காகக் கூறும் நியாயங்கள் அவர்களின் தரப்பில் இருந்து பார்க்கையில் சரியாகவே தோன்றுகின்றது.

வடகொரியாவிடம் ஏற்கனவே, அணுகுண்டு இருப்பதாக அது அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. மேற்கொண்டும் அணு ஆயுதங்களை அது தயாரிக்காமல் இருக்கவும் அம்முயற்சியை முற்றாகக் கைவிடச் செய்யவும் பீஜிங்கின் 6 நாடுகளின் மாநாடு தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

இந்த மாநாட்டின் நன்விளைவாக சில ஊக்கமளிக்கும் தகவல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன.

வடகொரியாவுக்கு அமெரிக்காவிடமிருந்தே ஆபத்து ஏற்படக்கூடும் என்று அந்த நாடு கருதுவதால் அந்த ஆபத்திலிருந்து தப்பிக்கொள்வதற்கு இந்த அணுகுண்டு தேவையென்று கூறிக்கொள்கின்றது.

கொரிய கடல் பிரதேசத்தில் அணு ஆயுதம் பரவவிடாமல் தடுப்பதில் அக்கறையுள்ள நாடுகளின் இடைவிடாத வற்புறுத்தலால் பல மாதங்கள் இழுபறியில் இருந்த ஆறு நாடுகளின் மாநாடு இப்போது பீஜிங்கில் நடைபெற்றுவருகின்றது. இந்த மாநாட்டுக்கு முன்பே அமெரிக்காவும் வடகொரியாவும் நட்புமுறையில் ஒருவருக்கொருவர் என்ற முறையில் நடத்திய பேச்சுகள் திருப்திகரமாக முடிவுற்றதாகச் செய்திகள் வந்திருந்தன.

வடகொரியாவை இறைமையுள்ள நாடாக அமெரிக்கா அங்கீகரிப்பதாக அறிவிக்கப்பட்டது. தனது பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு, தேவைகளும் பூர்த்தியாக்கப்படுமெனில் அணு ஆயுதத்தைக் கைவிட வடகொரியா ஆயத்தமாக இருப்பதாகவும் கூறப்பட்டது. ஆனால், பேச்சுகள் தொடர்ந்தும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன.

வடகொரியா எதிர்பார்க்கும் சுயபாதுகாப்பு அதற்குத் திருப்தி தரும் வகையில் உறுதிசெய்யப்படும்போது அந்நாடு அணு ஆயுத உற்பத்தி முயற்சிகளைக் கைவிடக்கூடும் என்ற ஒரு நம்பிக்கை துளிர்விடத் தொடங்கியிருக்கின்றது. வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி பிரச்சினை தொடர்பான பேச்சுகள் ஓரளவுக்கு முன்னேறியிருப்பதாகக் கருதப்படும் அதேவேளை, ஈரான் மீண்டும் யுரேனியத்தை வேறு எரிபொருளாக மாற்றவும் செறிவூட்டவும் தொடங்கியிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்தி மேற்காசியாவில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஈரான் அணு தொழில் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்துவிட்டது என்பதை ஐ.நா. கண்காணிப்பு நிறுவனமான சர்வதேச அணு முகவர் அமைப்பு உறுதிசெய்துள்ளது.

ஈரானின் இந்த நடவடிக்கை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளாலும் அமெரிக்காவாலும் கடுமையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன.

யுரேனியத்தைச் செறிவூட்டும் அல்லது மாற்றி அமைக்கும் இயந்திர சாதனத்தின் முதல் கட்டப் பகுதியில் யுரேனியத் திடப்பொருள்களைப் புகுத்தும் செயற்பாட்டினை ஈரான் ஆரம்பித்துவிட்டதாகச் சர்வதேச அணு சக்தி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கடந்த வாரம் சர்வதேச அணு சக்தி ஆணைக்குழுவின் கூட்டத்தில் அறிவித்தார்.

## ஈரான் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபை பொருளாதாரத் தடை விதிக்குமா?

செயற்பாட்டு நடைமுறை வரிசையில் முத்திரையிடப்பட்டுள்ள முக்கிய பகுதி இன்னமும் அப்படியே இருக்கின்றது என்றும் அவர் தெரிவித்திருந்தார். பரிஸில் இடம்பெற்ற ஒரு மாநாட்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் ஒன்றுக்கமைய ஈரானின் இஸ்ஹான் அணு உலையின் அணு செறிவூட்டும் கருவியின் உயிர்ப்புள்ள பகுதிகள் ஆணைக்குழுவினால் முத்திரையிடப்பட்டிருந்தது.

இந்த உயிர்ப்புள்ள (Sensitive) பிரிவுகளின் முத்திரைகள் உடைக்கப்படுமானால் ஈரான் மீது ஐ.நா. பாதுகாப்பு சபையின் கவனம் திருப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராஜதந்திரவட்டாரங்கள் கூறியிருந்தன. ஈரானைப் பொறுத்தவரை முத்திரைகளை உடைத்து ஏனைய பகுதிகளையும் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாக ஈரானிய அணு ஆணையத்தின் உதவித் தலைவர் மொகம்மத் சயீதி கூறியிருக்கின்றார்.

இஸ்பஹான் ஆலையில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளைப் பார்க்கையில் முத்திரை இடப்பட்ட பகுதிகளும் உடைக்கப்பட்டு மேற்கொண்டு பணிகள் முன்னெடுக்கப்படும் என்று அதிகாரிகள் கருதினாலும் யுரேனியத்தைச் செறிவூட்டுவதற்கான செயல்கள் நடைபெறுவதற்கு இன்னும் நிறையப் பணிகள் மேற்கொண்டாகவேண்டும்.

மேலும், அணு ஆயுதம் தயாரிக்கும் எண்ணம் ஏதும் தனக்கில்லையென்று ஈரான் கூறிவந்துள்ளது. அதேசமயம் ஈரானின் அணு எரிபொருள் தயாரிப்பிலிருந்து தவிர்ப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்க முன்வந்துள்ள உதவிப் பொதியை அது நிராகரித்துவிட்டது. ஐரோப்பிய யூனியனின் யோசனைகள் அவமானப்படுத்துவதாகவும் கேலி செய்வதாகவும் இருக்கின்றன என்று சயீதி கூறியுள்ளார்.

இதேவேளை, ஈரான் மீண்டும் யுரேனிய செறிவூட்டலை ஆரம்பித்திருப்பதை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கண்டித்துள்ளன.

அணு பரவல் தடை ஒப்பந்தத்தின்படி யுரேனியத்தை எரிபொருள் உற்பத்திக்காகப் பயன்படுத்துவதை அது தடைசெய்யவில்லை. இந்த அடிப்படையிலேயே அது இப்பொழுது துணிச்சலுடன் செயலில் இறங்கியிருக்கிறதென சில ஐரோப்பிய நாடுகள் கருதுகின்றன. சர்வதேச அணு சக்தி ஆணைக்குழுவிலுள்ள 35 உறுப்பினர்களுக்கு இடையில் கருத்து ஒருமைப்பாடு இல்லையென்பதும் ஈரானுக்குத் தெரியும். ஐரோப்பிய ஆலோசனையில் சிவிலியின் கருத்துக்கான அணு சக்தியைத் தயாரிக்கவும் மத்திய ஆஸிய எண்ணெய்ப் போக்குவரத்துக்குப் பிரதான இடைத்தங்கல் களமாக விளங்கவும் உதவுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஈரான் தனக்கென சொந்தமாக அணு எரிபொருளைத் தயாரித்துக் கொள்வதை இந்த ஆலோசனை மறுப்பதாகக் கூறி அதனை நிராகரித்து விட்டது.

***

### சுரங்கம் தோண்டி வங்கியில் கொள்ளை

வங்கியில் கொள்ளையிடுவதற்காகச் சுரங்கம் தோண்டி அதன் மூலம் உள்ளே புகுந்து உலகின் மிகப்பெரிய வங்கிக் கொள்ளையொன்றை நடத்தியிருக்கிறார்கள் திருடர்கள். பிரான்ஸ் நாட்டின் மத்திய வங்கிக் கிளையொன்றில் இக்கொள்ளை இடம் பெற்றுள்ளது.

வங்கிக்கு அண்மையிலிருக்கும் வீடு ஒன்றிலிருந்து நிலத்துக்கடியில் 80 மீற்றர் சுரங்கம் ஒன்றை அமைத்து வங்கிக்குள் புகுந்துள்ள திருடர்கள் மிகக் கவனமாக செயற்பட்டு வங்கியில் பொருத்தப்பட்டிருந்த எச்சரிக்கை சமிக்ஞைகளோ, கமெராக்களோ செயற்பாடாத முறையில் திருட்டை நடத்தி 6 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் பணத்தைக் கொள்ளையடித்திருக்கிறார்கள். ✱

மீண்டும் சந்தையில்!
றொன்சன்®
மிகவும் சக்திவாய்ந்த
அதி செயல்திறன் கொண்ட
சைக்கிள்
தர உத்தரவாதத்துடன் கூடிய எந்தப் பிரச்சினையும் அற்றது.
THE RONSON CYCLE ALL STEEL GUARANTEED DELUXE BRILLIANT



கோபா கேரியர், பெல், லொக் மற்றும் சைட் ஸ்டான்ட் என்பன இலவசம்!
10 வருட உத்தரவாதம்
றொன்சன் சைக்கிள்கள் அதன் வழமையான வடிவு மற்றும் சிறப்பான பண்புகளுடன் மீண்டும் சந்தைக்கு வந்துள்ளன.
றொன்சன் அதன் உறுதியான கட்டமைப்பு, அசல் பாகங்கள் அதி திறன் செயற்பாடு என்பனவற்றுக்கு பெயர்போன ஒரு தயாரிப்பாகும். இந்தப் பண்புகள் காரணமாக சிறந்த சமநிலை, பாதுகாப்பு, இலகுவான ஓட்டம் என்பனவும் உறுதி செய்யப்படுகின்றது.
நாடு முழுவதும் விநியோகஸ்தர்கள் தேவை
குளோபல் சைக்கிள் கம்பனி
5-B, புதிய சோனகத் தெரு கொழும்பு - 12 தொலைபேசி : 0115 375179/80
பெக்ஸ் : 0114 723873 ஈ-மெயில் : ronson@sltnet.lk/ mahroof@lankabellnet.com
றொன்சன்® தலைசிறந்த சைக்கிள்

## அபிவிருத்தி உதவியாளர் பதினொருவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.14

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு புதிதாக 11 பட்டதாரி அபிவிருத்தி உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் இந்து கலாசார உத்தியோகத்தர்களாகவும் 6 பேர் தொழிற்பயிற்சி உத்தியோகத்தர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்துகலாசார உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களில் செல்வி சீ.மகிந்தினி, செல்வி இ.ராணிமலர், த.பிரதீஸ்வரன் ஆகியோரும்-

தொழிற்பயிற்சி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளோரில் திருமதி நி.வதனி, செல்வி சு.கல்யாணி, செல்வி சி.பிரியாவதி, அ.ஜேசுதாஸ், செல்வி வே.கலாவதி ஆகியோரும் - தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(9-203-202)


# செலிங்கோ ஆயுள் பகுதி யாழ் கிளை



## விற்பனை ஆலோசகருக்கான பதவி வெற்றிடம்

கல்வித்தகமை: கா.பொ.த.சா/தரம்
கா.பொ.த.உ/தரம்

**வெற்றிடத்துக்கான பிரதேசங்கள்**

| | |
|---|---|
| *யாழ்ப்பாணம் | *அரியாலை |
| *அராலி | *நல்லூர் |
| *நாவற்குழி | *வட்டுக்கோட்டை |
| *கோப்பாய் | *கைதடி |
| *காரைநகர் | *புத்தூர் |
| *சாவகச்சேரி | *ஊர்காவற்றுறை |
| *கொக்குவில் | *மீசாலை |
| *வேலணை | *கோண்டாவில் |
| *கொடிகாமம் | *வரணி |
| *சங்கானை | *உரும்பிராய் |
| *மிருசுவில் | *பண்டத்தரிப்பு |
| *புன்னாலைக்கட்டுவன் | *மாதகல் |
| *மானிப்பாய் | |

மேற்குறிப்பிட்ட இடங்களுடன் ஏனைய இடங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதி திகதி: 25.08.2005

வந்து சேரவேண்டிய முகவரி:

**செலிங்கோ ஆயுள் பகுதி**
**560, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(38760) (39-32-14-19)



கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை- மானிப்பாய்

## GREEN MEMORIAL HOSPITAL - MANIPAY.

பதவி வெற்றிடங்கள்

*** சுகாதாரப் பராமரிப்பு உதவியாளர்**
HEALTH CARE ASSISTANT

மேற்படி பயிற்சி நெறிக்கு ஆர்வம் உள்ள ஆண்/ பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பம் வந்து சேர வேண்டிய முடிவு திகதி : 24.08.2005

**தகைமைகள்:**

- 18 வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும்
- உடல், உள ஆரோக்கியமுள்ளவராய் இருத்தல் வேண்டும்.
- கல்வித் தகைமை: சாதாரண பொதுத்தராதரம்
- சான்றிதழ்கள் 02 (இதில் ஒன்று நீங்கள் வதியும் கிராமசேவை அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்)

★★ ★★ ★★ ★★ ★★

★வாகன ஓட்டுநர் VAN DRIVER

மேற்படி வைத்தியசாலைக்கு அனுபவம்மிக்க வாகன ஓட்டுநரிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

*விண்ணப்பம் வந்து சேர வேண்டிய முடிவு திகதி: 24.08.2005*

**தகைமைகள்:**

- Licence உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- உடல் ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.
- சான்றிதழ்கள் 02- (இதில் ஒன்று நீங்கள் வதியும் கிராம சேவை அலுவலரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்)

*விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி:*

**வைத்தியசாலைப் பணிப்பாளர்,**
**கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை,**
**மானிப்பாய்.**

(சி.-44053) (39-32-14-19) - நிர்வாகத்தினர்.



## பிரிந்தாவன் கல்லூரி

பங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து

உயர்தரப் பெறுபேறுக்காகக் எதிர்பார்ப்போர்

இந்தியாவில் படியுங்கள்

அல்லது

2 உயர்தர சித்தியுள்ளோர்

B.Sc.
B.B.M.
B.C.A.

கருத்தரங்கும் உடன் உள்வாங்கலும் ஓகஸ்ட் 19 (வெள்ளிக்கிழமை)

கொழும்பு, ஹில்ரன் மு.ப.10 மணியிலிருந்து பி.ப.2 மணி வரை இப்பொழுதே இணையுங்கள் - பிந்திய பதிவுக் கட்டணத்தைத் தவிர்ப்பதற்கு.

Company Secretarial Services (pvt) Ltd,
285c-1/1, Stanley Thilakaratne Mw,
Nugegoda.
Tel.: 0112854438, 0777317043.

(38760) (32-14-19)



''சுயதெரிவு முறையில்'' சுகமாக விரும்பும் நாட்டிலிருந்து மனம்விரும்பும் மணமக்களைத் தெரிவுசெய்யலாம்.
மேலதிக விவரங்களைச் சுயதெரிவுமுறை முன்னோடி, பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் செவ்வாய், அரச பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த கிழமைநாள்களில் மாலை 4.30 மணிக்குமேல் இரவு 8.30 மணி வரையான நேரகாலத்துள் தொடர்புகொண்டு விசாரித்து அறிக!

**வேல் அமுதனின் நேரடித் தொலைபேசி இலக்கங்கள்:**

**2360488, 4514396**

சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் முகவரி :
8/3/3, Metro Apartment (Opposite Wellawatte Police,
Via 33rd Lane) 55th Lane, Colombo-06

(சி/44071) (32-14-19)







**"Past papers என்னை வலுவூட்டியது.**
**Tuition என்னை நம்பிக்கையூட்டியது.**
**Revision Classes என்னைத் திறமையாக்கியது.**
**ஆனால் NIIT மட்டுமே நான் விரும்பிய**
**வேலைக்கு என்னைத் தகுதியாக்கியது".**

"A/L ற்கு பின் NIIT இல் இருவருட DNIIT Programme ஐ கற்றதன் விளைவாக அரபு நாடு ஒன்றின் முன்னணிக் கம்பனியில் Senior Programmer ஆக பணியாற்றுவதையிட்டு மகிழ்கின்றேன்". - T.Vijay

| Diploma Courses | Durations |
|---|---|
| Base Diploma in Computer Applications (BCA) | 5 Months |
| Certificate in Information Technology (CIT) | 6 Months |
| Honours Diploma in Information Technology (HIT) | 1 Year |
| Professional Diploma in Information Technology(DNIIT) | 2 Years |

northumbria UNIVERSITY

**Final Year**
B.Sc. Honors Degree in Applied Computing (9 Months in UK)

**DNIIT**
Professional Diploma in Information Technology (2 Years in Sri Lanka)

Northumbria University (UK) இல் B.Sc (Honors) Degree ஐப் பெற்றுக்கொள்ள மிகச்சிறந்த சரியான வழி!

ஆசியாவின் முதல்தர கணனி நிறுவனமான NIIT வழங்கும் விசேட அதிரடிச்சலுகை

குறைந்த கட்டணத்துடன் சர்வதேச தரச் சான்றிதழ்

**Microsoft Office XP**
(Duration - 40 Hours)

Aug 20 ற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்

**NIIT**
347 - 2/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P : 021 2227250

GLOBAL LEADERS IN IT EDUCATION AND TRAINING

NIIT Branches: ● Union Place 011-4720790 ● Nugegoda 011-4408770 ● Bambalapitiya 011-4519111 ● Kandy 081-4470900 ● Kurunegala 037-4691000 ● Gampaha 033-4673222 ● Trincomalee 026-2227767 ● Jaffna 021-2227250 ● Thissamaharama 047-4328930 ● Rukmalgama 0114-304238

**NIIT Trusted by more than 2.5 million IT students worldwide.**

# பலாலி விமானத் தளம் அவசர புனரமைப்பு ஏன்?

அ.லக்ஷ்மன்

பேச்சளவில் மட்டுமல்லாது அண்மைக் காலமாக இலங்கை அரசு எடுத்துள்ள புனரமைப்பு நடவடிக்கையில் பிரதான இடம்பெறுவது பலாலி விமானத்தள புனரமைப்பு ஆகும். இப்புனரமைப்பு ஏன் திடீரென முனைப்புப் பெற்றுச் செயற்படுத் தப்பட்டது? இதன் பின்னணிக் காரணங்கள் தான் என்ன? என்ற கேள்வி வடக்கு மக்களின் மனங்களில் தோன்றியிருக்கிறது. கிட்டத்தட்ட 1943 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆரம்பச் செயல் வடிவம் பெற்ற இவ்விமானத்தளம் இன்று பயணிகளை ஏற்றி இறக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந் தாலும் அன்று தொடக்கம் அது ஒரு இராணுவத் தளமாகவே இருந்து வருகி றது.

சமாதான முயற்சிகளில் சிக்கல் தன்மை தோன்றியுள்ள இக்காலப்பகுதில் பலாலி விமானத் தளத்தின் ஓடுபாதைகள் புனரமைக்கப்படுவது மக்கள் மனங்களில் அச்ச உணர்வை ஏற்படுத்தி வருகிறது. இப்புனரமைப்பு நடவடிககையைத் தீவிரமாக - வேகமாக - அரசு முன் னெடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. அது ஏன்? அதற்குக் காரணமும் இருக்கிறது. இத் தளம் முன்பு சொன்னது போல் ஓர் கூட்டுப் படைத் தளமாகவே காணப்படுவதால் 40 ஆயிரம் படையினரை யாழ்ப்பாணத்தில் நிலைகொள்ள வைத்திருக்கும் அரசுக்கு இப்பலாலி விமானப்படைத்தளம்தான் விநியோக, மீட்பு, அவசரத் தேவை, பாதுகாப்பு மார்க்கமாக இருந்து வருகிறது. யுத்தம் மீள உருவாகினால் வடக்கின் காங்கேசன்துறை முகப் போக்குவரத்து கடற்புலிகளினால் துண்டிக்கப்பட்டு விடும் என்ற ஐயபபாடும் அரசுக்கு இருக்கிறது. அவ்வாறு துண்டிக்கப் பட்டால் பலாலி விமானத் தளத்தை அதி உச்ச இராணுவப் பலத்துடன் வைத்திருப்பதன மூலம் தமது படைகளைப் பாதுகாத்துக் கொளளலாம் என அரசு நினைக்கிறது. ஆனால், அது அவ்வாறு அமையுமா என்பது கேள்விக்குரியதேயாகும்.

இந்தப் புனரமைப்பு நடவடிக்கையை அரசு ஒரு வருடத்துக்குள்ளோ அல்லது ஆறு மாதத துக்குள்ளோ முடித்து விட வேண்டும் எனத் திட்டமிட்டுள்ளது. இதற்கு இந்தியாவின் உதவியைத் தான் கூடியளவு இலங்கை அரசு வேண்டி நிற்பதாகவும் தெரிகிறது.

பலாலி விமானத்தள புனரமைப்புப் பற்றிப் பேசும் போது, இப்போது இருக்கும் ஓடு பாதையை முற்றாகக் கைவிட்டுப் பயன்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தாமல் அதை அப்படியே வைத்துக்கொண்டு இன்னொரு தளத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் சில மாதங் களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்று கூறப்படுகிறது. பழமையான இந்த ஓடு பாதையானது 2000 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதல் மூலம் சேதததிற்குள்ளாக்கப்பட்டது. அதனால் இராணுவ நட வடிக்கையைப் புலிகள் முடக்கி வைத்திருந்தனர். இதனால், தற்போது விமானங்கள் தரையிறங்கும் போதும் மேலெழும் போதும் ஓடுபாதையில் அதிகளவு அதிர்வு ஏற்படுவதை அடுத்தே அது புனரமைக்கப்படுவதாக உத்தியோகபூர்வமான செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு குண்டும் குழியுமான மிகவும் சேதமான நிலையில் காணப் படுவதால் அதைத்திருத்த 500 மில்லியன் ரூபா வரை செலவிடப்பட வேண்டும் என மதிப்பிடப்பிட்டிருக்கிறது. இதனால் இப் புனரமைப்புப் பணி முனைப்புப் பெற்று வேகமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு இதைப் புனரமைப்புச் செய்தால் வடக்கில் உள்ள படையினருக்கான போதுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்பது மட்டுமல்லாது இப்புனரமைப்பு நடவடிக்கையால் இராணுவனத்தினரிடையே பாதுகாப்பு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் இது அமையலாம் எனவும் கூறப்படுகிறது. திடீரென யுத்த சூழல் ஒன்று ஏற்பட்டால் வான் வழித் தொடர்புகளை ஏற்படுத்த முடியாத



நிலை உருவாகும். இதனால் இராணுவ அவசரத்தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை உருவாகும் என்பதை உணர்ந்துதான் இத்தளம் புனரமைப்புடன் கூடிய இராணுவப் பலப்படுத்தலுக்கு உட்படுவதாகவும் தெரிய வருகிறது.

தற்போது வழக்கமாக விநியோக நடவடிககைகளில் ஈடுபட்டுள்ள C-130, AN 32B ரக விமானங்கள் தரையிறங்க முடியாத நிலை ஏற பட்டிருப்பதாகவும் இதனால் விடுமுறையில் செலலும் இராணுவத்தினரின் பயணங்கள், அன்றாடப் பொருள்கள், மருத்துப் பொருள்களின் விநியோகம், பயணிகளின் போக்குவரத்து ஆகியன தடைப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இத்தளத்திலிருந்து நாள் ஒன்றுக்கு ரஷ்சியத் தயாரிப்பான அன்ரனோவ் 32 விமானம் மூலம் 750 படையினர் தெற்குக்கும் வடக்குக்கும் இடையே போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இவர்களின் தடைப்பட்ட போககுவரத்தினை விரைவாக மீண்டும் ஆரம்பிப்பதற்காக, நடந்து கொண்டிருக்கும் புனரமைப்பு நடவடிக்கையில் அதிக கவனம் செலுத்தி வேகமாக முடிப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்துள்ளதையும் அறியக்கூடியதாக உள்ளது.

தமிழர்களின் ஞாபகத்தில் குறிப்பாக வடக்குத் தமிழ் மக்களின் மனங்களில் பலாலி ஒரு யமனாக நிலைத்து நிற்கும் தளமாகவே காணப்படுகிறது. கடந்த இரு தசாப்தங்களில் வட பகுதியில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனையும் பயமுறுத்தும் ஒரு தளமாகவே இருந்து வருகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் தீககப்பட முடியாத பிரச்சினையாக உருவெடுத்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயமும் பலாலி விஸ்தரிப்பின் அம்சமே.

"தமிழர்களின் பொருளாதார வலுக்கோட்டையாகத் தொன்று தொட்டு இருந்து வந்த இப்பகுதி இன்று தமிழர்களை நிரந்தரமாக ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரசுகளின் வலுக்கோட்டையாகக் கர்ச்சித்து நிற்கிறது. வான்படைத் தளமாக அன்று பல்லாயிரம் மககளின் உயிர்களைப் பலி கொண்டு ஏப்பம் விட்டு நிற்கிறது. அவ்வளவு தான் அல்ல. பொருளாதார வளங்களின் அழிவுக்குக் காரணமாகவும் விவசாயப் பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு நிற்பதும் இதனால் தேசிய பொருளாதார வளத்திற்கும் உறுதிப்பாட்டிற்கும் தொடர்ந் தும் முட்டுக்கட்டையாக உள்ளது" என லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் உலகம்' எனும் சஞ்சிகை கூறுகிறது.

பலாலி விமானத்தள ஓடுபாதைப் புனரமைப்புக்காக ஐந்து மாதங்களுக்குப் போக்குவரத்திற்கு மூடப்படும் என்று விமாபைடைத் தளபதி ஏயாா வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்திருந்தார். இத்தளமூடாக யாழ்ப் பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான விமானப் போக்கு வரத்து நடைபெறுவதால் இத்தளம் புனரமைக் கப்படும் (5 மாதங் களுக்கு) வரை இதனூடாகப் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது என்றும படைத் தளபதி கூறியிருந்ததை நாம் பத்திரிகைகள் மூலம் அறிந்தோம்:

## சர்வதேச விமானத்தளம்

இதேவேளை, இலங்கை அரசு புதிய சர்வதேச விமானத்தளம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இப்புதிய சர்வதேச விமான நிலையத்தை தம்புள்ள பிரதேசத்தில் அமைப்பதற்கான இடம்தெரிவு செய்யப்பட்டிருக்கிறது என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்திருந்தார். ஆரம்பப் பணிகளும தொடங்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகிறது. நாட்டுக்கு இன்னுமொரு சர்வதேச விமான நிலையத்தின் தேவை உணரப்பட்டிருப்பதாகவும் தம்புள்ள பிரதேசத்தில் உல்லாசப் பயணிகளின் வருகை பிரபல்யம் அடைந்துள்ளமையால் அதனை (நகரை) மேலும் வளர்ச்சி பெற வைக்க இத்திட்டம் வாய்ப்பளிக்கும் எனவும் கருத்து தெரிவித்தார். புதிய விமான நிலையம் அமைப்பது தொடர்பாகப் பொருத்தமான பிரதேசம் அங்கு ஏற்கனவே தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எவ்வாறாயினும் பலாலி விமானத்தள புனரமைப்பு விடயம் தான் தமிழ் மக்கள் மனங்களில் கேள்விகளைத் தொடுத்து வருகிறது. அதற்கான காரணங்கள் மேற்சொன்னவையாக இருந்தாலும் இராணுவ ரீதியிலான நகர்த்தல்களை அறிவது கடினம். எதுவானாலும் அடுத்த கட்ட போருக்கான ஆயத்தமாக இது அமைகிறதா என்பது கூற முடியாதுள்ளது.

மேலும் இன்று இந்திய அரசு மேற்கொணடு வரும் சேதுசமுத்திரக்கால்வாய்த் திட்டம் வடக்கின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமையும் என்பது ஒரு புறமிருக்க இன்று இலங்கை அரசு எடுத்துள்ள பலாலி விமானத்தள புனரமைப்பு அத்திட்டத் தோடு எத்தகைய பங்காற்றப் போகிறது என்பதும், சர்வதேச அங்கீகாரம் பெறும் விமான நிலையமாகத் தோற்றம் பெறக்கூடிய வாய்ப்புக்களை இராணுவத் தளமாக உள்ள பலாலி எவ்வாறு ஏற்படுத்திக் கொள்ளப் போகிறது எனபதும் திட்டமிடலாளர்கள், புவியிலாளர்கள், ஆர்வலர்களிடையே ஏற்பட்டுள்ள கேள்வியாகும். இப்பலாலி விமானத் தளத்தை இலங்கை அரசு எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

# அனைத்துச் சமூகங்களும் மனிதாபிமானத்துடன் வாழும்நிலை இந்த நாட்டில் ஏற்படவேண்டும்!

## நீதி அமைச்சர் செனவிரத்னவின் விருப்பம் இது

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் அனைத்துச் சமூகங்களும் மனிதாபிமானத்துடனும், சுயகௌரவத்துடனும் வாழும் நிலையை ஏற்படுத்தவேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாவே இருக்கின்றது. பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தை ஒதுக்கி ஓரம்கட்ட முற்பட்டால் சர்வதேச சமூகத்தில் நாம் சுயநலவாதிகள் என முத்திரை குத்தப்படுவோம் என்பதை மறந்துவிடக்கூடாது என்று நீதி அமைச்சர் டபிள்யூ. டி.ஜோன் செனவிரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே நீதி அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நீதி அமைச்சர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டபோது நாம் அதனை எதிர்த்தோம். மாகாணசபைகள் உருவாக்கப்பட்டால் நாடு பல துண்டுகளாகி விடும் என்று பிரசாரப்படுத்தி ஆர்ப்பாட்டம் செய்தோம். ஆனால், நாங்கள் செய்தது தவறு என்பதை பின்னர் உணர்ந்து கொண்டோம். அப்புடியான ஒரு தவறை மீண்டும் விடக்கூடாது.

1959 இல் பண்டா - செல்வா ஒப்பந்தமும், 1965இல் டட்லி - செல்வா ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டன. ஆனால், சில தீவிரவாதப் போக்குடையவர்களால் அவற்றைச் செயற்படுத்த முடியாமல் போய் விட்டது. அதேபோன்று ஜே.வி.பியினர் இப்பொழுது விஷமத்தனமான பிரசாரங்களைச் செய்கின்றனர். இவர்களுக்கு நாட்டு நலனில் அக்கறையில்லை.

நிதி நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டுவிட்டதாக முட்டாள்தனமாகப் பேசுகின்றனர். ஆழிப்பேரலை நிவாரண நிதியின் ஒவ்வொரு சதமும் திறைசேரியின் மூலம் அரச அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் ஊடாகவே செலவிடப்படும். புலிகள் கைக்கு நிதி போய்விடும் என்பது கற்பனைக் கதைமட்டுமே.

இரண்டு கிலோமீற்றர் தூரம் வரைமட்டுமே நிவாரண நடவடிக்கைகள் என்று கூறுகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து ஆறு கிலோமீட்டர் தூரம் தாக்கப்பட்டுள்ளது. அப்படியானால் இப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யக்கூடாதா? இப்பிரதேசங்களை அபிவிருத்திசெய்யவேண்டும். = என்று நீதி அமைச்சர் கூறினார்.

---

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழித்தெறிவாரா? புலிகளுடன் பேசித் தீர்வுகாண விரும்புகிறாரா?

## பிரதமர் விளக்கவேண்டும் என்கிறார் பந்துல குணவர்தன

ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழித்தெறிவாரா? புலிகளுடன் பேசி பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகிறாரா? அல்லது ஜே.வி. பியின் வழியை பின்பற்றுவரா? என்பதை நாட்டு மக்களுக்கு அறிவிக்கவேண்டும் என்கிறார் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன.

நாடாளுமன்றில் பொதுக்கட்ட மைப்புத் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜே.வி.பியினர் தாம் செய்த கொலைகளையும், கொள்ளைகளையும் சட்டவிரோத செயல்களையும் நியாயப்படுத்தும் அதே வேளை ஏனையோர் செய்தால் பொங்கி எழுகின்றனர்.

தமக்கு ஒரு நியாயமும் பிறருக்கு ஒரு நியாயமும் கற்பிக்க முயலும் அவர்களை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தாம் ஆட்சிக்கு வந்தவுடன் சுக்குநூறாகக் கிழித்தெறிவோம் என்றனர் ஜே.வி.பியினர். குரங்குபாஞ்சான் மூகாமை அழித்துவிடுவோம் என்றனர். இந்த அரசில் 4 அமைச்சுப் பதவிகளையும் வகித்தனர். ஆனால், அவர்களால் ஏன் மேற்கூறிய விடயங்களைச் செய்ய முடியவில்லை என்பதை அவர்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

வீதியில் நின்றுகொண்டு யாரும் எதையும் பேசலாம். ஆனால், ஒரு பொறுப்பு வாய்ந்த அரசு என்ற நிலை வரும்போது வீதியில் சொன்ன விடயங்களை செய்ய முடியாது. ஜே.வி.பியினர் அதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஜே.ஆர்.ஜெயவர்தன மாகாணசபை முறையைக் கொண்டு வந்த சமயம் அதனால் நாடு பிரியப்போகின்றது என்று கூறினார்கள். இடைக்கால நிர்வாகத்தினால் நாடு பிரிந்துவிடும் என்றனர். இன்று பொதுக்கட்டமைப்பால் நாடு பிரிந்துவிடும் என்கின்றனர்.

இவர்கள் கூறிய விடயங்கள் ஏதாவது நடந்துள்ளதா? இந்திய இராணுவத்தை குரங்குப்படை என்றனர். இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பருப்பில் செய்த வடையை சாப்பிட்டவர்களையும் கொலை செய்தனர். தம்மை விமர்சிப்பவர்களை மொட்டையடித்து வீதியில் நடக்கச் சொல்லி தண்டனை கொடுத்தார்கள். இன்று தாம் சிறந்த ஜனநாயகவாதிகள் என்ற ரீதியில் படம் மாத்து காட்டுகிறார்கள். - என்றார் அவர்.

(க)


உதயன்

# விழிப்பின் பதிவுகள்

## இன்றைய அரசியல் சூழல் சமாதானத்திற்குச் சாதகமானதா?

தற்போதைய அரசியல் சூழலானது பல்வேறுபட்ட அரசியல் முரண்பாடுகளையும் இனத்துவ சமூக சிக்கல்களையும் கொண்டதாக காணப்படுகிறது. 2002 பெப்ரவரி 22 ம் திகதி கைச்சாத்திடப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கை, சமாதான நடவடிக்கைகள் என்பன பொதுமக்களது பெரும் எதிர்பார்ப்பை கிளறியபடி முன்னேறியது. எனினும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களின் சில தவறான நகர்வுகள் பேச்சுக்களை முடக்கின என்று கூறலாம். குறிப்பாக புலிகளை தடை செய்துள்ள ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் ஒரு முன் கூட்டத்தொடரினை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் ஒத்துக் கொண்டமையானது அல்லது ஏற்பாடு செய்துகொண்டமையானது மிகப் பெரிய தவறாக அமைந்தது. இது தொடர்ந்து வந்த சமாதான பேச்சுவார்த்தைகளை ஸ்தம்பிதமடையச் செய்தன எனலாம். இது ஒருபுறமிருக்க வடகிழக்கை புனரமைப்பதற்கான ஒரு அலகாக கொள்ளப்பட்ட சிறான் அமைப்பு தனது பெயர்ப்பலகையை நிறுவியதுடன் மாத்திரம் நின்றுவிட்டது. எவ்வாறாயினும் இனப்பிரச்சனையை தீர்ப்பதற்கென நெருங்கி வந்த வாய்ப்புகள் காலங்காலமாகவே கைநழுவிப்போன ஏராளமான சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாக அமைந்தது.

இது ஒருபுறமிருக்க விடுதலைப்புலிகள்



இடைக்கால சபை ஒன்றை கோருவதற்குரிய வாய்ப்புக்களை அளித்தது. இந்த நிலையில் இந்த இடைக்கால நிர்வாக சபை விடுதலைப்புலிகளுக்கு ஈழத்தை வழங்கப் போவதாக தெற்கில் பெரும் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் புலி பூச்சாண்டி காட்டி அழுக்கப்பட்டது. எனினும் பதவிக்கு வந்த கூட்டமைப்பு அரசாங்கத்தினால் சமாதான நடவடிக்கைகளில் எந்தவித உருப்படியான நகர்வுகளையும் மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது. இவ்வாறு சமாதானப் படகு தத்தளித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தமானது நிலைமையை சற்று ஆறப்போட்டது. குறிப்பாக செய்வதறியாது திகைத்துப் போயிருந்த கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு சுனாமி ஒரு பெரும் அரசியல் கொடையாக வர்ணிக்கப்பட்டது. எனினும் நிலைமை அவ்வாறாக நீடிக்கவில்லை. காரணம், வடகிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக விடுதலைப் புலிகளுடன் இணைந்து சுனாமி பொதுகட்டமைப்பு ஒன்றை நிறுவ வேண்டிய அவசியமும், நிர்ப்பந்தமும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இது அதனது உடைவிற்கு காரணமாக அமைந்தது. இந்த நிலையில் அடுத்ததாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சர்ச்சைகள் எழுந்தன. இந்த சர்ச்சையும் கூட கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு பாதகமாக அமைந்தது. ஆயினும் இவ்வருடமே ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் தேவையானது அரசாங்கத்தினை பெரும் சிக்கலில் வீழ்த்தியுள்ளது.

இவ்வருடமே தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பது சட்டபூர்வமானது என்ற கருத்தையே தேர்தல் ஆணையாளர் திணைக்களம் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் அவ்வாறான முடிவு எடுக்கப்படுமானால் அது பக்கசார்பான முடிவாக அமையும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. இதேவேளை ஜனாதிபதியும் ஜனாதிபதி தேர்தல்நடாத்தும் காலம் தொடர்பான ஆட்சேபனைகளை தெரிவித்து உயர் நீதிமன்றத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியதும் நீதித்துறையும் சிக்கலில் சிக்கியது.

இவ்வாறான பல்வேறுபட்ட சிக்கல்கள் சமாதான நடவடிக்கைகளை மேகம் போல மறைத்து நிற்கின்றன. ஜனாதிபதி தேர்தல் மூலம் தடைப்பட்டு இருக்கின்ற சமாதான பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கைகள் வெறும் நம்பிக்கைகள் மட்டுமே. ஏனெனில் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான எவ்வித வேலைத் திட்டங்களும் இல்லாத அரசியல் நகர்வுகளால் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட போவதில்லை. ஏனெனில் ஒரு குறித்த காலத்தில் பதவிவகித்த இரு பிரதான கட்சிகளினது நடவடிக்கைகளும் இதனை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே உண்மையான அர்ப்பணிப்புடனும், தூரநோக்குடனும் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் நகர்வுகள் மாத்திரமே சமாதானத்திற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும். எனவே தற்போது உள்ள சுயநலம், அதிகார வெறிபிடித்த அரசியல் சூழல் ஒரு போதும் நிரந்தர சமாதானத்திற்கான வாய்ப்பை வழங்கப்போவதில்லை.

- என்.ஜீவேந்திரன்

### இவ்வார விழிப்பில்...

- சமாதான முன்னெடுப்புக்களும் ஜனாதிபதி தேர்தலும்
- தலவாக்கலை இளைஞர்கள்
- சுதந்திரத்திற்கான சமாதானம்
- ஒற்றுமைக்காக ஒன்றுகூடும் இளைஞர்கள்
- யாழ் உணவும் தென்னிலங்கையரும்

### சிந்தனைக்கு

*சகல காரியங்களுக்கும் -*
*இன்பத்திற்கும்,*
*துன்பத்திற்கும்,*
*நன்மைக்கும், தீமைக்கும்,*
*இருட்டுக்கும்,*
*வெளிச்சத்திற்கும்,*
*பாவத்திற்கும்,*
*புண்ணியத்திற்கும்,*
*அன்புக்கும்,*
*வெறுப்புக்கும் மனமே*
*காரணம்.*

## மலையக இளையவர்களுக்கு விடிவு எப்போது?

மலையக சமூகம், 1828 ம் ஆண்டு இலங்கைக்கு ஆங்கிலேயரால் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சமூகம். இவர்கள் இலங்கையில் குடியமர்ந்து 177 வருடங்களாகின்ற நிலையில் இன்னும் இம்மக்கள் இலங்கையர் என்ற அந்தஸ்த்துடன் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். இந்நிலையில் இன்றைய மலையக இளைஞர்களை இது பாரியளவில் பாதிக்கிறது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய விடயம்.

பல தடைகளையும் தாண்டி ஏனைய சமூகத்துடன் தாமும் முன்னிற்க வேண்டும் என்ற ஆர்வத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கல்வி கற்கும் மலையக் இளைஞர்கள் படிப்பை முடித்து வேலைவாய்ப்பு என்ற அடுத்த நிலைக்கு வரும்போது அவர்களது நிலை மிகவும் கவலைக்குரியதே. காரணம், புறக்கணிப்பு.

புறக்கணிப்பு என்பது தமிழர்களின் வாழ்வில் மிகவும் சாதாரண விடயம். எமது நாட்டின் இனப்பிரச்சனைக்கு அடித்தளமாக அமைந்த, இன்றுவரை தீராத பிரச்சனையாகவுள்ள மொழிப்புறக்கணிப்பு மலையக இளைஞர்களையும் விட்டு வைக்கவில்லை. இந்த மொழிப்பிரச்சனை ஒருபுறமிருக்க வேலைவாய்ப்பு என்று கொழும்பு போன்ற பகுதிகளுக்கு வரும் போது நகர்ப்புறங்களில் கல்வி கற்று, ஆங்கில, மேலதிக, விசேட தகமைகளைப்பெற்று வரும் இளைஞர்களுடன் போட்டியிட்டு வேலைகளைப் பெறுவதில் பெரும் நெருக்கடிகளை மலையக இளைஞர்கள் எதிர்நோக்குகின்றனர்.

இந்த நிலையில் மலையகத்தில் தற்போது சாதாரணதரம், உயர்தரம் படித்துவிட்டு அதற்கேற்ற வேலைவாய்ப்பு இன்மை காரணமாகவும், தம் பெற்றோரை போன்று தோட்ட வேலைகளுக்குச் செல்ல விருப்பமின்மை காரணமாகவும் பெரும்பாலான இளைஞர்கள் வீட்டிலேயே இருக்கும் புதிய பண்பாடு மலையகத்தில் உருவாகிவருகிறது. இது இவ்வாறிருக்க உயர்தரம் வரை படித்து விட்டு அல்லது கல்வியை இடைநடுவில் நிறுத்திவிட்டு தோட்ட வேலைகளுக்கே செல்லும் சந்தர்ப்பங்களும் நிறைய உண்டு. அதிலும் குறிப்பாக சிறுவயதில் நகர்ப்புறங்களில் வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படும் சிறுவர்களின் எதிர்காலமோ பரிதாபத்திற்குரியதாகும். குறிப்பாக பணக்காரர்களது வீடுகளில் வேலைக்காரர்களாக மலையகத்தைச் சேர்ந்த சிறுவர்,சிறுமியர்களும், இளைஞர், யுவதிகளும் காலம் காலமாக வேலைக்கமர்த்தப்படுவது எழுதப்படாத விதியாக இருக்கிறது. 18 வயதிலும் குறைந்தவர்களை வேலைக்கமர்த்தும் இந்த சட்டவிரோத செயலினை சகல இனத்தைச் சேர்ந்த தனவந்தர்களும் செய்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், இதற்கு எதிரான எந்த சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. இதற்கும் மேலாக வேலைக்கமர்த்தப்படுகின்ற மலையக சிறார்கள் கொடூர சித்திரவதைகளுக்கு உள்ளாவது தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றது. அதேபோல, பெண்பிள்ளைகள் பாலியல் சித்திரவகைள், வன்புணர்வு போன்றவற்றுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். அதில் பலர் கர்ப்பிணிகளாக மலையகம் திரும்புகின்றனர். இன்னும் சிலர் கருக்கலைப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதைப்போலவே தற்போது அம்மலையக சிறார்களது சிறுநீரகம் போன்ற உடற்பாகங்கள் பெறுவதற்காக கொலை செய்யப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. எனவே உடனடியாக மலையக அரசியல்வாதிகளும், மலையக புத்திஜீவிகளும், மலையக அமைப்புகளும் மலையகத்திற்கு கறையாக இருக்கின்ற இந்த பிரச்சனைகளை தடுத்து நிறுத்த முன்வரவேண்டும்.

- ஜீ.யோகப்பிரியா


## மாணவ சமுதாயத்தின் எதிர்காலம்...

தமிழ் மாணவர்கள் பல பிரச்சனைக்கு முகம் கொடுத்த போதும் தமது கல்வியை தொடர்ந்ததுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். யுத்த காலத்தின் போதும் கூட துணிந்து கல்வி பயின்ற இவர்கள் இன்று பாடசாலை செல்வதற்கே அச்சப்படுகின்றனர். இதற்கு கடந்த சில வாரங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது. அண்மையில் கொழும்பிலுள்ள பிரபல ஆண்கள் தமிழ் பாடசாலை மாணவர்களுக்கும், ஏனைய மூன்று பாடசாலை மாணவர்களுக்கும் இடையில் தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதனையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் தமிழ் மாணவர்கள் பலரை கைது செய்ததுடன் பெற்றோர், அதிபர் ஆகியோரின் தலையீட்டினால் அவர்களை விடுதலை செய்தனர்.

இந்த இறுக்கமான சூழலுக்கு தனியார் வகுப்பொன்றின்போது இருவேறு இன மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறே மறுநாள் பாடசாலைகளுக்கிடையிலான தகராறாக மாறியது. இந்த மாணவர்களுக்கிடையிலான சண்டையில் இனவாதம் கலக்க செய்யும் வகையில் சில கும்பல்கள் ஈடுபட்டன. இதற்கு பொலிஸாரின் மறைமுக ஆதரவும் இருந்தது என தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். அத்தோடு வீதியின் அருகில் இருந்த ஆட்டோக்காரரர்கள் தமிழ் மாணவர்கள் பலரை பலவந்தமாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தாக தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் படித்து உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்ற கனவுகளோடு, பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர். ஆனால் மாணவர்களோ பிரச்சனைகளை உருவாக்குவதால். அவர்களின் கனவுகள் பகல் கனவாகிவிடும் வாய்ப்புள்ளது. மேலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி மனநிம்மதியுடன் இருந்த பெற்றோர் இனி வரும் காலத்தில் அந்த நிம்மதிக்கும் பங்கம் வந்து விட்டதே என்று அச்சப்படும் நிலையே தோன்றியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் குறிப்பாக கொழும்பில் கல்வி பயிலும் மாணவர்கள் தமக்கு என்று ஒரு குழுவை



ஏற்படுத்தியுள்ளனர். இதனால் இந்த குழுக்களைச் சேர்ந்த மாணவர்களில் யாரேனும் ஒருவருக்கு சிறுபிரச்சனை என்றாலும் உடனடியாக அக்குழுவினர் விரைந்து வந்து தமது கைவரிசையை காட்டுவார்கள்.

இதுவரை காலமாக அரசியல் சாயம் பூசப்படாத இடமாக பாடசாலை மட்டுமே காணப்பட்டது. இன்று அதற்கும் அரசியல்வாதிகள் குறி வைத்துவிட்டனர். எப்படியாவது பாடசாலைகளிலும் செல்வாக்கு செலுத்த துடித்துக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகளுக்கு இது மிக அருமையான சந்தர்ப்பமாக அமையும். எனவே இந்த சிறு பிரச்சனையை பெரிதாக்கி அதில் குளிர்காயாமல் மாணவர்களது எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும் என்பதே பெற்றோர்களின் வேண்டுகோளாகும்.

அத்தோடு இது போன்ற காரணங்களால் இதுவரை ஏற்பட்ட தடைகளை தாண்டி கற்றுவந்த தமிழ் மாணவர்களது கல்வி செல்வம் பாதிக்கப்படக் கூடாது. எனவே அதிபர், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் இணைந்து மாணவ சமூகத்தினருடன் கதைத்து இதற்கு முற்றுப்புள்ளி வைத்தால் இனிவரும் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் உருவாகாமல் பாதுகாப்பதோடு, கல்வியையும் அரசியலாக்க நினைப்பவர்களுக்கும் இடமளிக்காமல் இருப்பதே மாணவ சமூகத்தின் சிறந்த எதிர்காலத்திற்கு உத்தரவாதமாக அமையும்.

- எஸ். கிருபாலினி

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை.தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# '....வளம்மிக்க பூமியில் வசதியாக வாழ்ந்தோம் இரவல் காணிகளில் முடங்கிக் கிடக்கிறோம்....'

கொடூர யுத்தத்தினால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் தமது வாழ்விடங்களை தொலைத்து, உறவுகளைப் பறிகொடுத்து, உடைமைகளையும் கைவிட்டு உயிரைக் கையில் பிடிததுக்கொண்டு ஓடிய மக்கள் நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர்.

அவர்களின் அவல வாழ்வு சமாதான காலததிலும் சீர்செய்யப்படாமல் தொடர்கிறது. அவர்கள் ஊர்திரும்பமுடியாமல் சொந்த நாட்டிலேயே 'அகதி' என்ற அவப்பெயருடன் அவலங்களைச் சுமந்தவாறு வாழ்வை நகர்த்துகிறார்கள்.

இவர்கள் வாழ்ந்த வனப்பான கிராமங்கள் சோபையிழந்து பாலைவனமாக உயர்பாது காப்பு வலயம் என்ற பெயரில் முடங்கியுள்ளன.

இதனால் இவர்களின் வாழ்வியல் 15 வருடங்களாக அகதி முகாமில் அடங்கியிருக்கின்றது.

இத்தகைய மக்களின் இன்றைய அவல நிலையினைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவரும் நோக்கில் இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!! என்ற விசேட பகுதியில் வாரந்தோறும் வழங்கி வருகின்றோம்.

அந்த வகையில் இம்முறை மருதனார்மடம், கண்ணகி நலன்புரி நிலையம், உரும்பிராய் யோகபுரம் நலன்புரி நிலையம் ஆகியவற்றில் தங்கியுள்ள மக்களின் அவல நிலை குறித்து அங்குள்ள மக்களோடு அளவளாவி அவர்களின் அடிப்படைத்தேவைகள் என்னவென்பதையும் எத்தகைய எதிர்பார்ப்புகளின் மத்தியில் வாழ்கிறார்கள் என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

முதலில் மருதனார் மடத்திலுள்ள 'கண்ணகி' நலன்புரி நிலையத்திற்குச் சென்றேன். இங்கு மயிலிட்டியைச் சேர்ந்த 83 குடும்பங்கள் வசிக கின்றன. மொத்தமாக 410 பேரின் வாழ்வு இதற்குள் அடங்குகிறது.

இவர்கள் தமது ஊரில் கடற்றொழிலை ஜீவனோபாயத் தொழிலாகக் கொண்டிருந்தனர். தற்போது மீன்வியாபாரத் தொழிலினைச் செய்து வருகிறார்கள்.

இங்கு தொண்டு நிறுவனங்களின் உதவியினால் வீடுகள் அரைநிரந்தர வீடாக உருப்பெற்றுள்ளன. ஆனால், வீடுகளின் அமைப்பு நெருக்கமாக - அடுக்கடுக்காக அமைந்துள்ளது. இதனால், இங்குள்ள மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்குத் தினம் தினம முகம் கொடுக்கிறார்கள்.

### அகதி முகாம் வாழ்க்கை வெறுத்தே போச்சு



மாதர் சங்கத் தலைவியான செல்வம் மலர்விழி என்ற ஆறு பிள்ளைகளின் தாயான பெண்மணி இப்படிச் சொல்கிறார்.

நாங்கள் 89ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வன்னிவரைக்கும் ஓடித் திரிந்து விட்டு 2001ஆம் ஆண்டுதான் இந்த முகாமுக்கு வந்துசேர்ந்தோம்.

எங்களுக்கென்றொரு அரைநிரந்தர வீட்டினைத் தொண்டு நிறுவனங்கள் கட்டித்தந்திருக்கின்றார்கள். ஆனால், அதற்குள் நிம்மதியாக அமைதியாயக வாழக்கூடிய சூழல் இல்லை."

இந்த 83 குடும்பங்களுக்கும் உரிய அடிப்படை வசதிகள் போதாது. சுகாதாரச் சீர்கேடு இடநெருக்கடி என்று 15 வருஷமாய் அகதி முகாம் வாழ்க்கை வெறுத்துப்போய்ச்சு.

பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க முடியாது. அதுகளுக்குரிய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. இப்படி எத்தனை நாளைகளுத் தான்....!

நான் கல்யாணம் செய்து 2 வருஷத்தில் ஊரை விட்டுட்டு வெளிக்கிட்டனாங்கள். இப்ப நான் பேரைப்பிள்ளைகளையும் கண்டுட்டன். இத்தனைக்கு இந்த அகதிமுகாம்தான் தஞ்சமென்று வாழுறம். ஒரு நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர் இப்படி விவரிக்கிறார்.

எனக்கு மூன்று பிள்ளைகள். ஊரில கடற்றொழில் செய்தனாங்கள் இப்பவந்து கூலி வேலைக்கும் மீன் வியாபாரத்துக்கு போகிறோம்.

ஊரில என்டால் மூன்று நேரம் உழைபபம். ஆனால், இஞ்ச ஒரு நேர உழைப்புத்தான். சாப்பிடத்தான் காணும். மிச்சம்பிடிக்கிறது, பிளளைகளுக்கு பொருள்பண்டங்களை தேடுறதென்பது கஸ்ரமாயிருக்குது. வெறுமனே எங்கள்ின்ர வாழ்க்கை ஆதி காலத்தில வாழ்ந்த வேடுவரின் வாழ்க்கை மாதிரித்தான் என்று சொலலி கவலைப்படுகிறார்.

எங்கட ஊரையெல்லாம் தேவையில்லாமல தானே ஆமிதன்ர கட்டுப்பாட்டுக்குள் வைச்சிருக்கிறான். எங்கட ஊரில போய் எப்ப நிம்மதிப் பெருமூச்செறிந்து வாழப்போகிறோமோ தெரியல்ல என்று கூறிச் சலித்துக்கொள்கிறார்.

இங்குள்ள கல்வி நிலைமை பற்றித் தரவுகளை அவர்கள் கூறினார்கள். இங்குள்ள மாணவர்கள் பலர் பல்கலைக்கழக மாணவர்களாகப் பட்டதாரிகளாக இருக்கிறார்கள் என்பதை அறிந்த போது, அவர்களது முன்மாதிரியைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.



இவர்களின் கல்வி நிலை பற்றி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் தரம் 8 இல கல்வி பயிலும் டயானா என்ற மாணவியிடம் கேட்டேன்.

அப்போது அந்தப் பிஞ்சு உள்ளத்தில் உதிர்ந்த உணர்வலைகள் இப்படி....

### படிக்கிறதுக்கு ஆசைதான் ஆனால்...!

எங்கட அப்பா கூலி வேலை செய்தாலும் பரவாயில்லை எங்களுக்கு படிப்பிக்க வேண்டும் எண்டு ஆசைப்படுகினம். அதைப் பூர்த்தி செய்யவேண்டும் எண்டு அவர்களுக்கும் நிறைய ஆசைதான். ஆனால், அதற்கான சூழல் இங்கு இல்லை. எங்களுடைய முகாமுக்குள் இருக்கிற படிச்ச அண்ணா, அக்காமார் இரவு நேரத்தில் வகுப்பு எடுக்கிறவை ஆனால், அப்படி அவர்கள் மனமுவந்து படிப்பிச்சாலும் அதனை வடிவாகப் படிக்கிறதுக்கான அமைதியான சூழல் இங்க இல்லை. ஒரு சில வீட்டில ரீ.வி. சத்தம், சிலா றேடியோவின்ர சத்தத்தை நல்லா கூட்டி விடுவினம். இதனால், பல்வேறு இடையூறுகள் அது மட்டுமல்ல இரவு நேரத்தில படிக்கிறதுக்கு வெளிச்சம் இல்லை. லாம்புகளையும் பெற்றோல மாக்ஸ்"களையும் வைச்சுத்தான் படிக்கிற நாங்கள் என்றாள் அந்த மாணவி.

### மின்சார சபை அதிகாரிகள் கவனம் எடுக்கக்கூடாதா?

அங்கிருந்த முதியவர் ஒருவர் இப்படிக் கூறுகிறார்....

பிள்ளையெல்லாம் படிக்கவேணும் என்று ஆசைப்படுகினம். ஆனால், அவர்களுக்குரிய மின்சார வசதிகளோ! ஆரோக்கியமான சூழலோ! இங்கு இல்லை. மின்சார வசதியினைப் பெற்றுத்தருமாறு இலங்கை மின்சார சபையிடம் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதனைப் பெற்றுத்தருவதாகத் சொல்லுகிறார்களே தவிர செயலில் இன்னும் முடிக்கவில்லை - என்றார்.

மின்சார சபை அதிகாரிகளே இங்கு கல்வியில் ஒரு ஆரோக்கியமான மாணவ சமுதாயம் உருவாகிறது. அகதி வாழ்வில் எல்லாவற்றையும் இழந்து ஏதிலிகளாக நிற்கும் இவர்களுக்கான ஒளிவிளக்கு கல்விதான். அதனை அவர்கள் பெற்றுக்கொள்ள மின்சார வசதியினைப் பெற்றுக்கொடுக்க உரிய ஆவன செய்யுங்கள்.

### பிரதேச சபையின் பாராமுகம்!

இன்னொருவரின் ஆதங்கம் இது....

இங்கிருக்கிற 83 குடும்பங்களின் குப்பைகளையெல்லாம் ஓர் இடத்தில் நிறைத்துவைப்போம். மாதத்துக்கு ஒரு தடவை சுன்னாகம் பிரதேச சபையினர் எடுத்துக்கொண்டு போவினம். ஆனால், இது ஐந்து வருஷத்துக்கு முன்பு நடந்தது. இப்ப அந்த முறை கைவிடப்பட்டு விட்டது. இதுதொடர்பாக அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் குப்பைகளை ஏற்று வதற்கு வாகனங்கள் தட்டுப்பாடு என்று கூறிக் கைவிரிக்கிறார்கள்.

அதனால் இஞ்ச பெரும் சுகாதாரச் சீர்கேடு, நுளம்புகள், விஷப்பூச்சிகள் என்று ஏராளமாகப் பெருகிவிட்டது..... என்கிறார்.

### அடிப்படை வசதிகள் இல்லாத பாடசாலை

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் படிக்கும் மாணவன் இப்படி தன் ஆதங்கத்தை விசைப்படுத்துகிறான்.

அண்ணை நான் எங்கட ஊரில இயங்கின மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தில் தான் கற்று வருகிறேன். அந்தப்பாடசாலை இப் இந்த ஊரிலதான் தற்காலிக கொட்டில் ஒன்று அமைச்சு இயங்குது. ஆனால், அங்க அடிப்படை வசதிகள் எதுவும் பூர்த்தி செய்யப்படவில்லை. விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லை. பாட இடை வேளைகளுக்குள் விளையாட ஒரு இடமுமில்லை. வீட்டிலதான் படிக்கக்கூடிய சூழல் இல்லையென்று பார்த்தால் படிக்கிற பள்ளிக்கூடத்திலையும் இல்லை என்றால் எப்படித் தான் நாங்கள் படிக்கிறது...? எப்படித்தான் வாழ்க்கையில முன்னேறுகிறது. எங்கட ஊரைப்பார்க்க ஆசையாய் இருக்கு... எப்ப தான் விடப்போகிறார்களோ தெரியாது... மன வேதனையுடன் வார்த்தைகளை இப்படி கொட்டித்தீர்த்தான் அந்த மாணவன்.

இப்படி எத்தனை எத்தனை அவலங்கள் இந்த முகாமுக்குள் உள்ளது. அரைநிரந்தர வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கு... இவர்களுக்கு என்ன குறை? என்று வெளியிருந்து சிலர் கேட்கிறார்கள். ஆனால், தண்ணீருக்குள் மீன் அழுதால் யாருக் குத் தெரியும்? அது போலத்தான் இவர்களின் கண்ணீரின் ஆழத்தை அவர்களோடு பேசியபோது உணரமுடிந்தது. சமாதான காலததிலும் இவர்கள் மனங்களில் சமாதான சூழல் இல்லை என்பது வேதனைக் குரியது.

உரும்பிராயிலுள்ள யோகபுரம் நலன்புரி நிலையத்துக்குச் சென்றேன்.

மாதத்துக்கொருக்கா வருகினம்; பைலுகளெல்லாம் கொண்டுவந்து ஏதோ பதிவினம். அது தாறம். இது தாறம் என்று பேக் காட்டிப் போட்டு ஒண்டும் தாறதில்லை. அங்கு என்னிடம் கூறப்பட்ட முதலாவது விடயம் இதுதான்.

### தொண்டு நிறுவனங்கள் அக்கறையில்லை...




அந்த நலன்புரி நிலையத்தின் தலைவர் மனோகரன் என்ற 3 பிள்ளைகளின் தந்தையானவர் இப்படிச் சொல்கி றார்.

இந்த முகாமுக்குள் 50 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் வரைக்கும் இருக்கிறம். தெல்லிபபழையில இருந்து 89ஆம் ஆண்டு உடுத்த உடுப்புகளோடு ஆமி கலைக்கக் கலைக்க ஓடிவந்தனாங்கள்.

இங்கு 4 மலசலகூடங்கள் தான் பாவிக்கக்கூடிய நிலையில இருக்கு. பழுதுபட்ட மலசலகூடத்தைத் திருத்தித்தருவதாகப் பல தொண்டு நிறுவனங்களிட்ட கேட்டு விட்டோம். ஆனால், யாரும் அதை திருத்தித்தர முன் வரவில்லை.

**இவர்களின் வாழ்க்கை நிலை கேளீர்! பாரீர்!! 7**

# பிறர் தயவில் தங்கிவாழும் அவலநிலை இனியும் வேண்டாம்



கண்ணகி முகாமில் பாவிக்கமுடியாமல் உள்ள மலசலகூடங்கள்.

சில நிறுவனங்களின்ர உதவியால அரைநிரந்தர வீடுகளுக்குள்ள வசிக்கக்கூடியதாக இருக்குது. ஆனால், நிம்மதியாத்தான் வாழ முடியுதில்லை என்று தனது உள்ளக்குமுறலை அவர் வெளிப்படுத்தினார்.

இளம் யுவதி ஒருவர் தன்னுடைய குமுறலை இப்படி விவரிக்கிறார்...

இஞ்ச சுகாதார வசதியீனம், அடிப்படை வசதிகள் ஏதுமில்லை. பிள்ளைகளெல்லாம் வருத்தம், துன்பம் என்று கிடக்குதுகள். உழைககிற காசில அரைவாசி ஆஸ்பத்திரிச் செலவோடு போய்விடும்.

இப்படி எத்தினை நாளைக்குத்தான் இந்த நரக வாழ்க்கையை வாழுறது...?

### சின்னப் பிள்ளைகளின் கல்வி சின்னாபின்னமாகிறது...

இதைவிடுத்து 3 பிள்ளைகளின் தாயாரான ஒருவர் அகதி முகாமில இருக்கிற கல்விப் பிரச்சினையை இப்படிக் கூறுகிறார்.

இஞ்ச படிக்கிற பிள்ளைகள் 50 பேர் இருக்குது கள் அதில 30 பிள்ளைகள் வரை முன்பள்ளியில் படிக்கிறார்கள்.

அவையளுக்கென்றொரு ஓலைக் கொட்டில 'ஜசாக்' நிறுவனத்தினால் அமைக்கப்படட்து. ஆனால், அது தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் படிப்பிக்கிறதுக்கு ஆசிரியரில்லை. ஓலைக் குடிசையில பாதுகாப்பில்லை. இதனால் எங்கட சின்னப் பிள்ளையளின்ர கல்வி சின்னாபின்னமாகப் போய்க்கொண்டிருக்கிறது.

ஏதாவது நிறுவனங்கள் முன்வந்து இங்கு ஒரு வசதியான முன்பள்ளி அமைச்சு இங்குள்ள மாணவர்களின் குறிப்பாக முன்பள்ளி மாணவர்களின் எதிர்காலத் கல்விக்கு வழி காட்ட வேண்டும் என்றார்.

இங்குள்ள மக்களோடு மனம் திறந்து பேசிய போது அவர்கள் உதவிகளைவிடத் தமது சொந்த ஊருக்குப் போகவேண்டுமென்பதைத தான் விரும்புகிறார்கள்; எதிர்பார்க்கிறார்கள்.

**அபிமானன்**

பாதுகாப்பு வலயமென்ற போர்வையில் முடக்கப்பட்டிருக்கும் இவர்களின் வாழ்விடங்களில் - வளங்கொளிக்கும் பூமியில் எப்போது கால் பதிப்பது என்ற எதிர்பாாப்புடன் - கனவுடன் காலம கழிக்கிறார்கள்.

அதிகாரிகளே! இவர்களின் துன்பியல் வாழ்வினைப் புரிந்தீர்களா? இவர்கள் ஊர்போகும் வரைக்கும் இவர்களுக்குரிய வசதியான அடிப படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து சுமூகமான வாழ்வினை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு ஆவனசெய்யுங்கள்...!

தபால் மூல ஆங்கில பாடநெறிகள்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருங்கள் நாம் அங்கு உங்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கின்றோம்

Free அழகிய கைக்கடிகாரம் மற்றும் அழகிய கிளியர் பேக் பைல் ஒன்றும் இலவசம் முந்திக்கொள்ளுங்கள் Free

விபரங்களுக்கு சுயவிலாசத்துடன் 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறவும்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 077-3123523



ஆங்கிலம் கற்க வேண்டும் என்ற ஆசையா? இதோ?

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி E.L.I. யின் தபால் மூலம் பாடநெறிகள்

அழகிய குடை, டீசேட்டை இலவசமாக பெறுங்கள்

* பாடநெறியைத் தொடரும் உங்களுக்கு இலவச குடை ஒன்று
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கிடெக் ஒன்று
இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும்



மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 0777-220002, 802849


## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தென்மராட்சி,ஓக.14

வரணி இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்பட்ட தொழில் பயிற்சியில் பங்குபற்றிய பயிலுநர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி பி.ப. 4 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் முதன்மைவிருந்தினராகக் கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கவுள்ளார். (எ-117)

## சோயா பால் பைக்கற்றுக்கள் விநியோகம்

தென்மராட்சி,ஓக.14

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவென 24 ஆயிரம் சோயா பால் பைக்கற்றுக்களை வழங்கியுள்ளனர்.

மருதங்கேணி உதவி அரச அதிபரிடம் பால் பைக்கற்றுக்களை லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் கடந்த வியாழனன்று கையளித்தனர்.

லண்டனில் இருந்த தருவிக்கப்பட்ட பால் பைக்கற்றுக்களை கொழும்பு லயன்ஸ் கழகம் ஒன்று வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## சந்நிதி ஆலயச் சூழலில் பிரதேச செயலக அலுவலகம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயிலின் வருடாந்த உற்சவத்தையொட்டி வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகத்தின் உப பணிமனையொன்று கோயில் சுற்றாடலில் இயங்கிவருகிறது.

இப்பணிமனையில் தினமும் இரு கிராம சேவையாளர்கள் சுழற்சி அடிப்படையில் கடமையாற்றி வருகின்றனர். (எ-173)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

மந்திகைப் பகுதியில் உலாவிய கட்டாக்காலி நாய்கள் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் அனுசரணையுடன் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டன.

இவ்வாறான கட்டாக்காலி நாய்கள் ஒரே நாளில் மந்திகைச் சந்தைப்பகுதியில் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டதுடன், அவை பருத்தித்துறை பிரதேச சபை சுகாதாரத் தொழிலாளர்களால் ஆனைவிழுந்தான் மயானப் பகுதிக்கு எடுத்துச்செல்லப்பட்டு புதைக்கப்பட்டன. (எ-173)

## சேக்கிழார் மாநாட்டை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஓக.14

ஐந்தாவது உலக சேக்கிழார் மாநாட்டை முன்னிட்டு அறநெறிப் பாடசாலைகள், இந்து நிறுவனங்கள், கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிடையில் மாவட்ட மட்டத்தில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

அடுத்தமாதம் 9 ஆம்,10 ஆம், 11 ஆம் திகதிகளில் கொழும்பில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை முன்னிட்டே இந்த போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரை, சைவசமய அறிவு, பண்ணிசை, பேச்சு, தெய்வீகநாடகம், ஆகிய போட்டிகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு சைவசமய அறிவுசார் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப்போட்டி ஆகியனவும் -

பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, ஆசிரியர்கலாசாலை போன்றவற்றின் மாணவர்களுக்கு எழுந்தமான பேச்சுப்போட்டியும் -

அறநெறிப்பாடசாலை அணியினர் இந்து சமய நிறுவனங்கள், சைவமன்றங்கள் போன்றவற்றைச் சேர்ந்தவர்களுக்கு திறன்காண் போட்டிகளும் - நடத்தப்படவுள்ளன. (எ-203-202)


S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே கேட்டு வாங்குங்கள்




Rediffusion | DYR

எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீரக்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

# '...நிச்சயமாக எங்களால் முடியும்!'

**பெனடிக்ற்:-** என்ன நாடப்பா, பங்குனியிலையும் பாருமன் பனி கொட்டுது .... மடிச்சு வச்ச உடுப்பு எல்லாத்தையும் திருப்பி எடுத்து போடவேண்டியெல்லோ இருக்கு

**முருகையா:** எங்கட நாடெண்டா எப்படி இருக்கும் சொல்லுங்க பார்ப்பம்.

**மாஸ்ரர்:-** அந்தமாதிரி ... ஆ.

**முருகையா:-** இந்தநேரம் பனங்கள்ளில ரண்ட அடிச்சு... ஒரு பிரிஸ்டல் சிகரெட்டையும் பத்தவச்சா எவ்வளவு சந்தோஷமா இருக்கும்.

**பெனடிக்ற்:-** மாஸ்டர்... இப்பநாங்கள் இஞ்ச வந்து நாட்டை குறைசொல்லுறம்.. நீங்களென்ன சொல்லுறியள்

**மாஸ்ரர்:-** நாட்டை குறை சொல்லுறதில நாங்கள் நம்பர் வண்... இப்ப பார்... இந்த நாடு எங்களுக்கு அடைக்கலந் தந்தநாடு... நேரந்தவறாம, காலந்தவறாம மாசாமாசம் காசு தருகுது.

**முருகையா:-** அது மாத்திரமில்ல... வயது போன எங்களுக்கு தங்குறதுக்கு வீடு...

**மாஸ்ரர்:-** 'சீனியர் ஹோம்'.

**முருகையா:-** புள்ள குட்டியளோட ஏதும் கொளுவல் எண்டால் டக்கெண்டு அங்கபோய் இறங்கிறது.

**மாஸ்ரர்:-** இவ்வளவு வசதியச் செய்துதந்த நாட்டை சும்மா காலஞ்சரியில்லை எண்டு குறை சொல்லுறது சரியான 'பாட்' ஆன விஷயம் கண்டியோ...

*(உரையாடல் தொடர்கிறது)*

இதனை படிக்கும்போதே இந்த உரையாடல் நமது நாட்டில் இடம்பெற்ற ஒன்றல்ல என்பதை எவரும் புரிந்துகொண்டிருப்பீர்கள். நீங்கள் நினைப்பது போல இது கனடாவின் ரொறன்ரோ நகர் வீதி ஒன்றில் இடம்பெற்ற சம்பாஷணைதான். ஆனால், ஒரு திரைப்படத்தில் வரும் காட்சியே இது என்று சொல்லும்போது உங்கள் புருவங்கள் ஆச்சரியத்தில் உயர்ந்து

**மட்டக்களப்பிலிருந்து**
**வி.ரி.சகாதேவராஜா**

தான்விட்டன.

கனடாவில் இருந்து ஒரு தமிழ்த் திரைப்படம் வெளிவந்திருக்கிறது - சகா-SHAHA. ரூபாவாஹினி மற்றும் இலங்கை வானொலி ஆகியவற்றின் முன்னாள் கலைஞர் திவ்வியராஜன் இந்தத் திரைப்படத்தை இயக்கியுள்ளார். இத்திரைப்படத்தின் கதை, வசனம், பாடல், இசை ஆகிய பணிகளையும் இவரே மேற்கொண்டுள்ளார்.

இந்தத் திரைப்படம் கனடாவில் வாழும் தமிழீழத் தமிழ் இளைஞர்கள் மத்தியில் இடம்பெற்ற உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. இன்று காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் 'சகா' திரையிடப்படுகிறது.

● இந்தத் திரைப்படத்தின் கதை என்ன?- இயக்குநரிடம் கேட்டோம்.

''இது கதையல்ல நிஜம்'' என்றார் சிரித்துக் கொண்டே.

''புலம் பெயர்ந்து கனடாவில் வாழும் ஈழத் தமிழ் கலைஞர்கள் சிலருடைய சினிமா முயற்சியின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்ட திரைப்படம்தான் 'சகா'. அங்கு வாழுகின்ற ஈழத் தமிழர்களுடைய வாழ்க்கைக் கோலங்களின் ஒரு பதிவு இது. அதைவிடுத்து இத்திரைப்படத்தில் குறிப்பிட்ட ஒரு குடும்பத்தின் அல்லது கிராமத்தின் கதையையோ அல்லது ஒரு கதாநாயகனையோ இங்கு காணமுடியாது. அனைவருமே சாதரண மனிதர்களாகத்தான் பார்க்கப்படுகின்றார்கள்''-

தென்னிந்தியச் சினிமாவை சாடும் வகையில் இயக்குநரின் பேச்சுத்தொனி அமைந்திருந்தது. தூண்டில் போட்டோம்.

● அப்படியானால் 'சகா' திரைப்படம் எமது மக்களுக்குப் பழக்கப்பட்டுப்போன தென்னிந்தியத் திரைப்படங்களின் போக்கிலிருந்து மாறுபடுகின்றதா?

''தென்னிந்தியத் திரைப்படங்கள் ஒரே 'மசாலா' கதைகள் தானே! முற்றுமுழுதாக வர்த்தக நோக்கில் தயாரிக்கப்படும். அவை குறிப்பிட்ட 'Formula'வை விட்டு வெளியே வருவதில்லை. சண்டை, நடனம், பாடல் காட்சிகள் என்று ஒவ்வொரு அம்சங்களிலும் குறிப்பிட்ட பாணி பின்பற்றப்பட்டிருக்கும்.

''தென்னிந்திய திரைப்படத்தில் சண்டைக் காட்சிகளின்போது கதாநாயகன் தன்னிகரில்லாத் தலைவனாக சித்திரிக்கப்படுகிறான். ஹொலிவூட் திரைப்படங்களிலும் சண்டைக்காட்சிகள் இருந்தாலும் அவற்றில் நம்பகத்தன்மை இருக்கும்.

''தமிழ்நாட்டுத் திரைப்படங்கள் கலாசாரம் என்று உரத்துச் சொல்லிக்கொண்டு மறுபுறம் பெண்களை நுகர்வுப் பண்டமாகவும், கேளிக்கைக்குரியவர்களாகவுமே சித்திரிக்கின்றன. கமராக்களின் பார்வை சமூகச்சீரழிவையே ஏற்படுத்துகின்றது. ரசிகர்களின் ரசனையை கீழ் மட்டத்திலேயே பேணுவதற்கு இவை அடிகோலியுள்ளன.''

● உங்களுடைய கருத்துப்படி ஈழத்தமிழர்களின் திரைப்படப் போக்கு எப்படி அமைய வேண்டும்?

''தென்னிந்தியத் திரைப்படங்களை 'Copy' செய்வதை விட்டுவிடவேண்டும். ஆனால், மக்கள் மனங்களை வெல்லவேண்டியுள்ளது. ரசிகர்களின் கீழ்மட்ட ரசனையை மாற்றுவதற்கு போராட வேண்டியுள்ள அதேவேளை, கீழ் நிலையிலுள்ள ஈழத்துத் திரைப்படத்துறையையும் கட்டி வளர்க்க வேண்டியுள்ளது. இவை இலகுவான விடயங்கள் அல்ல.''

இயக்குநர் திவ்விராஜன் 1994ஆம் ஆண்டில் கனடாவுக்கு புலம்பெயர்ந்து சென்றிருந்தார். இலங்கையில் இருந்தபோது ஆற்றிவந்த கலைப் பணியை






இவர் புலம்பெயர்ந்து சென்ற பின்னர் அங்கும் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

யாழ்.வரணியைச் சொந்த இடமாகக் கொண்ட திவ்வியராஜன் திரு. திருமதி வைரமுத்து தம்பதியின் மூன்றாவது புதல்வராவார். 1951 ஆம் ஆண்டு ஓகஸ்டில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை வரணி மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பயின்றார். கொழும்பு பல்கலைக்கழக அபிவிருத்திக் கல்விப் பட்டதாரியான இவர் சிறு வயதிலிருந்தே கலைகளில் ஆர்வம் கொண்டிருந்தார்.

படிப்பை முடித்துக்கொண்டு இலங்கை வானொலி அணியில் இணைந்துகொண்ட இவர், மெல்லிசைப் பாடகராகவும் நாடக நடிகராகவும் மேடை நடிகராகவும் விளங்கி வந்தார்.

அகில இலங்கை ரீதியான பல போட்டிகளில் பங்கு பற்றி சிறந்த நடிகருக்குரிய விருதுகளை இவர் பெற்றார்.

பேராசிரியர் மௌனகுரு, தார்சீஸியஸ், நா.சுந்தரலிங்கம், பத்தன்னா போன்றோருடன் இணைந்து இவர் நாடகப் பயிற்சிப்பட்டறைகள் பலவற்றை நடத்தியுள்ளார். நடிகர் ஒன்றியம், அம்பலத்தாடிகள் ஆகிய கலைச்சங்கங்களுடன் இணைந்து திவ்யராஜன் மேடையேற்றிய 'கந்தன் கருணை', 'விழிப்பு' போன்ற புகழ்பெற்ற நவீன நாடகங்கள் இசை - நாடக வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தின.

தற்போது கலையை ரசிக்கும் ரசிகர்கள் அருகி விட்டனர் என்பது திவ்வியராஜனின் குற்றச்சாட்டு.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# ஆழிப்பேரலை பாதித்தோரின் மீள்குடியேற்றம் எப்போது?

✱ வடக்கு - கிழக்கில் 80 ஆயிரத்து 532 வீடுகள் சேதம்.

✱ 16 ஆயிரத்து 934 பேர் பலி; 5 ஆயிரத்து 589 பேர் மாயம்.

✱ ஆமைவேகத்தில் மீளக்குடியேற்ற நகர்வுகள்.

✱ காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டாலன்றி..

✱ 121 பாடசாலைகளை அமைப்பதெங்கே?

ஆழிப்பேரலை தாக்கி 8 மாதங்களாகின்ற போதிலும் இன்றும் மக்கள் முன்னுள்ள பாரிய எதிர்பார்ப்பு மீள்குடியேற்றம் ஆகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் காலங்கடத்தி வரும் ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 544 பேரும் எதிர்பார்ப்பது நிரந்தர வதிவிடத்தையே என்றால் மிகையில்லை.

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையில் சிக்கி 16 ஆயிரத்து 934 பேர் இறந்துள்ளனர். 5 ஆயிரத்து 589 பேர் காணாமல் போயுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் 9 ஆயிரத்து 50 பேரும், மட் டக்களப்பில் 2 ஆயிரத்து 480 பேரும், முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 771 பேரும், யாழ்ப்பாணத்தில் ஆயிரத்து 167 பேரும், திருகோணமலையில் ஆயிரத்து 76 பேரும், கிளிநொச்சியில் 30 பேரும் ஆழிப்பேரலையால் இறந்துள்ளனர்.

காணாமற்போனோர் வரிசையில் அம்பாறையில் 2 ஆயிரத்து 267 பேரும், மட் டக்களப்பில் 952 பேரும், முல்லைத்தீவில் 552 பேரும், யாழ்ப்பாணத்தில் 540 பேரும், திருகோணமலையில் 337 பேரும், கிளிநொச்சியில் ஒருவரும் அடங்குகின்றனர்.

வடக்கு- கிழக்கில் மொத்தம் 80ஆயிரத்து 532 வீடுகள் சேதமாகியுள்ளன. அவற்றில் 62

**காரைதீவிலிருந்து**
**வி.ரி.சகாதேவராஜா**

ஆயிரத்து 949 வீடுகள் முழுமையாகவும், 17 ஆயிரத்து 583 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. இவற்றில் அம்பாறையில் 29 ஆயிரத்து 77 வீடுகளும், மட்டக்களப்பில் 15 ஆயிரத்து 939 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 6 ஆயிரத்து 680 வீடுகளும், திருகோணமலையில் 5 ஆயிரத்து 974 வீடுகளும் , முல்லைத்தீவில் 5 ஆயிரத்து 33 வீடுகளும், கிளிநொச்சியில் 246 வீடுகளும் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இடிபாடுகள் இன்னமும் அகற்றப்படவில்லை.

**இன்றைய நிலை!**

சரி, இந்த ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் 96 ஆயிரத்து 255 குடும்பங்களைச் சேர்ந்த 3 லட்சத்து 46 ஆயிரத்து 632 பேர் இடம்பெயர்ந்துள்ள அதேவேளை ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 793 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 65 ஆயிரத்து 149 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு- கிழக்கில் இன்று 232 நலன்புரி நிலையங்கள் இயங்கிவருகின்றன. அவற்றில் 53 ஆயிரத்து 223 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 544 பேர் தங்கியுள்ளனர்.

இதனைவிட 43 ஆயிரத்து 32 குடும்பத்தினர் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர். எனினும் 58 ஆயிரத்து 240 குடும்பத்தினர் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

வடக்கு- கிழக்கில் 80 ஆயிரத்து 532 வீடுகள் அழிக்கப்பட்டு அதேவேளை 121 பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன. 67 பாடசாலைகள் முழுமையாகப் பாதிக்கப்பட்டும், 54 பாடசாலைகள் பகுதியாகப் பாதிக்கப்பட்டும் உள்ளன.

அதேவேளை இந்தப் பாடசாலைகளில் 50 வீதமான பாடசாலைகள் கடல் எல்லையிலிருந்து 100 மீற்றர் பரப்பிற்குள் வருகின்றன. -இவற்றை மாற்று இடத்தில் அமைக்கவேண்டும். ஆனால், அதற்கான காணியைப் பெறுவதில் பாரிய பிரச்சினை எதிர்நோக்கப்படுவதாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் கூறியுள்ளார்.

மாணவர் கல்வி நிலை மீள்வதற்குப் பல மாத காலங்கள் எடுக்கலாமென்று அவர் ஆருடம் தெரிவித்துள்ளார். மேலும் பல பாடசாலைகளில் அகதி முகாம்கள் இயங்கிவந்ததால் அவற்றை மீளத் திறக்கமுடியாத நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் இன்று எந்த முகாமும் பாடசாலைகளில் இல்லை...

**காணிப் பிரச்சினை**

வடக்கு - கிழக்கில் முற்றாக அழிந்த 67 பாடசாலைகளை மீள அமைப்பதற்குக் காணியைப் பெறுவதில் பாரிய சிக்கல்கள் எதிர்நோக்கப்படுகின்றன. இப்பாடசாலைகளை நிர்மாணிக்கப் பல வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் கோடிக்கணக்கில் வாரி வழங்க முன்வந்துள்ளன. ஆனால், அதற்கான காணியைக் காட்டுமாறு அவை கோரியுள்ளன. காணியைக் காட்டுவதென்பது இன்று அதிபர்கள் மத்தியில் தலையிடியைக் கொடுக்கும் செயலாகவுள்ளது. இவற்றுக்கான காணியை இனங்கண்டு பெறுவதில் கல்விச் சமூகமும் பாடசாலை சார்ந்த சமூகமும் கூடிய அக்கறையைச் செலுத்த வேண்டுமென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் கேட்டுள்ளார்.

எனவே, காணியைக் காசு கொடுத்து கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது விதிமுறைகளை மாற்றிக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் அரசு இலகுவாக ஆனால், துரிதமாக இக் காணிகளுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்குவதன் ஊடாகவும் காணிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

எத்தனையோ வெளியூர், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏனைய நடவடிக்கைகளுக்காக பலகோடி ரூபாக்களை இறைத்து வருகின்றன. அந்த நிதி சிலசந்தர்ப்பங்களில் வீணாகவும் போகிறது. ஒப்பந்தகள்செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பமாகின்றன. அதனைக் கல்விக்காக செலவுசெய்ய அவை முன்வரவேண்டும்.

காணியைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது சட்டதிட்டங்களை மாற்றாதவரை பாடசாலைகளை மீள புதிய இடத்தில் நிர்மாணிக்கமுடியாத

## முற்றாக அழிந்த பாடசாலைகளைக் கூட மீள நிர்மாணிக்கமுடியாத பரிதாபநிலை

நிலை தோன்றும் எனலாம்.

**மக்கள் மீள்குடியேற்றம்!**

வடக்கு- கிழக்கின் 6 மாவட்டங்களில் சுமார் 36 வீதமான பிரதேசம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் 80 ஆயிரத்து 532 வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றில் கடற்பரப்பில் 200 மீற்றர் தூரத்தில் வருபவை 62 ஆயிரத்து 949 வீடுகள்.

முதற்கட்டமாக, இந்த 62 ஆயிரத்து949 வீடுகளில் வசித்த 3 லட்சத்து 46 ஆயிரத்து 632 பேரை மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பது இன்றைய தேவையாகும். வடக்கு-கிழக்கில் இன்று 232 நலன்புரி நிலையங்களில் வாழும் ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 544 பேரைத் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் ஓரிருவாரங்களில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களுக்கான நிரந்தர அமைவிடம் கேள்விக்குறியாகவுள்ளது. அதற்குப் பலகாரணங்களுள்ளன. அரசாங்கத்தின் கொள்கைப்படி முதல் 100 மீற்றரில் வீடு அமைக்க அனுமதி இல்லை. அதற்காக உரிமையாளர்களின் உரிமை அகற்றப்படமாட்டாது. அப்பரப்பு மீன்பிடித்துறைக்கும், சூழல் பாதுகாப்பிற்கான மரங்கள் நடுவதற்கும் பயன்படுத்தப்படும். இரண்டாவது 100 மீற்றரும் வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை முதல் 100 மீற்றருக்குள் சட்டதிட்டங்களே பொருந்தும். ஆனால் தெற்கில் வேறு நிலைவரம்.

இந்நிலையில் முதல் 200 மீற்றருக்குள் வாழும் மக்களுக்கான நிரந்தர அமைவிடத்தைத் தீர்மானிப்பதில் பலகாரணிகள் இடம் பிடிக்கின்றன. யு.டி.ஏ. என அழைக்கப்படும் நகர அபிவிருத்தி அதிகாரசபை முக்கிய இடம் வகிக்கிறது.

பிரஸ்தாப 3லட்சத்து 46ஆயிரத்து 632 பேரை மீளக் குடியேற்றுவதில் மாநகரசபைப் பகுதியாயின் நகர அபிவிருத்தி அதிகாரசபை பிரதான பாகமெடுக்கும். இச்சபை வீடமைப்புத் திட்டத்தை திட்டமிட்டுக் காணியை இனங்கண்டு கொடுத்தால் மாநகரசபை அதனை பணம் கொடுத்து வாங்கும். பின்னர் அதனை அதிகார சபையிடம் வழங்கினால் வீடு கட்டிக்கொடுக்கும். சில பகுதிகுளில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டு நஷ்டஈடு வழங்கி காணியைப் பெற்று மண் நிரப்பி, வீடுகளை அமைத்துத் தருமெனக் கூறப்படுகிறது. இதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கெமுனு சில்வா துரிதமாகச் செயற்படுகிறார்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பெரிய நீலாவணை., பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக் குடி, சாய்ந்தமருது.மருதமுனை ஆகிய கிராமங்களுக்கு இது செல்லுபடியாகும்.

அதன்படி, மேற்கூறப்பட்ட பிரதேசங்களின் மேற்குப் புறம் பிரதான வீதிக்கு அப்பாலுள்ள வயற்காணியை நிரப்பி வீடமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கல்முனையில் இப்பணி ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. வீடும் கட்டப்பட்டுகிறது. சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனைப் பகுதியில் காணி சுவீகரிப்பிற்பான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு விரைவில் காணி பெறப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வழங்கப்படவுள்ளது. பின்பு அரசசார்பற்ற நிறுவன உதவியுடன் வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அனுசரணையுடன் வீடுகளை நிருமாணிக்கும்.

ஆனால், இந் நடைமுறை பிரதேசசபைகளுள்ள நிந்தவூர், காரைதீவு, திருக்கோவில் பொத்துவில் பகுதிகளுக்குப் பொருந்தாது எனக் கூறப்படுகிறது. எனினும் அப்பாறை அரச அதிபர் மாநாட்டில் இப்பகுதிகளையும் நகர அபிவிருத்தி அதிகார சபை கவனிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ✱

எம் நெஞ்சங்களில் தெய்வமாகிய


# 2ஆம் ஆண்டு நிறைவு நாள்

அன்னை மடியில்

01

10

1939



மணற்காட்டு அம்மன் பாதங்களில்

06

08

2003

## திருமதி
## தியாகரர்சா பாக்கியம்

(பலகாடு–காரைநகர்)

தீதி-பூர்வ பக்க நவமி

தாய் மனசு தங்கம்

நான் அறிந்த தெய்வம்

நன்றி சொல்லப் போதாது அம்மா

ஏழேழு ஜென்மம்

என்றென்றும் மாறாத பந்தம்.

பலகாடு - காரைநகர்.
இல 87, ஒட்டுமட வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

அமரரின்
குடும்பத்தினர்.

# "...ஊர் போகும்வரைக்கும் எங்களுக்கு நிம்மதியான வாழ்விடம் தேவை..."

## வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல் முகாம் மக்கள் மனங்களில் இருந்து............7

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இருதடவைகள் பெரும் இழப்புகளைச் சந்தித்துள்ளார்கள்.

இவர்கள் 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு, வன்னி எனப் பல இடங்களில் பிரிந்து வாழ்கின்றார்கள்.

இவர்களுக்கு நிம்மதியான வாழ்வு எப்படி ஏற்படும், எப்போது ஏற்படும் என்பது கேள்விக்குறியே.

பாதிப்புற்றவர்களின் வாழ்விற்கான தொழில் வளங்களுக்கு ஏற்றாற்போல் வாழ்வளிக்கும் வீடுகள் அமைக்கப்படவில்லை. அவர்களின் அத்தியாவசிய தேவைகளுக்கான வசதிகள் அமைக்கப்படவில்லை.

இவைகளைப் பல இடங்களில் பார்க்க முடிகின்றது.

இது பாதிப்புற்ற மக்களின் தேவைகளையும், மனங்களையும் நிறைவு செய்யாது.

அதேபோல்தான் பல நிறுவனங்கள், வெற்றுக்கட்டாந்தரைகளிலும் மணல் வெளிகளிலும் வெகு தொலைவிலும் வீடுகளைக் கட்டத் தயாராகியும், கட்டியும் வருகின்றன. இது யாருக்கும் பலன் ஏற்படுத்தாது. இதனால் பணம், பொருள் போன்றன வீண் விரயமாகும் என்றே பலரும் சுட்டிக்காட்டுகின்றர். பாதிப்புற்றவர்களின் தேவை, நிலை அறிந்து உதவி செய்தால் அனைவரும் நிறைவு பெறலாம் என்பதே பலரதும் அபிப்பிராயமாக இருக்கின்றது.

### மீன்வியாபாரிகளுக்கும் நிவாரணம் வேண்டும்.



வர்ணவாய்
அந்தோனிப்பிள்ளை
(வயது-62)
5 பிள்ளைகள்
தொழில்:- கடல் றொழில்
நிரந்தர இடம்:- அன்ரனிபுரம், பலாலி.
தற்காலிக இடம் :- பொலிகண்டி, நிலவன்முகாம்

1990 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பின் போது 5 லட்சம்ரூபா பெறுமதியான உடமைகளை விட்டு வெளியேறி வடமராட்சிக்குவந்து பல தற்காலிக இடங்களில் தங்கினோம். பின் 1992 ஆம் ஆண்டளவில் பொலிகண்டி நிலவன் குடியிருப்பு முகாமில் தங்கி வருகின்றோம்.

இங்கு எமது பலாலி ஊரைச் சேர்ந்த 30 குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த உடமைகளை விற்றுப் பணமாக்கிச் கடற்றொழிலை சிறியளவில் நான் நடத்தி வந்தேன்.

முன்பு சொந்தமாகக் கட்டுமரம், வலைகள் வைத்திருந்து தொழில் செய்து வந்த நான் பின்பு இங்கு மீன் வியாபாரம் செய்து வருகின்றேன்.

சிறுகச்சிறுகச் சேமித்து தற்காலிக வீட்டின் திருத்தவேலைகளைச் செய்துவரும் வேளையில், திடீரென சுனாமி வந்து சுமார் 2 லட்சம் பெறுமதியான எனது உடமைகளை அள்ளிச் சென்றுவிட்டது.

நாம் தற்போது வாழும் வீடும் காணியும் நிரந்தரமல்ல. எம்மைக் காணிச் சொந்தக்காரர் எப்போதும் எழும்பச் சொல்லலாம்.

மேலும் 30 குடும்பத்தினர் உள்ள எமது இடைத்தங்கல் முகாமில் 2 மலசல கூடங்கள் மட்டுமே உள்ளன. ஒன்று தற்போது சேதமடைந்த நிலையில் பாவிக்க முடியாதுள்ளது.

எனவே, பெண்களுக்கும் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து ஆண்களாகிய நாம் வெற்றுக்காணி மறைவிடங்களை மலசல கூடமாகப் பயன்படுத்திவருகின்றோம்.

எமது முகாமை சுகாதாரப் பிரிவினர் யாரும் வந்துபார்ப்பதில்லை. சுத்தம் பேணப்படாததால் தொற்றுநோய்களும் பரவுவது அதிகம். சுத்தமான நீர் கிடைப்பது அரிது.

### ஓட்டைக் குடிசையில் ஐந்து பிள்ளைகளுடன்...

தாவீது ஜெனிப்பிறேற் அன்ரன்
(வயது -40)



5பிள்ளைகள்
தொழில்:- கடற்றொழில்
நிரந்தர இடம் :- பலாலி, சந்தியடி.
தற்காலிக இடம் :- பொலிகண்டி, இடைத் தங்கல் முகாம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பினால் 5 லட்சம் ரூபா பெறுமதியான உடமைகளை விட்டு வெளியேறி வடமராட்சிக்கு வந்தோம். பல இடங்களில் தற்காலிகமாக இருந்தோம். தற்போது பொலிகண்டி இடைத்தங்கல் முகாமில் இருக்கின்றோம்.

திடீரென வந்து தாக்கிய ஆழிப்பேரலையால் எனது மனைவியான ஜெ.மேரி செல்வராணியை (வயது-39) இழந்தது டன் சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான உடமைகளையும் இழந்துள்ளேன்.

சுனாமி அலையின் கட்டிட இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி எனது இடது கால் முறிந்துவிட்டது. தொழில் செய்ய முடியாதநிலை.

• எனது கடைசிப் பிள்ளைக்கு ஒரு வயது. ஓட்டைக் குடிசையில் எனது மனைவியின் வயதானதாயாரின் உதவியுடனும் ஐந்து பிள்ளைகளுடனும் வாழ்கின்றேன்.

'கியூமெடிக்கா' எனக்கு பிளாஷ்டிச் படகு தந்துள்ளது; இயந்திரம் வழங்கப்படவில்லை. இதனால், தொழிலும் செய்ய முடியவில்லை.

எமது சொந்தக்காணி, சொந்தவீடு இருந்தால் எமது எண்ணத்திற்கு ஏற்றவாறு கடன் பட்டாவது எமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தலாம். இது தற்காலிக முகாம்தானே. இதற்கு வங்கிகளோ நிறுவனங்களோ உதவி செய்யமாட்டாதாம்.

நாங்கள் நிம்மதியாக வாழ நிரந்தரக் குடியிருப்பை அமைத்துத்தாருங்கள் எனக் கேட்கின்றோம்.

எனது பிள்ளைகளாவது கஷ்டப்படாமல் நல்லபடிப்புப் படித்து வளமாக வாழவேண்டும் என எண்ணுகின்றேன். எனவே, பிள்ளைகளின் கல்வியை முதன்மையாக வைத்து எனக்கு நிரந்தர குடியிருப்பு ஒன்றை அமைத்துத் தருமாறு அரசையும் உதவிவழங்கும் நிறுவனங்களையும் வேண்டுகின்றேன் - என்கிறார் மனைவியை இழந்து, உடமைகளையும் இழந்து 5பிள்ளைகளுடன் அல்லலுறும் அன்ரன்.

தன் மனைவியின் இழப்பீட்டுத் தொகையாக அரசு 15 ஆயிரம் ரூபா மட்டுமே தந்ததாகவும் அவர் கூறினார்.

### இனியும் கஷ்ரப்பட ஏலாது நிரந்தரமான இடம் வேண்டும்



பவுலின் அப்பு
வலன்ரைன்
ஜெயக்குமார்
(வயது-30)
3 பிள்ளைகளின் தந்தை
தொழில்:- கடற்றொழில்
சொந்த இடம்:- பலாலி வடக்கு.
தற்காலிக இடம்:- பொலிகண்டி, தற்காலிகமுகாம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ ஆக்கிரமிப்பினால் 7 லட்சம் ரூபா பெறுமதியான வீடு, போட், எஞ்சின், வலை, பொருள்கள் போன்ற உடமைகளை இழந்து வடமராட்சி வந்து சேர்ந்துள்ளோம்.

சுனாமித்தாக்குதலின் போது நானும் எனது குடும்பத்தவரும் செம்பியன்பற்று வடக்கு, கடற்கரையடியில் எமது உறவினரின் கொண்டாட்டத்திற்குச் சென்றிருந்தோம். அவ்வேளை, அங்கு வீசிய சுனாமி அலையினால் எனது மனைவி வ.புலோமினா (வயது-30), இரண்டாவது மகன் வ.நிசாந் (வயது-9), மூன்றாவது மகள் வ.பவித்திரா (வயது-5) ஆகியோர் மரணமானார்கள்.

மேலும், கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்ட எனது வீடும் கடற்றொழில் உபகரணங்களும் அழிந்துபோய்விட்டன. சொந்தக் காணியின்மையால் எமக்கு அரசாங்கமோ தொண்டர் நிறுவனங்களோ வீடு சம்பந்தமான எந்த உதவியையும் வழங்கவில்லை.

எனவே, நாம் வடமராட்சியில் தங்குவதற்கும் தொழில் செய்வதற்கும் பட்டபாடு போதும். எம்மை இங்கிருந்து ஒரு நிரந்தரமான இடத்திற்கு அனுப்பிவைத்தால் போதும்.

அதுவும் வலிகாமப் பிரதேசத்தில் எமது தொழில் செய்வதற்கு ஏற்ற வசதிகளுடன் நிரந்தரமாகத் தங்க வைத்தால் பெரும் புண்ணியமாக இருக்கும் - எனத் தெரிவித்தார் மூன்று குடும்ப உறுப்பினர்களை இழந்த ஜெயக்குமார்.

### இதுவரை காலமும் பட்டது போதும்



ஞானப்பிரகாசம்,
அந்தோனிப்பிள்ளை
(வயது-41)
பலாலி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தலைவர்.
2 பிள்ளைகள்
தொழில்:- கடற்றொழில்
நிரந்தர இடம் :- பலாலி வடக்கு.
தற்காலிக இடம் :- பொலிகண்டி இடைத் தங்கல் முகாம்.

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையினால் படகு, எஞ்சின், வலை, வீடு, உடமைகள் எனப் 16 லட்சம் இழப்புகளுடன் இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு வந்தோம்.

எமது இடைத்தங்கல் முகாமில் 20 குடும்பங்கள் இருக்கின்றன. மலசல கூடம் வசதி போதாது. சிறுவர் படிப்பதற்கு முன்பள்ளி கிடையாது. தொழில் செய்வதற்கு இடவசதிகள் இல்லை. வெயில் வேளையில் வீட்டிற்குள் இருக்கமுடியாது; ஒரே புழுக்கம். சிறிய வீடு, இரவு படுக்கவும் ஏலாது, காற்றோட்டமும் இல்லை.

தற்போது தொண்டைமானாறு காற்றாடிப் பகுதியில் 500 வீட்டுத்திட்ட அடிப்படையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

எமது பலாலி மக்கள் வடமராட்சி கிழக்கு குடத்தனை முதல் வடமராட்சி வடக்கு தொண்டைமானாறு வரை 507 குடும்பங்கள் இருக்கின்றார்கள். இதுவரை யாழ்.சீயோன் தேவாலயத்தால் 62 சைக்கிள்கள், 2 தையல் இயந்திரங்கள், சங்கத் தேவைக்கென ஒரு மேசையும் சில கதிரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கென சைக்கிள்கள் கேட்டோம். பாலர் பாடசாலைக்கென உதவிகள் கேட்டோம், எவ்வித உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை.

இந்தத் துன்பங்கள் துயரங்களுடன் எம்மால் எப்படி இந்த இடைத்தங்கல் முகாம்களில் வாழ முடியும்.

சொந்தக் காணி என்றால்தான் நிரந்தர வீடுகட்ட முடியும் என்பதனால் ஓரளவு வசதி உள்ள எம்மவர் காணி வாங்கச் சென்றால் ஒரு நாள் ஒரு விலை, மறுநாள் வேறொரு விலை சொல்கிறார்கள். தமது காணியில் வீடு கட்டச் சொல்லும் காணி உரிமையாளர்கள் கட்டடவேலைகள் ஆரம்பித்தவுடன் எமக்குக் காணி வேண்டும் வீட்டை உடை என்கின்றார்கள். இப்படி எத்தனைகாலம் தான் எமது மக்கள் வாழமுடியும்.

### இடம்பெயர்ந்தது முதல் இன்றுவரை நிம்மதியின்றியே வாழ்கின்றோம்

திருமதி அன்ரன் யேசுதாஸ் மேரி
மரியாபுஸ்பம் (வயது -40)



5 பிள்ளைகள்
தொழில்:- கடற்றொழில்
நிரந்தர இடம்:- பலாலி வடக்கு.
தற்காலிக இடம்:- பொலிகண்டி இடைத்தங்கல் முகாம்

1990 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது போட், கடற்றொழில் உபகரணங்கள், வீடு உட்பட 9 லட்சம் ரூபா உடைமைகளை இழந்து வெளியேறினோம்.

எஞ்சியவைகளை விற்று வடமராட்சி பொலிகண்டியில் மீண்டும் கடற்றொழில் உபகரணங்கள் வாங்கி தொழில் செய்யத் தொடங்கினோம்.

அவ்வேளை சுனாமி அலை அனர்த்தத்தால் எமது உடைமைகள் அனைத்தையும் இழந்தோம். எமது உடமையின் இழப்பீடு 6 லட்சம்.

நாங்கள் பலாலியை விட்டு இடம் பெயர்ந்தது முதல் இன்றுவரை நிம்மதியின்றியே வாழ்கின்றோம்.

எனவே, நாம் மீண்டும் சொந்த இடங்களில் வாழ்ந்தது போல சுதந்திரமாக வாழ விரும்புகின்றோம்.

எமது பிள்ளைகளுக்குக் கல்வி வசதி, எமது தொழில் வசதி, மலசல கூட வசதி, நீர் வசதி, வைத்திய வசதி, சுகாதார வசதி போன்றவற்றுடன் எமக்கு நிரந்தர வீடு கட்டித்தரப்பட வேண்டும்.

அரைகுறை வேக்காடுகளைப் போல் மீண்டும், மீண்டும் இடைத்தங்கல் வீடுகளைத்தந்து எம்மைக் கஷ்டப்படுத்த வேண்டாம்.

நாம் 1990 ஆம் ஆண்டு இழந்த உடமைகளின் நஷ்ட ஈடுகளையும் அரசு தரவேண்டும்.

இராணுவத்தை நாம் வரவழைக்கவில்லை. அரசுதான் அனுப்பிவைத்தது. எனவே, அரசு அவர்களை வாபஸ்பெற்று எமது சொந்த நிலங்களை, வீடுகளை மீண்டும் எம்மிடம் விரைவாகக் கையளிக்கவேண்டும்.

சி.சுந்தரலிங்கம்

✱

# நிச்சயமாக எங்களால்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சு)

"1980களுக்கு முற்பட்ட காலத்தில் கலையை விரும்பி ரசிக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாகவே எனக்குப்படுகிறது. அப்போது கொழும்பிலும் சரி, யாழ்ப்பாணத்திலும் சரி ரசிகர் அவைகள்கூட காணப்பட்டன. இந்தச் சூழல், கலைகள் வளர்வதற்கு ஆரோக்கியமானதாக இருந்தது"- என்றார் ராஜன்.

✱ இதற்கு என்ன காரணம்?

"இப்போது வீட்டுக்கு வீடு ரி.வி உள்ளது. அதில் ஒளிபரப்பப்படும் தென்னிந்தியத் தொடர் நாடகங்கள் எமது மக்களின் கலாரசனைப் போக்கை தீர்மானித்திருக்கின்றன என்று நான் கருதுகிறேன்"

தற்போது திரைப்பட இயக்குநராக முகம் காட்டும் திவ்யராஜன் பல ஒலி நாடாக்களை வெளியிட்டுள்ளார். கவிஞர் முருகையன், கவிஞர் சோ.பத்மநாதன், பேராசிரியர் எஸ்.சிவசேகரம் போன்றவர்கள் இயற்றிய 'புது வரலாறும் நாமே படைப்போம்' என்ற கஸெட்டையும், 'விடியலைத் தேடும் கானங்கள்' என்ற கஸெட்டையும் தான் வானொலியில் பாடிய மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பான ' ஏரிக்கரை ஓரத்திலே' என்ற கஸெட்டையும் இவர் வெளியிட்டுள்ளார். அத்துடன் மகாகவி உருத்திரமூர்த்தியின் பாடல்கள் அடங்கிய 'புலரும் வேளையில்' என்ற சீ.டியும் (அருவி வெளி யீடு) கவிஞர் சேரன் மற்றும் திவ்யராஜனின் பாடல்கள் அடங்கிய 'காற்றோடு பேசு' என்ற சீ.டியும் (அருவி வெளியீடு) ஈழத்துப்பாடகர் எஸ்.கே. பரராஜசிங்கத்தின் பாடல்கள் தொகுப்பு சீ.டி யும் 'குளிரும் நிலவு என்ற சீ.டியும், மலையக மக்களுக்கான பாடல்கள் அடங்கிய 'குன்றத்துக் குமுறல்' சீ.டியும் 'வெண்பனிப்பூக்கள்' என்ற சீ.டியும் அவரால் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய கலை இலக்கியப் பேரவையாலும் மற்றும் 'இசைப்பா அரங்கு' என்ற பெயரில் யாழ்ப்பாண மேடைகளில் பாடல்கள் பாடியமையும் இவரது ஆரம்ப கால கலைப் பதிவுகளாக அமைந்திருந்தன. பின்னாளில் தமிழர் விடுதலைப் பாடல்களையும் மேடைகளில் பாடியுள்ளார். கனடாவில் இருந்து ஒரு தமிழ்த் திரைப்படத்தை தந்திருக்கிறீர்கள். இந்தத் திரைப்படத்தினூடாக நீங்கள் ஏதாவது செய்தி சொல்ல...

நாம் கேள்வியை முடிக்க முன்னரே திவ்யராஜன் ஆரம்பித்தார்.

" எமது மக்கள் புலம் பெயர்ந்துள்ள நாடுகளில் சமூகச் சீரழிவுகளுக்கு உள்ளாகின்றார்கள் என்ற ஓர் அபரிமிதமான கருத்து நிலவுகிறது. அந்த நாடுகளில் நாங்கள் ஏராளமான நல்ல விடயங்களைப் பெற்றுக்கொண்டுள்ளோம். அவற்றை 'சகா' திரைப்படத்தில் பதிவுசெய்துள்ளேன். உதாரணமாக பெற்றோர் - பிள்ளைகள் உறவு, தாத்தா - பேரன் உறவு, ஆசிரியர் - மாணவர் உறவு போன்றன எவ்வாறு கௌரவத்துடனும் அதேவேளை வெளிப்படைத் தன்மையுடனும் உள்ளன என்பதை இப்படத்தில் காணலாம்.

"இத்திரைப்படத்தில் யதார்த்த நிலைமையைக் காட்டியுள்ளேன். புலம்பெயர்ந்த நாடுகளில் பல் கலாசாரச் சூழலை எமது இளையவர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் காட்டியுள்ளேன். பிள்ளைகளுக்கு அங்கே சுதந்திரமான சூழல் உண்டு. ஆனால், அவர்கள் நல்வழியில் இருந்து விடுபட்டுப்போகாமல் காத்துக்கொள்வதில் பெற்றோர்களின் பொறுப்பு முக்கியமானது. அந்தச் செய்தி 'சகா' திரைப்படத்தில் அழுத்தமாகச் சொல்லப்படுகிறது."

இயக்குநர் திவ்யராஜனுக்கு பக்கபலமாக அவரது மனைவி சிவா திவ்வியராஜன் மற்றும் அவரது பிள்ளைகள் தி.கீர்த்தனன் (வயது-18), தி.சங்கீதா ஆகியோரும் கலை உலகில் பணியாற்றி வருகின்றனர். நடன ஆசிரியையான திருமதி சிவா திவ்வியராஜன் 'கவின் கலாலயா' என்ற கலை நிறுவனத்தை முன்னெடுத்து வருகின்றார். கடந்த 12 ஆண்டுகளாக கனடாவில் இயங்கிவரும் இக் கலாலயத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் கவின் கலைகளைப் பயின்றுவருகின்றனர்.

திருமதி சிவா திவ்யராஜன் 'பரத சூடாமணி' பட்டம் பெற்றவர். இவர் வீரமணி ஐயர், அடையாறு லஸ்மன், லீலா நாராயணன் ஆகியோரிடம் பரதம் பயின்றுள்ளார்.

கிருஷாந்தி குமாரசாமி ஸ்ரீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை 'குருதிப்பூ' என்ற பெயரில் புதிய பாணி நடனம் மூலம் இவர் கனடாவில் அளிக்கை செய்திருந்தார். தென்னிந்தியத் திரைப்படங்களைப்போல் எமது ஈழத்துத் திரைப்படங்கள் ஜனரஞ்சகத் தன்மையைப் பெற்றுக்கொள்ளுமா என்று எமக்குள் எழுந்த சந்தேகத்தை திவ்யராஜனிடம் கேட்டோம்.

"நிச்சயமாக முடியும். ஈழத்துத் திரைப்படத்துறை, தொழில்நுட்ப ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் நிறையவே வளர்ச்சியடையவேண்டியுள்ளது என்பது உண்மைதான். ஆனால், ஈழத்துத் திரைப்படங்களின் கதைகள் யதார்த்தமானவை. எமது மக்களின் வாழ்நிலைமைகளை பிரதிபலிப்பவை. இதன் காரணமாக அவற்றுக்கென ஒரு தனி வீச்சு உண்டு. இதனை தென்னிந்தியசினிமா நினைத்துக்கூடப் பார்க்கமுடியாது. ✱

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

Internet cafe இற்குத் தேவையான Computers, AC, Computer table and Chairs என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 077323 6111. (38815)

புடைவைக்கடையில் பாவித்த மரத்தினால் ஆன ஷோக்கேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (38821)

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 514ஆம், 515ஆம், 516ஆம், 517ஆம் இலக்கங்களை உடைய வீடுகள் (யாழ்ப்பாண பழைய OPD இற்கு முன்பாக உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: (சனி, ஞாயிறுகளில் மட்டும்) T.P.: 222 8024 (பார்வையிடும் நேரம் காலை 10 - மாலை 5.00) (38803)

நல்ல நிலையில் உள்ள Sony Handy Video Camera, Fish tank set, 21'' T.V., Toshiba Laptop மற்றும் Splendour motorbike 159-XXXX போன்றவை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777 555938. (38769)

யாழ்ப்பாணம், பிரதான வீதி, முதலாம் குறுக்குத் தெரு சந்தியில் 4 பரப்புக் காணியும் கன்னாதிட்டி வீதியில் நகைக்கடையும் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. No. 222 5572. (38838)

யாழ்ப்பாணம், கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் மேல்மாடி வீட்டுடன் கூடிய வளவு, நாவாந்துறை வீதியில் 20 பரப்புக் காணி (முழுதாக அல்லது பிரிவுகளாக) விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. No. 222 5572. (38839)

## கார் விற்பனைக்கு

11 ஸ்ரீ XXX தொடர் இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள லான்சர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 9152373, 4590098. (38820)

நிசான் சனி, சில்வர் நிறம், சுப்பர் சலூன் முழுவதும் காப்புறுதி செய்யப்பட்ட கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.396, கைலாயபிள்ளையார் கோயிலடி, முன்னைய உதயன் பணிமனை ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் காலை 9 மணி முதல் பி.ப.5 மணி வரை மட்டும் பார்வையிடலாம். (38844)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், மென்னியார்பிட்டி ராஜகாரிய வீதியில் 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.P.: 0777 313 261. (38735)

சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தில் 16 பரப்புடன் கூடிய சகல வசதிகளும் உள்ள வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 071 4822242, 078 5227681. (சி-44038)

மானிப்பாய், சங்கரப்பிள்ளை வீதியில் (Hindu College இற்கு அருகில் ) 7 பரப்பு வீடும் வளவும் மேல்மாடி வீடு, 5 படுக்கையறை, 2குளியலறையும் பெரிய வரவேற்பறையும் சகல வசதிகளும் பொருந்திய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 0713101956 (எந்த நேரமும் தொடர்பு கொள்வதற்கு), 021 222 2515 (திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேல் தொடர்புகொள்வதற்கு). (சி-44063)

## காணி விற்பனைக்கு

இருபாலைச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதிக்கு அருகில் மூன்று பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 9015768. (38695)

## வீடு காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும். T.P.: 0114613157. (38750)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை), (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-44491)

## நாய்க்குட்டி விற்பனை

வளர்ந்த Great Dane நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38768)

எம்மிடம் நல்லஇன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி றோகினி சிவபாதம், 102, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (38853)

## தவறிவிட்டது

மாதகல் புனித செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த கல்லூரி மாணவி செல்வி செபஸ்ரியாம்பிள்ளை லக்கி என்பவருடைய தேசிய அ.அ. (இல.835872041V), விசேட அ.அ. (இல 0905024383) ஆகியவை வவுனியா பகுதியில் (29.07.2005) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (38810)

நெல்லியடி பஸ்நிலையத்திலிருந்து 11.08.2005 வியாழனன்று காலை புறப்பட்ட இ.போ.சபை பஸ்வண்டியில் (பாதை 750) புத்தூர் சோமஸ்கந்த கல்லூரிக்கு இடையில் NOKIA - 3100 ரக கைத்தொலைபேசி (இல. 077 6664766) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 226 3520 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அல்லது Dr. நா. சிவயோகன், பௌதிகவியல்துறை, பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (38814)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்புமருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள் (42/=) பேட்டுக்குஞ்சுகள் 22.08.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38679)

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்த 25 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. அத்துடன், அரச உத்தியோகம் பார்க்கும் துலா லக்கினம் 2இல் செவ்வாயுள்ள 5' 3'' உயரமான மணமகளுக்குத் தராதரமுடைய உள்நாட்டு, வெளிநாட்டு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2670, மே.பா.உதயன், யாழ்ப்பாணம். (சி-44067)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த, பூசம் நட்சத்திரம், 5'5'' உயரம், G.C.E.O/L, கம்பியூட்டர் படித்துள்ள, கிரகபாவம் 68 உள்ள மணமகளுக்கு மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2268, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (38740)

யாழ்.வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976ஆம் ஆண்டு பிறந்த, திருவோணம் 2ஆம் பாதம், கிரகபாவம் 64, செவ்வாய் தோஷமற்ற, A/L படித்த மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை. அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவராக இருப்பின் விரும்பத்தக்கது. தொடர்பு: T.P.: 226 3730. (38782)

## மணமகள் தேவை

யாழ்.இந்து, ஆஸ்திரேலியாவிலிருந்து வந்துள்ள 5' 6'' உயரமுள்ள மணமகனுக்கு 36 வயதிற்குட்பட்ட அழகிய குடும்பப்பாங்கான மணமகள் தேவை. தொடர்பு: 071 3055865. (சி-44026)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடா குடியுரிமையுடைய, 1968 புநர்பூசம், மிதுனராசி கிரகபாவம் 12¾, உயரம் 5'6'', A/L படித்த மணமகனுக்கும் U.K. குடியுரிமையுடைய, 1975, ரோகினி கிரகபாவம் 56, உயரம் 6' 3'', A/L கொம்பியூட்டர்படித்த மணமகனுக்கும் படித்த அழகான உயரமான மணமகள்கள் தேவை. தொடர்பு: ''சிவாலயா'', நல்லூர், T.P.: 021 222 7844. (38796)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972, பூசம் கடகராசி, கிரகபாவம் 32 ¼ உயரம் 5'6'' M.B.B.S. டாக்டருக்கு அழகான M.B.B.S. டாக்டர் மணப்பெண் தேவை. தொடர்பு: "சிவாலயா", சர்வதேச திருமண நிலையம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844. (38796)

யாழ்.றோமன் கத்தோலிக்கம் (R.C) கௌரவ குடும்பம், ஆஸ்திரேலியா குடியுரிமையுடைய 1975 ரோகினி இடபராசி 48 ¾ கிரகபாவம் உயரம் 5' 6'' எஞ்சினியர் அரச பணி வகிக்கும் மணமகனுக்கு அழகான M.B.B.S., எக்கவுண்டன் மணமகள் தேவை. இந்துக்களும் விரும்பத்தக்கது. தொடர்பு: 'சிவாலயா' நல்லூர். T.P.: 021 222 7844. (38817)

அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடம், வயது 44, பாதுகாப்பு உத்தியோகத்தரான மணமகனுக்குத் தகுந்த மணமகள் தேவை. நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். திருமணசேவை ஸ்தாபனங்களும் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர் (இராணுவ முகாமிற்கு முன்பாக). (38772).

## ஜோதிடம்

உள்நாட்டில், வெளிநாட்டில் பிறந்தவர்களின் ஜாதகங்கள் பிழையின்றிக் கணிக்க, பலன்கள் விரிவாகக் கூற, விவாகப் பொருத்தம் பார்க்க, கைரேகை, ஆரூடம் பலன்களும் கூற, சுப கருமங்கட்கு நாள் குறிக்கவும் நாடுங்கள். எஸ். சிதம்பரநாதன், புங்கடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை (மந்திகை வைத்தியசாலை தாண்டி கொடிகாமம் றோட்டில் மெதடிஸ்த பாடசாலைக்கு 4ஆவது வீடு). (38674)

கைரேகை, ஜாதகம் கொண்டு உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றி பெறவும் ஆலோசனை பெற்றுக்கொள்ளவும். ஒருமுறை நாடுங்கள். இந்தியப் பரம்பரை ஜோதிடர் அருள்வாக்கு அம்பிகா அம்மா, 121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (38710)

## தோட்டப்பொறுப்பாளர்

*யாழ்.மாவட்டத்தின் பளைப் பிரதேசத்திலுள்ள 100 ஏக்கர் தென்னந் தோட்டத்தைப் பராமரிப்பதற்கு நன்கு அனுபவமும் ஆர்வமும் கடின உழைப்பும் உடைய நேர்மையான - குடும்பத்துடன் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவர் உடன் தேவை.*

*மேலதிக தகைமையாக மாட்டுப் பண்ணை அனுபவமும் விரும்பத்தக்கது.*

*எதிர்பார்க்கும் சம்பள விவரங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-*

(சி-44011)(42.11.16)

**அ.மனோகரன்,**
193, மகாவித்தியாலய மாவத்தை,
கொழும்பு - 13.

## கருத்தரங்கு

சிங்கப்பூர், இந்தியாவில் உயர் கல்வியைத் தொடர்வதற்கான இலவச கல்விக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச்சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

முதலாம் அமர்வு காலை 9.45 மணிக்கும் இரண்டாம் அமர்வு முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

எப்.ரி.எம்.எஸ். கொலிஜ் ஒப் சிங்கப்பூர், சோனா கொலிஜ் ஒப் ரெக்னோலஜி இன் இண்டியா ஆகிய நிறுவனங்களில் பட்ட, பட்ட மேற்படிப்பு, தொழில்சார் கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்காக இது நடைபெறவுள்ளது. (9-202)

## மருத்துவமுகாம்

யாழ்.லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் யாழ். பெரிய கடை மாதர் அபிவிருத்திச்சங்கம் நடத்தும் மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம் முகாமில் நீரிழிவு நோய், இரத்த அழுத்த நோய்களுக்கான பரிசோதனை, பொதுவைத்தியம் என்பன வழங்கப்படவுள்ளதுடன் கருத்தரங்கும் இடம்பெறும்.

வைத்திய கலாநிதி சிவச்செல்வனும் அவரது குழுவினரும் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து இம் முகாமை நடத்துவர். (9-202)

## உடுவில் கல்விக் கோட்ட அதிபர்களுக்கு!

வலி.தெற்கு,ஓக.14

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை முற்பகல் 10 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல் லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக் கோட்டப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் 2006ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் வழங்குவது தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

சகல அதிபர்களும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென செ.குபேரநாதன் அறிவித்துள்ளார். (9-152)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

*தேயிலை சந்தைப்படுத்தும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. தேயிலை விற்பனைத் துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒரு வாரத்தினுள் விண்ணப்பிக்கவும்.*

*தொடர்புகளுக்கு:*

**விளம்பர இல. 2667,**
C/o. உதயன்,
யாழ்ப்பாணம்.
(38712)(42-11-16)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**
10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திறீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

## தேவை

*எமது ஸ்தாபனத்துக்கு,*
- *சிட்டை எழுதுநர்*
- *காசாளர்*
- *உணவு பரிமாறுவோர்*

*ஆகியோர் உடன் தேவை.*

**அமுல் கிறீம் ஹவுஸ்,**
*452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
(38801)(42-11-16)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

## வணிகப் பெருமக்களே!

# DSI

உங்கள் இல்லங்கள், பாடசாலைகள், விடுதிகள், நிறுவனங்களுக்கும், வாகனங்களுக்குமுகந்த, DSI கால் மிதிகளை(Door Mats, Car Mats) பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளவும்.

13. நவீன சந்தை, மேல்தளம் யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 222 7621

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI

YTS

# யாழ் ரெக்

இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி
கலட்டிச் சந்தி

**MULTIMEDIA**
**3D STUDIO MAX 7**
**MAYA 6.5**
**VIDEO MIXING**

Online Classes

இம்மாதம் 19,26ம் திகதிகளில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
நேர அட்டவணையை நேரில் பெறவும்

இந்தியாவில் பயிற்சிபெற்ற கொழும்பின் முன்னணி ஆசிரியர்கள் வருகை தரவுள்ளார்கள்

மல்ரிமீடியா மற்றும் அனிமேஷன் துறைகளில் கடந்த காலங்களில் பல சாதனைகளை புரிந்துள்ள வெள்ளவத்தை லண்டன் இன்ஃபோ ரெக் இன் இணை நிறுவனமான யாழ் ரெக் ஏற்கனவே இரண்டு பிரிவுகளை ஆரம்பித்துள்ள நிலையில் மூன்றாவது பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இம்மாதம் 25ம் திகதிக்கு முன் பதிவு செய்பவர்களுக்கு 50% கழிவு வழங்கப்படும்

# பாணின் நிறை மற்றும் விலைமாற்றம் குறித்து அரச அதிபருடன் கலந்தாலோசிக்கவேண்டும்

## செயலகச் சந்திப்பில் அறிவுறுத்து

பாணின் நிறை மற்றும் விலை மாற்றம் தொடர்பாக யாழ். அரச அதிபருடன் கலந்தாலோசிக்கப்படவேண்டும். அதன் பின்னரே அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- இவ்வாறு பேக்கரி சங்கங்கள் இரண்டுக்கும் அறிவுறுத்தப்பட் டுள்ளது.

அண்மையில் பாணின் நிறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்தல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

இதுதொடர்பாக கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்தின் பாண் கட்டளைச் சட்டப்படி விற்பனைக்கு வைக்கப்படும் பாண் நிர்ணயிக்கப்பட்ட நிறையில் இருத்தல் வேண்டும். நிறை குறைவாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால் விற்பனையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அண்மையில் பாணின் நிறை குறைக்கப் பட்டுள்ளதாக சங்கங்கள் அறிவித்தல் விடுத்தி ருந்தன.

இதையடுத்தே யாழ். செயலகத்தால் மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் மற்றும் பேக்கரி உரிமையாளர் சங்கம் ஆகிய வற்றுடன் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது.

அச்சந்திப்பின்போது ஒரு பாணின் நிறை 450 கிராமாக இருக்கவேண்டும் என்றும் -

பாணின் விலை மாற்றங்கள் தொடர்பாக அரச அதிபருடன் கலந்தாலோசித்த பின்னரே நடைமு றைப்படுத்தப்படவேண்டும் என்றும் - அறிவுத்தப் பட்டது.

இதேவேளை -

நிறுத்தல் அளவைகள் திணைக்களம் நேற்று முன்தினம் இதுதொடர்பான அறிவுறுத்தல் ஒன்றை யாழ். செயலக நிறுத்தல் அளவைகள் பிரிவினருக்கு அனுப்பிவைத் துள்ளது.

அதில் ஒரு பாணின் சட்ட ரீதியான நிறை 450 கிராமாக இருக்கவேண்டும். அவ்வாறு விற்பனை செய்யாத விற்பனையாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண் டும் என்றுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(எ-202-203)




நல்லூர் கந்தசுவாமி கோயிலில்

இன்று ஐந்தாம் திருவிழா

வீரவேல் விண்ணோர் சிறைமீட்ட வேல்!

சூர்மாவும் குன்றும் துளைத்தவேல்!!

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

அதிரடி விலைக்கழிவில் மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள்

புவர் செலூலர் டிரேடிங் கம்பனி!

Office: 185. முதலாம் மாடி. கஸ்தூரியார் வீதி (வின்சர் தியேட்டருக்கு எதிராக). யாழ்ப்பாணம். Tel.-Fax:021 222 7070

Shop: 205/1. கஸ்தூரியார் வீதி (ராஜா கட்டடத்தொகுதி). யாழ்ப்பாணம். Tel.:0712-399220, 0714 182500.

(C/44054)



## குறைந்த கட்டணத்தில்

CHINA வில் (சீனா) MBBS (மருத்துவப் பட்டப்படிப்பு)

DALIAN MEDICAL UNIVERCITY

GUANGXI MEDICAL UNIVERCITY

MEDIUM - ENGLISH

QUALIFICATION- G.C.E A/L (BIO) 3, PASSES

நீங்கள் ஒரு மருத்துவராக (DOCTOR) வர விரும்பியதை எம் மூலமாக நிறைவேற்றிக்கொள்ளுங்கள்.

* * * * நீங்கள் வெளிநாடு செல்ல விரும்புகிறீர்களா? * * * *

பின்வரும் நாடுகளுக்கு VISA பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை நாம் செய்து கொடுக்கின்றோம்.

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, இத்தாலி, சுவிஸ், ஜேர்மனி

* கொழும்பைவிடவும் குறைந்த கட்டணத்தில் சர்வதேச நாடுகளுக்கான விமான ரிக்கெற்றுக்களை FLIGHT TICKET எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
* வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களது சகல விமானங்களுக்குரிய ரிக்கற்றுக்களை மீள் உறுதிப்படுத்தலை (TICKET RECONFORMATION) எம்மிடம் செய்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-

RAIN BOW TRAVELS & TOURS

32.2/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (அரியா நகைமாடத்துக்கு மேல்)

தொலைபேசி 0777 328219. (C/44466)


## 13 ஆம் ஆண்டு நினைவலையில்....



செல்வி

**சர்விழி தம்பிராசா**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19.07.1982 | 06.08.1992 |

அன்பின் பிறப்பிடமே- எம்
நெஞ்சின்
அணையா ஒளிவிளக்கே.....
ஆண்டுகள் பல சென்றாலும்
எங்கள் இதய வீட்டில்
என்றும் நீ இருப்பாய்

கோட்டைக்காடு, மல்லாகம். (38855)(39-16) அப்பா, அம்மா, குடும்பத்தினர்.


## நெஞ்சுவலியிலிருந்து நிவாரணம் பெறுங்கள்

| | |
|---|---|
| ரியுமரோயிட் ஆர்த்திரைட்டிஸ் | மூட்டுக்களில் நோவா...? எலும்புவலி மற்றும் ஒஸ்ரியோபொரோசிஸ் |
| நீரத முதுகு வலியா...? | விரைவான நிவாரணம் |
| சோரைசிஸ் தோல் வியாதி | எமது கிருமி எதிர்ப்பு மருந்து துரித நிவாரணம் அளிக்கும் |
| ஒற்றை தலைவலியா...? | நீண்ட காலப்பாதிப்பினின்றும் நிவாரணம் அளிக்கும் |
| பெட்சோர்- Q.R என்ணெய் | பெட்சோர், நீரிழிவுப்புண் மற்றும் எரிகாய புண்களுக்கு |
| புரஸ்டேட் சுரப்பிகளின் சோர்வுப் பிரச்சினைகளா? | இதற்கென சத்திர சிகிச்சையைத் தவிர்க்கும் வகையில் சிகிச்சை |
| குழந்தைகளின் புத்தி மந்தம் மற்றும் அல்சைமேர்ஸ் நினைவாற்றல் பாதிப்பு நோய் | |
| கல்லீரல் பிரச்சினைகளா? | சிரோசிஸ், ஜோண்டிஸ் அசைட்டிஸ் மற்றும் கல்லீரல் வீக்கம் |

நெஞ்சுவலியினால் அவதியுறும் வயோதிபர்கள் அவர்களது எதிர்காலத்தில் இவ்வாறான வருந்தத்தக்க குறைபாடுகளுக்காக கவலைப்பட வேண்டிய அனுபவம் ஏற்படாது. ஏனெனில் எங்கள் ஆயுர்வேத மருந்துகள் உங்கள் நாளங்களில் காணப்படும். அடைப்புகளை கரைத்து முறையான குருதிச் சுற்றோட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் சத்திரசிகிச்சை அற்ற வாழ்க்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கும்.

தொலைபேசி: 0094-115517897, 5551879, 5558442

தொலைநகல்: 0094-11-5517756

மின்னஞ்சல்: fppvl@lankabellnet.com

இணையத்தளம்: www.fppvtl.org

FAIR PHARMA (PVT) LTD

(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)

L5/ETI1C, WORLD TRADE CENTRE, COLOMBO -01, SRI LANKA.

A BOI APPROVED COMPANY

ISO 9001 : 2000 QMS Certified Company

திறந்திருக்கும் நேரம்: வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை. சனிக்கிழமை காலை 9.00 முதல் பி.ப. 2.00 மணிவரை




### கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய கைலாய வாகன வெள்ளோட்ட விழா

**இன்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை**

முருகன் அடியார்களே !

நிகழும் பார்த்திப வருடம் ஆடி மாதம் 29 ஆம்நாள் இன்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை எம்பெருமானுக்கு கொக்குவிலைச் சேர்ந்த திரு.திருமதி ஆறுமுகம் அன்னலட்சுமி குடும்பத்தினரதும் திரு.திருமதி விக்கினராஜா சறோஜினிதேவி குடும்பத்தினரதும் உபயமாக திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினரால் உருவாக்கப்பட்ட புதிய கைலாய வாகனம் வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெற எம்பெருமானின் திருவருள் கைகூடி உள்ளது. இவ்விழாவில் கலந்து எம்பெருமானின் அருள் பெற்றுய்வீர்களாக.

**நிகழ்ச்சி நிரல்**

இறைவணக்கம்

தலைமை உரை : செ.தம்பித்துரை (உபதலைவர், ம.மு.ஆலய நிர்வாக சபை)

ஆசியுரை: சிவப்பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் (ஆலய பிரதம குரு)

வாழ்த்துரை:

திரு.செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்
பேராசிரியர் திரு.க.தேவராஜா (தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.பொ.கமலநாதன் (அதிபர், கொ.இ.கல்லூரி)
திரு.வே.நடராஜா (பெறுநர், ம.மு.ஆலயம்)
சைவப்புலவர் திரு.மு.திருஞானசம்பந்தபிள்ளை
திரு.பெ.கனகசபாபதி (தலைவர், ந.ப.நோ.கூ.ச)
திரு.கா.பாலசுப்பிரமணியம் (முன்னைய தர்மகர்த்தா சபை, செயலாளர்)

நன்றியுரை:

திரு.இ.இராசலிங்கம் (செயலாளர், ம.மு.ஆலய நிர்வாக சபை)

ஆலய நிர்வாகசபையினரும் கைலாய வாகன உபயகாரர்களும் இளம் தொண்டர்களும். (38852)(39-16)


## உடனடி பதவி வெற்றிடம்

இலங்கையில் பிரபலமான சர்வதேச கல்லூரியின் யாழ்ப்பாண புதிய கிளைக்கு பின்வரும் பதவி வெற்றிடங்களிற்கு உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

* Centre C0 - Ordinator
* Computer Instructors/Lecturers
* Office Assistant

ஓரளவு ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

GATEWAY CENTRE JAFFNA,
711, K.K.S Road, Jaffna.
(Close to Jaffna Hindu College)
T.P.: 021-222-6188, Hoteline : 0777 315262.

(38850) (32-)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நடராஜா (பட்டுவேட்டியர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கு கேணியடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராஜா நேற்று (13.08.2005) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமலர் அவர்களின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்தவர்களான நிர்மலன், நிரூபன், நிரைஞ்சன், நிர்மாயன், நீரூதயன், நிற்சுதன், நிர்த்தனி, நிர்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.08.2005 புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய். 0714168518*

தகவல்:
சே.அனராஜ் (மருமகன்).
(38854)(39-16)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி

**சோபனா திருபாலசிங்கம்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28.11.1983 | 01.07.2005 |

*எம் இல்லத்தின் குல விளக்கே!*
*இதயத்தில் உறையும் இனியவளே!*
*எங்கள் கண்மணியே, சோபனாவே!*
*உந்தனின் பொற்பாதங்கள் எங்கள்*
*இதயப்பாதையில் நடந்து*
*என்றும் ஓசை எழுப்புகின்றனவே!*
*உந்தன் பூவிழிகள் எங்கள் நெஞ்சங்களில்*
*பட்டுப்பட்டு*
*பதைபதைக்கின்றனவே! எமது இதய*
*வீணைகளின் நரம்புகளை*
*வருடியவள் இன்று நாம் சுருதியில்லாத*
*நரம்புகளாய்த்*
*துவண்டு கிடக்கின்றோம். இன்றைய*
*45ஆம் நினைவு*
*நாளில் உந்தனை நினைத்து இதய அஞ்சலி*
*செலுத்துகின்றோம்*

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

இன்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


எமது அழைப்புக் கிடைக்காத அன்பர்கள் இந்த அழைப்பையே உங்களுக்கான அழைப்பாக ஏற்று வருகை தந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பழவீடு,
இளவாலை. (38843)(39-16)

- குடும்பத்தினர்.

Vcare ™

VCARE HEALTH CLINIC (P) LTD.
...The First Professional Trichology Centre In SriLanka.




#இலங்கையில் முதலாவது Hair Clinic 23.03.2005
அன்று வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக
இயங்கிவருவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

#இது ஒரு அரச அங்கீகாரம் பெற்ற
Hair Research & Hair Treatment Clinic.
ஆகும். VCare Trichology Clinic இல் அளிக்கப்படும் சிகிச்சைகள்.

01. Male & Female Patten Thinning.
(ஆண், பெண்களுக்கு வரக்கூடிய வழுக்கை)

02. Gray Hair.
(இளநரை)

03. Alopecia Areata. (தலையின் இடையிடையே காணப்படும் சிறிய அல்லது பெரிய வழுக்கை அல்லது குறிப்பிட்ட இடத்தில் மட்டும் முடி அதிகமாக கொட்டுதல்)

04. Psoriasis. (தலையின் மேல் பகுதியில் பொடுகு போன்று படர்ந்து திட்டு திட்டாக சில இடங்களில் காணப்படுதல் ஆபத்தானது)

05. Dandruff and hair loss.
(அளவுக்கு அதிகமான பொடுகினால் வரும் முடி உதிர்தல்)

06. Hair Loss Due to Chemotherphy.
(உடலில் ஏற்படும் பல்வேறுபட்ட உடல் உபாதை காரணமாக ஏற்படும் பிரச்சினை)




07. Suborrheic Dermatitus.
(தலையில் சிறிய பருக்கள் தொட்டுணரும் போது வலி ஏற்படல் தலையில் பருக்களின் மூலம் இரத்தக்கசிவு ஏற்படல்.)

08. Scalp Disease.
தலையின் மேற்பாகத்தில் ஏற்படும் அனைத்துப்பிரச்சினைகளிற்கும்தீர்வு காணப்படும்.

No:68, 2nd Cross Street,
Vavuniya.
T.P-024-4589973

இங்கு வந்து சிகிச்சை பெற முடியாதவர்கள்,
package முறையின் மூலமாகவும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.

...Love Yourself Better!



Vcare ™
VCARE HEALTH CLINIC (P) LTD.
...The First Professional Trichology Centre In SriLanka.


## திருட்டு

உரும்பிராய், ஓக.14

வீட்டு உரிமையாளர் நள்ளிரவு உறக்கத்தில் இருந்த வேளை வீட்டினுள் புகுந்த திருடர்கள் மயக்கமருந்தை விசிறிவிட்டு 6 லட்சம் ரூபா ரொக்கப் பணம் மற்றும் 50 பவுண் நிறையுள்ள நகைகள், வங்கிக்கடன் அட்டைகள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் உரும்பிராய் தெற்கு, மூன்று கோயிலடியில் வசிக்கும் பூபாலு ஜெயபதனுஷ் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

வீட்டு உரிமையாளர்கள் அண்மையில் தான் வெளிநாட்டிலிருந்து வருகை தந்தவர்கள் என்று கூறப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாகக் கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-154-204)

## காரைநகரில் அடிக்கடி மின்தடை

காரைநகர், ஓக.14

காரைநகரில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் மின்பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த சில நாள்களாக இவ்வாறு மின்சாரம் முன்னிரவு வேளைகளில் தடைப்படுவதாகவும் -

இதனால், பாடசாலை மாணவர்களும் மின்பாவனையாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், ஐஸ் வியாபாரிகளும், குளிர்பான விற்பனையாளர்களும் பெரிதும் நஷ்டம் அடைந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

காரைநகர் பிரதேசத்தில் மின்சார சபையின் உப அலுவலகமோ அல்லது மின்சார சபை ஊழியர்களோ இல்லாத காரணத்தால் தடைப்படும் மின்சாரத்தை உடனடியாக மீண்டும் பெறமுடியாமல் உள்ளதாக மின்பாவனையாளர்கள் தரப்பில் கூறப்பட்டது. (எ-73)

## நினைவுகளுடன் 45 நாள்கள்



அமரர்
**கருணாநிதி சியாமளா**
குருவீதி, காங்கேசன்துறை

உள்ளங்களில் உன்னதமாய் 24-06-1966
உயிரில் வலியாய் 02-07-2005

*பவனி வந்த நாள்களை எண்ணி*
*அவனியில் தினம் அழுகின்றோம் - இன்று*
*மௌனித்துப் போனது நீங்கள்*
*மட்டுமல்ல*
*எங்கள் மனங்களுமே....!*

இன்று (14.08.2005) ஞாயிற்றுக் கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற எமது இல்லச்சுடரின் 45ஆம் நாள் நினைவு நிகழ்வுகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(38842)(42.14)

வேளாதோப்பு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியை அழைப்பும்



### அமரர் சின்னத்தம்பி செல்வானந்தம்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 05-11-1928 | 15-07-2005 |

அன்னாரது மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் கடித மூலமும் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14-08-2005) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக்காக அன்றையதினம் கே.கே.எஸ். வீதி, கோண்டாவிலில் உள்ள அவரின் சகோ தரியின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில். T.P. 021 222 4005. (38870)(26-42-14)


மங்கையர்க்கரசி
(சகோதரி).

# பாதுகாப்புக் கேந்திர நிலையமாக தொன்றுதொட்டு விளங்கும் முள்ளிப்பற்று

முள்ளிப்பற்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகவும் சிறந்த, இயற்கை வளம் கொண்ட பிரதேசமாக இருந்தும் அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசம் பற்றிய அறிவும் இதன் அபிவிருத்தி பற்றிய விழிப்புணர்வும் மக்களின் பங்களிப்பும் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியாரின் கவனஈர்ப்பும் ஏற்படுமிடத்து, பிரதேசத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பது இலகுவாக அமையும் என்னும் நோக்கிலேயே இக்கட்டுரை வரையப்படுகிறது. நாட்டின் அபிவிருத்தியில் சிறிய பிரதேசங்களின் அபிவிருததி முக்கிய இடத்தைப் பெற்றுவருவது இன்றைய அபிவிருத்தித் திறமுறையில் ஓர் அம்சமாகும்.

முள்ளிப்பற்று, குடாநாட்டின் தென்கிழக்கு மூலைப்பகுதியாகும். நீண்டு, ஒடுங்கிய தோற்றத்தைக்கொண்ட இப்பகுதி மூன்று பக்கமும் நீரால் சூழப்பட்டுள்ளது. இதன் கிழக்கில் ஆழக கடலும் தென், தென்கிழக்கில் ஆனையிறவு நன்னீரேரியும், மேற்கில் ஆனையிறவு உவர் நீரேரியும் அமைந்துள்ளன. புலோப்பளைப் பிரிவும் செம்பியன்பற்றும் இதன் வடக்கு எல்லைகளாக உள்ளன.

வரலாற்று ரீதியாக முக்கியமானதொரு பிரதேசமாக விளங்கிய முள்ளிப்பற்று பல புராதன கிராமங்களைக் கொண்டுள்ளது. கோவில் வயல், மண்டலாய், போக்கறுப்பு, வெற்றிலைக்கேணி, முள்ளியான், சங்கத்தார் வயல், பெரியபச்சிலைப்பளை போன்ற முக்கிய புராதன குடியிருப்புகளாகும். 1950 களுக்கு முன்னர் முள்ளிப்பற்று தனி உடையார் பிரிவாக இருந்தது. தற்போதைய




பிரதேச சபைகள் அமைப்பதற்கு முன்பு இது தனிக்கிராமசபையாக இருந்துள்ளது. இன்று வெற் றிலைக்கேணி, முள்ளியான், போக்கறுப்பு, சுண்டிக குளம் ஆகிய நான்கு கிராம அதிகாரிகள பிரிவுகள் வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தின் பகுதியாக உள்ளன. கோவில்வயல், இயக்கச்சி ஆகிய இரு கிராமசேவகர் பிரிவுகள் பச்சிலைப்பளை உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் பகுதியாக உள்ளன. முள்ளி பற்று இன்று இரு நிர்வாக மாவட்டங்களின் கீழ் இருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரிவு, 1976 இல் பருத்தித்துறை, கிளிநொச்சி தேர்தல் தொகுதி உருவாக்கத்தாலும் பின்னர் இத் தொகுதிகளின் எல்லைகளே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் எல்லைகளாக அமைநததாலும் ஏற்பட்டதொன்றாகும்.

### பாதுகாப்பு கேந்திர நிலையம்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து சுண்டிக்குளம் அல்லது ஆனையிறவு வழியாகவே குடாநாட்டிற்குள் இலகுவாகப் பிரவேசிக்க முடியும. இதனால், முள்ளிப்பற்று மிகப் பழைய காலத்தில் இருந்து இன்று வரை பாதுகாப்புக் கேந்திர நிலையமாக விளங்குகின்றது. ஒல்லாநதர் காலத்தில் ஆனையிறவிலும் முள்ளியானிலும் இரு கோட்டைகள் (மிலயிஸ் சூட்டர், வையில) பாதுகாப்புக்காகவும் ஆயச் சேவைகளுக்காகவும் நிர்மாணிக்கப்பட்டன. பிரித்தானியர் காலத்தில் முக்கிய வீதிச்சோனை நிலையமாக விளங்கிய ஆனையிறவு சுதந்தரத்திற்குப் பின் படிப படியாகப் பெரிய இராணுவ நிலையமாக மாறியது. குடாநாட்டின் பல்வேறு செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இங்கு இராணுவ நிலையம் அமைக்கப்பட்டது. குடாநாட்டையும் தென்பகுதியையும் இணைக்கும் ஒரேயொரு தரைவழிப்பாதை ஆனையிறவு ஊடாகச் சென்றதனாலேயே இது முக்கிய கேந்திர நிலையமாக விளங்கியது.

1991 இலும், 2000 திலும் ஆனையிறவில் இருபெரும் போர்கள் இடம்பெற்றன. 2000 இல் நடைபெற்ற போரில் விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றினர். இதனால் 500 ஆண்டுகளுக்கு மேலாக இங்கிருந்த நிலை 2000 ஆண்டிலேயே மாற்றமுற்றது கவனிக்கத்தக்கது. 1991 இல் A9 பாதை போக்குவரத்துக்குத் தடைப்பட்டதன் காரணமாக, ஆனையிறவுக் கடல நீரேரி வழியாகப் போக்குவரத்து மேற்கொள்ளபபட்டது. முதலில் ஆனையிறவுக் கிழக்குக் கடல் நீரேரியில் ஊரியான், கொம்படி வழியாகவும் பின் இப்பாதைகள் போக்குவரத்துக்குத் தடைப்பட கிளாலி வழியாகவும் போக்குவரத்து நடைபெற்றது. கிளாலி வழிப் போக்குவரத்து 1991 நடுப்பகுதியிலிருந்து 1996 முற்பகுதி வரை நடைபெற்றது. 2002 இல் சமாதான ஒப்பந்தத்தின் பின்னரே ஆனையிறவு வழியாகப் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. 1991 யுத்தத்தால் இப்பிரதேசம் பெரும் அழிவுக்கு உட்பட்டதால ஆனையிறவு, இயக்கச்சி, கோவில்வயல், முள்ளியான், வெற்றிலைக்கேணி ஆகிய கிராமத்து மக்கள் சோரன்பற்று வடக்கே இடம்பெயர்ந்து சென்றனர்.

இப்பிரதேசத்தின் அபிவிருத்தி சார்ந்த விடயங்களை ஆராயமுன், இப்பிரதேசத்தின் புவியியற் பண்புகளை அபிவிருத்திக்கான அடிபபடையில் நோக்குவது பொருத்தமானது. இப்பிரதேசம் 90 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இது அண்மைக்கால மணல் படிவுகளால் உருவான ஒரு சமதரையாகும். இதன் கிழக்குக் கரையோரத்தில் வெற்றிலைக்கேணியிலிருந்து தாண்டிக்குளம் வரை தொடர்ச்சியான மணற்படிவுகள் ஏற்பட்டு வருவது கவனிக்கத்தக்கது. 2004 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலைத் தாக்கத்தால் கரையோர மணல் திட்டுக்கள் கரைந்து உள்நோக்கிப் பரந்து சென்றன. இப்பகுதியில் பல சிறு குளங்களும் கரையோர நீர் நிலைகளும் காணப்படுகின்றன. மழைகாலத்தில் ஆனையிறவு கிழக்கு நீரேரி நிறையும் போது இப்பிரதேசத்தின் தென்கரையோரப்பகுதிகள் நீரில் மூழ்கும். எனினும், பல சிறு மணல திட்டுக்கள் இக் கரையோரப்பகுதியில் காணப்படுகின்றன.

ஆனையிறவு நிரேரிகளைச் சார்ந்த பகுதிகள் சதுப்பு நிலமாகவும் உவர் நிலமாகவும் விளங்க ஏனைய பகுதிகள் யாவும் மணற் பாங்கான பிரதேசங்களாக விளங்குகின்றன. இயக கச்சி தாழ்வான பகுதியாகவும் ஏனைய பகுதிகள் சற்று உயரமானவையாகவும் உள் ளன. இப்பிரதேசம் சராசரியாக 1100 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட மழையைப் பெறுகின்றது. இப்பிர தேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 50 இற்கும் மேற்பட்ட பரப்பில் காடுகள் காணப்படுகின்றன. இங்கு காடுகள் முள்ளியான் கோவில்வயல், நெல்லியான், சுண்டிக்குளம் பகுதிகளில் இருக கின்றது. இங்கு காணப்படும் இயற்கைத் தாவரங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## முள்ளிப்பற்று கிராமம்: ஓர் அபிவிருத்திப்பார்வை

அவையாவன:-

1) இயற்கையான காடுகள்:

இவை போக்கறுப்பு, முள்ளியான், புல்லாவெளிப் பகுதிகளில் உள்ளன.

2) கண்டல் காடுகள்:

சுண்டிக்குளம், ஆனையிறவுக் கடல் நீரேரி, தென்கிழக்குக் கரையோரப் பகுதிகளில் உள் ளன.

3) வறள் நிலவளரி பற்றைக்காடுகள்:

இவை இயக்கச்சி, கோவில்வயல் பகுதிகளில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில், முள்ளிப்பற்றுப் பகுதியிலேயே இன்றும் இயற்கைத் தாவரங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. மேலும் சுண்டிக்குளப்பகுதி 'பறவைகள் சரணாலயமாக' விளங்குகின்றது. இப்பகுதியில் மழைகாலங்களில் குறிப்பாக மார்கழி, தை, மாசி மாதங்களில் பெரும் எண்ணிக்கையான சைபீரியா மறறும் தூரதேசப் பறவைகள் இடம்பெயர்ந்து வருவது வழக்கம்.

ஆனையிறவுகிழக்கு நீரேரி தற்போது நன்னீரேரியாக மாற்றப்பட்டுள்ளது. எனினும் சுண்டிக்குளக் கரையோரஅணை, குறிப்பாக நல்ல தண்ணீர்த்தொடுவாய் உடைப்பெடுக்கும் போது நன்னீர் கடலுக்குச் செல்லும். நீர்மட்டம் குறையுமிடத்து கடல் நீர் நீரேரிக்குள் வரும் சாத்தியக்கூறு அதிகரிக்கும். குறுகிய காலத்திற்குள் கிழக்குக் கரையோர மணல்அணை இயற்கையாக ஏற்படாதுவிடின் கடல் நீர் உட்புகுவதைத தடுப்பது கடினம்.

மேலும் இறால் பெருக்கத்திற்காகக் கிழக்குக் கரையோரத்தில் கடல்நீர் நீரேரியில் உட்புகும் வண்ணம் வாய்க்கால்கள் வெட்டுவது வழக்கம். கடல்நீரும் நன்னீரும் கலக்குமிடதது இறால் பெருக்கம் ஏற்படும் என்பது நம்பிக்கை. இப்பிரதேசம் தரைக்கீழ் நீர்வளம் மிக்கது. வெற்றிலைக்கேணி, ஊரியான், போக்கறுப்பு, கோவில் வயல், இயக்கச்சி ஆகிய பகுதிகளில் தரைக் கீழ் நீர் நன்னீராகவும் ஆனையிறவு ஏரியைச் சார்ந்த பகுதிகளில் உவர்நீராகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இயக்கச்சியிலிருந்து தட்டுவன்கொட்டி, ஆனையிறவு உப்பளம் பகுதிக்குள் குழாய் வழிக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகிறது.

இப்பிரதேசத்தில் இன்று 5000 இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இங்கு மக்கள் தொகை குறைவாகவும் நீண்ட காலமாக மக்கள் தொகை அதிகரிப்பு வீதமும் குறைவாகவும் இருப்பது கவனிக்கத்தக்கது. இதற்குத் தொடர்ச்சியான மலேரியாத் தாக்கமும், அபிவிருத்தி குறைவாக இடம்பெற்றதும் கடந்த இரு தசாப்தங்களாக இங்கு இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. முள்ளிப்பற்றின் குடித்தொகை விவரம் பின்வருமாறு:-

**முள்ளிப்பற்றின் குடித்தொகை 1946 - 2004**

| ஆண்டு | தொகை | அதிகரிப்பு எண்ணிக்கையில் | அதிகரிப்பு வீதத்தில் |
|---|---|---|---|
| 1946 | 1247 | | |
| 1953 | 1312 | +65 | 5.0 |
| 1963 | 2830 | +1518 | 54.0 |
| 1971 | 3959 | +1129 | 42.5 |
| 1981 | 4218 | +259 | 6.0 |
| 2004 | 5039 | +821 | 16.0 |

மூலம்: குடிசனக் கணிப்பு அறிக்கைகள்

1953 - 1963, 1963 - 1971 காலங்களில் குடிசனத்தொகை அதிகரிப்பு உயர்வாகப் பதிவானதற்குக் காரணம் இயற்கை அதிகரிப்புடன் தற்காலிகமாகப் பிறஇடங்களிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு தொழில் செய்தோரும் குடிசனக் கணிப்பில் உள்வாங்கப்பட்டமையே யாகும். இப்பிரதேசத்திற்குள் நிரந்தரமான குடி உள்வரவு குறைவாக இருந்துவந்துள்ளது. எனினும், மீன்பிடித் தொழிலுக்காக தற்காலிக பருவகால இடப்பெயர்வுகள் இடம்பெறுவது வழக்கம். இடம்பெயர்ந்து வரும் கடற்றொழிலாளர்கள் வாடிகள் அமைத்து தொழிலில் ஈடுபடுவர். இங்கு பால் விகிதாசாரத்தில் அதிக வேறுபாடு காணப்படும். உதாரணமாக, சுண்டிக்குளம் கிராம அதிகாரி பிரிவு குடிசனத் தொகையை நோக்கின் இருபெரும் பண்புகளை அவதானிக்கலாம்.

1) சிறு எண்ணிக்கையான குடும்பங்களே நிரந்தரமாக வாழ்கின்றன.

2) பெண்களை விட ஆண்களே பெரும் எண்ணிக்கையில் வாழ் கின்றனர். 1963 இல் சுண் டிக்குளம் கிராமசேவகர் பிரிவில் 426 பேர் இருந்த னர். இவர்களுள் 413 பேர் ஆண்கள், 13 பேர் பெண் கள் என்பது கவனிக்கத் தக்கது. இதேபோல் முள் ளியான் பிரிவில் 1719 பேர் இருநதனர். இவர்களுள் 1120 பேர் ஆண்கள், 599 பேர் பெண்கள். 1981 இல் சுண்டிக்குளத்தில் 204 பேர் இருந்தனர். இவர்க ளுள் 181 பேர் ஆண்கள், 23 பேர் பெண்கள். முள்ளியானில் 2279 பேர் இருந்தனர். அவர்களுள் 1273 பேர் ஆண்கள், 1006 பேர் பெண்கள். தற்காலிக தேர்ந்த ஆண் இடப்பெயாவு கூடுதலாக இடம்பெறுவதாலேயே இத்தகைய ஆண், பெண விகிதாசார வேறுபாடு காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தின் சராசரிக் குடிசன அடர்த்தி சதுர கிலோமீற்றருக்கு 56 பேராக உள்ளது. இது யாழ்ப்பாண மாவட்டத்தின் சாரசரிக் குடிசன அடர்த்தி (602)யுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக உள்ளது. முள்ளிப்பற்றின் இன்றைய குடிசனத்தொகை கிராம அதிகாரிப் பிரிவு அடிப்படையில் பின்வருமாறு:

| கிராம அதிகாரி பிரிவு | குடிசனத்தொகை2004 |
|---|---|
| யா/வெற்றிலைக்கேணி | 767 |
| முள்ளியான் | 1137 |
| போக்கறுப்பு | 898 |
| சுண்டிக்குளம் | 735 |
| கிளி/ கோவில்வயல் | 917 |
| இயக்கச்சி | 585 |
| மொத்தம் | 5039 |

மூலம்: செயலகப் புள்ளிவிவரங்கள்

இப்பகுதியில் காணப்படும் முக்கிய கிராமங்களாவன:- வெற்றிலைக்கேணி, மண்டலாய், பெரிய பச்சிலைப்பளை, முள்ளியான், கட்டைக் காடு, நித்தியவெட்டை, புல்லாவெளி, வண்ணாங்குளம், கேராவில், போக்கறுப்பு, சுண்டிக்குளம், கோவில்வயல், சங்கத்தார் வயல், இயக்கச்சி, கொட்டாண்டர் குளம், விநாயகபுரம் ஆகியனவாகும். இக்கிராமங்கள் சிறியனவாகவும் ஒன்றிலிருந்து ஒன்று தனித்துத் தூரத்தே அமைந்து காணப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் இறுக்கமான சமூகக் கட்டமைப்பு காணப்படுகின்றது. இக்கிராமங்களின் பருமன், பரம்பல், அமைப்பு ஆகிய தற்சார்பு சமூகப் பொருளாதாரப் பண்பைத தக்க வைக்கக்கூடியதாக இருந்தன. இன்று இக கிராமங்களின் பண்புகள் நவீன வசதிகளை முனனெடுப்பதற்குச் சாதகமற்றவையாக உள்ளன.

இப்பிரதேசத்தின் அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இதன் இன்றைய தள நிலையை நோக்குதல் பொருத்தமாகும்.

1) இப்பிரதேசம் 1980 களிலிருந்து ஆனையிறவு தடைமுகாம் செயற்பாட்டினாலும் 1991 இலும் 2000 இலும் இடம்பெற்ற இருபெரும் யுத்தங்களினாலும் பெரும் அழிவுக்குட்பட்டது. இதனால், இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 2002 இன் பின் மீண்டும் படிப்படியாக இங்கு குடி யேறுகின்றனர்.

2) 2004 டிசெம்பர் 26 இல் இடம்பெற்ற சுனாமித் தாக்கத்தால் கரையோரப் பகுதி குறிப்பாக வெற்றி லைக்கேணியில் இருந்து

பொ.பாலசுந்தரம்பிள்ளை
பேராசிரியர்

சுண்டிக்குளம் வரையான பகுதி பெரும் அழிவைச் சந்தித்துளளது. பெரும் உயிரிழப்பு, பொருளிழப்பு, வாழ்வாதாரங்களை இழந்து மக்கள் கடும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் உளவியல் தாக்கங்களுக்கும் உட்பட்டு, தங்களின் புனர்வாழ்வு, புனருத்த்ரணப் பணிகளைத் தாங்களே முன்னெடுக்க முடியாதவர்களாகி, அரச, அரச சார்பற்ற, சமூக அமைப்புகள் மற்றும் தனியார் துறையினரின் உதவிகளை எதிர்பார்த்துள்ளனர்.

3) இப்பிரதேசத்தில் இருந்த தென்னைந் தோட்டப்பொருளாதாரக் கட்டமைப்பு முழுமையாகப் பாதிக்கப்பட்டு மிகப் பலவீனமான நிலையில் காணப்படுகிறது.

4) இப்பிரதேசத்தில் மக்கள் தொகை குறைவாகவும் விருத்திசெய்யக்கூடிய அரச காணிகள் குறிப்பிடத்தக்க அளவிலும் காணப்படுகின்றன.

5) கிழக்குக் கரையோரப் பகுதியில் கடல் வளம் உச்சப் பயன்பாட்டைப் பெறவில்லை.

6) ஆனையிறவு கிழக்கு நன்னீரேரித் திட்டம் முழுமையான பயன்பாட்டைப் பெறவில்லை.

7) கிழக்குக் கரையோர மாசுறாத கடற்கரை, சுண்டிக்குளச் சரணாலயம், ஆனையிறவுக் கடல் நீரேரி ஆகியன பொருளாதார செயற்பாடுகளுக்கு உட்படுத்தப்படவில்லை.

8) A-9 பாதை இப்பிரதேசத்தை ஊடறுத்துச் சென்றாலும் கூட இப்பிரதேசங்களின் குடியிருப்புகள் பல இப்பாதையுடன் விருத்தியாக கப்பட்ட வீதிகள் மூலம் தொடர்புபடுத்தப்படவில்லை.

9) இப்பிரதேசத்தில் காணப்படும் தரைக் கீழ் நீர்வளத்தின் ஒரு சிறுபகுதியே பயன்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட தளநிலையைக் கவனததில் எடுத்துப், பின்வரும் அபிவிருத்தி முயற்சிகள் முன்னெடுக்கப்படுமாயின் இப்பிரதேசம் வளர்ச்சியடைவதுடன், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அது வழிவகுக்கும்.

1. வெற்றிலைக்கேணிக்கும் சுண்டிக்குளத்திற்கும் இடைப்பட்ட கரையோரப்பிரதேசத்தில் யுத்தத்தாலும் ஆழிப்பேரலையாலும் பாதிக்கப்பட்ட கரை யோரப்பிரதேச மக்களின் கடற்றொழிலையும் வாழ்விடங்களையும் வாழ்வாதாரங்களான கல்வி, சுகாதாரம், கூட்டுறவு, சமுதாயக் கட்டமைப்புக் களையும் மீளப் புனர்வாழ்வு, புனருத்தாரணம் செய்யவேண்டும். கரையோரக் குடியிருப்புகள் A-9 பாதையுடன் எத்தகைய கால நிலையிலும் பிரயாணம் செய்யக்கூடிய வீதிகள் மூலம இணைக்கப்படவேண்டும். இவ்வாறு இணைக்கப்படின், இன்று காணப்படும் போக்குவரத்துக் குறைந்த தனிமை நிலை நீக்கப்பட்டு, இப்பிரதேசம் ஏனைய பகுதிகளுடன் நெருக்கமாக இணைக்கப்படும். இது இப்பிரதேசத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகிக்கும்.

2. ஆனையிறவு கிழக்கு நன்னீரேரி சம்பந்தமாகப் பல பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன. அவையாவன:-

I) ஆனையிறவு கிழக்கு நன்னீரேரியின் நீர்கொள்ளவுத் திறனை அதிகரித்து, அந்நீரை மண்டலாய்க் கால்வாய் மூலம் வடமராட்சிக் கடல் நீரேரிக்குக் கொண்டு சென்று, தொண்டைமானாறு வழியாகக் கடலுக்குள் செலுத்தல. இதன் மூலம் வடமராட்சி கடல் நீரேரி சார்ந்த பகுதியில் 20,000 ஏக்கர் நிலம் மேம்படுத்தப்படும்.

(மிகுதி நாளை)

## நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு

யாழ்.மாநகரசபைப் பிரதேச நீர் பாதுகாப்பு, சூழல் முகாமைத்துவத் திட்டம்

(நோர்வே அரசாங்கத்தினால் நிதிப்படுத்தப்பட்டது)

# கேள்வி அறிவித்தல் இல.04

## சிறுகுளங்களையும் வாய்க்கால் தடுப்புச் சுவர்களையும் புனரமைத்தல்

1. ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் பொருளாதார சுற்றுப்புற அபிவிருத்தியை முன்னேற்றுவதற்காக நோர்வே அரசாங்கத்துடனான ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் மேற்படித் திட்டத்திற்கான நிதி இலங்கை அரசிற்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் கீழ் தரப்பட்டுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சிறுகுளங்களையும் வாய்க்கால் தடுப்புச் சுவர்களையும் புனரமைக்கும் வேலைகளுக்காகப் பகிரங்கக் கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.
2. இதன் பின்னகத்துத் தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் நிவாரணம் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சின் செயலாளருக்காக யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் அவர்களால் மூடி பொறிவைக்கப்பட்ட கேள்விகள் 'எம் 8' இக்ராட் ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.
3. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்விக்கும் ரூபா 500/= படி பணமாகச் செலுத்தி , 13.08.2005 இல் இருந்து 25.08.2005 பிற்பகல் 15 மணி வரை வேலை நேரங்களில் மேற்படி "நீர்ப்பாதுகாப்பு" அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோரமுடியும். ஏதாவது ஓர் ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது அவர்களால் மேற்கொள்ளும் "நீர்ப்பாதுகாப்பு" வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும். மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளினால் அல்லது திருப்திகரமற்றவேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தினைக் கொண்டிருத்தல் ஆகாது.
6. கடந்த காலங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளைத் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும். இது தொழில்தருனர்களிடமிருந்து/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றும் தரப்படல் வேண்டும்.
7. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் கேள்விப் பத்திரங்களை இலவசமாகப் பார்வையிட்டு மேலதிக விவரங்களை *"நீர்ப்பாதுகாப்பு" அலுவலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* எனும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல.021-222 6752.
8. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் யாவும் அவை திறக்கப்படும் தினத்தில் இருந்து 90 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரின் பெயரில் எடுக்கப்பட்ட எதிரே குறிக்கப்பட்ட தொகைக்கான கேள்விப் பிணைப்பத்திரமும் இணைக்கப்பட்டு, *"மாவட்ட செயலாளர் /அரச அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்குத் தனித்தனி உறைகளில் இடப்பட்டு 26.08.2005 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகக் இரு பிரதிகளாக அனுப்புதல் வேண்டும். இதற்கென அலுவலகத்தில் புனர்வாழ்வுப் பகுதிக் கணக்காளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலும் இடப்படலாம். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.
9. அதேதினம் 15 மணிக்கு கேள்விகள் யாவும் அரசாங்க அதிபர் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளிக்கலாம்.
10. கேள்வி கோருவோருக்கு இதன்போது ஏற்படும் செலவுகளுக்குத் தொழில்தருநர் பொறுப்புடையவர் ஆகார்.

### விவர அட்டவணை

| இல. | யாழ்.மாநகர சபை எல்லையுள் வெள்ளவாய்க்காலின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் கொண்டுள்ள ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | பறவகுளம் JPO/WC/PO/01/27 | 08 | 28,600.00 |
| 2. | இராஜாளிகுளம் JPO/WC/PO/01/24 | 08 | 14,900.00 |
| 3. | வண்ணான்குளம் (வண்ணார்பண்ணை வடக்கு) JPO/WC/PO/01/28 | 08 | 15,700.00 |
| 4. | தாமரைக்குளம் JPO/WC/PO/01/20 | 08 | 16,600.00 |
| 5. | புறாக்குளம் JPO/WC/PO/01/37 | 08 | 17,500.00 |
| 6. | முதலிக்குளம் JPO/WC/PO/01/09 | 08 | 12,900.00 |
| 7. | அஞ்சுதன் குளம் JPO/WC/PO/01/26 | 08 | 21,400.00 |
| 8. | பிள்ளையார் கோவில் குளம் (நீராவியடி) JPO/WC/PO/01/44 | 08 | 12,600.00 |
| 9. | நரியன்குண்டுக்குளம் (பகுதி II) JPO/WC/PO/01/43 | 08 | 10,700.00 |

| இல. | யாழ்.மாநகர சபை எல்லையுள் வாய்க்கால் தடுப்புச் சுவர்களின் பெயர் | இக்ராட் நிறுவனத்தில் கொண்டுள்ள ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கக் கூடிய கேள்விப்பத்திரப் பிணை வைப்புப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| 1. | கல்லூரி வீதியிலிருந்து கன்னாதிட்டிக்குளம் வரை JPO/WC/CH/1/10 | 08 | 31,400.00 |
| 2. | கன்னாதிட்டிக்குளத்திலிருந்து வண்ணான்குளம் நுழை வாயில் வரை JPO/WC/CH/1/11 | 08 | 30,200.00 |
| 3. | வண்ணான்குளம் வெளிவாயிலிருந்து மின்சார நிலைய வீதிவரையுள்ள பிரதான கால்வாய் JPO/WC/CH/1/12 | 08 | 9,800.00 |

மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
12.08.2005

**க.கணேஷ்**
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(C/44069)(42-14-19)


**திருமணக் கார்** (குளிரூட்டியது)
**வாடகைக்கு**
+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்



போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட] குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு:
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1940 - 01 - 01



மறைவு 2004 - 07 - 26

### திருமதி சண்முகலிங்கம் சரஸ்வதி

(உரும்பிராய் வடக்கு)
திதி: 14.08.2005

*பரிவுடனும் பாசத்துடனும் பண்புடனும்*
*எம்மை வளர்த்த அன்புத் தெய்வமே!*
*நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டு*
*சென்றாலும் உங்கள் நினைவலைகள்*
*என்றும் எங்கள் இதயத்தை விட்டகலாது!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்*
*வல்ல இறைவன் திருவருளை வேண்டுகின்றோம்.*

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
(38667) (39.14.19.42)

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்:
சகோதர சகோதரிகள்,மக்கள்,
பேரமக்கள்,பேரன், பேர்த்திகள்.


**யாழ். மண்ணில் இருந்து துரித வெளிநாட்டு பொதிகள் சேவை (EXPRESS PARCEL SERVICE)**

**ஐரோப்பிய நாடுகள் - 3 நாள்களில்**
(பிரான்ஸ் ஜேர்மனி ,சுவிஸ், லண்டன் இத்தாலி, நோர்வே,டென்மார்க்)
**கனடா, அவுஸ்திரேலியா - 4 நாள்களில்**
உங்கள் பொதிகளை நாமே பொதி செய்து ஒப்படைக்கின்றோம். ஒரு பொதியின் நிறை குறைந்தது 5Kg இருத்தல் வேண்டும். மேலதிகமாக எவ்வளவு நிறையும் இருக்கலாம்.

தாய் மார்களே? மனைவி மார்களே? உங்கள் பிள்ளைகள், கணவன்மார் வெளிநாடுகளில் கஷ்ரப்பட்டு உழைக்கும் பணத்தை வீண் விரயம் செய்யாமல் இருப்பதற்கு அவர்களுக்குத் தேவையான உணவு, உடை,அலங்காரப் பொருள்கள், வீடியோ நாடா, கடிதங்கள் ஆகியவற்றை எம் மூலம் மாதம் தோறும் அனுப்புவதன் மூலமாகப் பெரும் தொகையான பணத்தை மீதப்படுத்திக் கொள்வதோடு அவர்களது சேமிப்பையும் பெருக்கிக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
**RAINBOW TRAVELS & TOURS**
**32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**T.P.:0777 328 219.**
ராஜா கிறீம் கவுஸ் அருகாமையில், அபிநயா நகை மாடத்துக்கு மேல்.



**STUDY IN LONDON MALAYSIA & INDIA**

ஏன் COLLEGEVIEW?
• மும்மொழிகளிலுமான இலவச ஆலோசனை சேவைகள் • ஆண்டு முழுவதுமான விண்ணப்ப நடைமுறைகள் • விரைவான பல்கலைக்கழக அனுமதி • நூற்றுக்குமதிகமான தரமான பல்கலைக்கழகத் தெரிவுகள் • பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு வசதிகள் • பதிவு செய்யும் சகல மாணவர்களுக்கும் இலவச ஆங்கில வகுப்புக்கள் • வெளியிட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் • சர்வதேச தரத்திலான ஆலோசனை சேவைகள் • பகுதிநேர வேலைவாய்ப்புக்கள் ஏற்பாடு செய்து தரப்படும் மேலும் பல சேவைகள்......

Basic Qualifications G.C.E. (O/L) Pending A/L results also may apply

1000 £ Scholarship for UK University



*Available Courses*
*Management, Business Ad. (BBA, MBA, Phds), Marketing, HRM, Accounting, Finance, Economics, Law, Computer Science, IT Networking, Pattern Designing & Textile, Hotel Management, Travel & Tourism, Engineering (Aerospace, Electrical & Electronical etc..,) Medicine, Dental, Fine Arts, Beauty Culture, Shipping Courses, Nursing ..*
**All Courses are available in any field.**

September Semester க்கான பதிவுகள் தற்பொழுது ஏற்றுக்[illegible]

**COLLEGEVIEW International**
(Professional Overseas Educational Consultant[illegible] Promoters)
No. 142-1/2, Galle Road, Wellawatta, Colombo [illegible] Sri Lanka.
Tel : 0114 512175, 011 5672131 Fax : 0094 [illegible]
E-mail : collegeview@visualnet.lk
Mr. A.R.M.Mubarack:0773 113156 Mr. Hassan Mubarak:0714 909670
*Yes, we show you the path*
(Next to Wellawatta Police Station)

# இணுவில் சம்பவத்துடன் புலிகளை தொடர்புபடுத்துவது அபாண்டம்

## கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

இணுவிலில் அண்மையில் இராணுவச் சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து உருவாகிய மக்கள் கொந்தளிப்பின்போது ஏற்பட்ட அசம்பாவிதங்களுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்துவது அபாண்டமானது.

- இவ்வாறு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் றொணி, கண்காணிப்பாளர் மார்க் ஆகியோரை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்றுமுன்தினம் சந்தித்தார். புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

அப்போது கண்காணிப்புக் குழுவினரிடம் இளம்பரிதி கூறியதாவது:-

இணுவில் பிரதேசத்தில் அண்மைக்காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாயின் சூட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் பலியானதையடுத்து ஏற்பட்ட மக்கள் கொந்தளிப்பில் இடம்பெற்ற சம்பவங்களில் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களைச் சம்பந்தப்படுத்திக் குற்றஞ்சாட்டுவதும், சந்தேகம் தெரிவிப்பதும் படைத்தரப்பினரதும் பொலீஸாரதும் உள்நோக்கங்களின் பாற்பட்டவை இவ்வாறான அநாவசியச் செயற்பாடுகள் மூலம் எமது உறுப்பினர்களை வேண்டுமென்றே அவமானப்படுத்துவதுடன், அரசியல் பணி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போட்டு நெருக்கடிக்குள் தள்ளும் முயற்சியாகவும் உள்ளது.

தமிழர் தாயகத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் அரசியல்பணி செய்பவர்கள் மீதும் போராளிகள் மீதும் தாக்குதல்களை ஒட்டுக் குழுக்களின் பெயரில் ஸ்ரீலங்காப் படையினரே மேற்கொண்டு வருவதால் போர்நிறுத்த உடன்படிக்கை நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டு, மக்கள் மரண பீதிக்குள்ளாக்கப்படும் சூழ்நிலைபோல, யாழ் குடாநாட்டிலும் நெருக்கடி நிலைகளைத் தோற்றுவிக்கவே படைத்தரப்பு முயற்சிக்கின்றது. எனவே எமது உறுப்பினர்கள் மீது உண்மைக்கு மாறாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் திட்டமிட்ட பொய்ப் பரப்புரைகளும் நிறுத்தப்பட வேண்டும். இவை நிறுத்தப்படாத நிலைமையானது போர்நிறுத்த மீறலாகவே அமையும். இவ்வாறான செயற்பாடுகளினால் அகௌரவத்திற்கும், அசௌகரியங்களுக்கும் எமது உறுப்பினர்கள் உட்படும் நிலையைத் தவிர்ப்பதற்கு எமது அரசியல் பணிப் போராளிகள் அனைவரையும் மீள எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் திரும்பப் பெறும் நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும். இந்நிலைமையானது போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகச் செயவிழக்க வைத்துவிடும்.

ஆகவே, இவ்வாறான குற்றச்சாட்டுகளையும் திட்டமிடப்பட்ட பொய்ப் பரப்புரைகளையும் சிறிலங்காப் படைத்தரப்பும் பொலீஸாரும் உடன்நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் எடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (ஐ)

## விளையாட்டு விழா

கொழும்பு,ஓக.14

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், முஸ்லிம் மக்கள் பணிமனையின் அனுசரணையுடன் நடத்தும் யாழ்.பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு ஒஸ்மானியக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் தலைமையில் நடைபெறும் இவ் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா கலந்துகொள்கிறார்.(9)

## மனநோயாளருக்கு மருத்துவ ஆலோசனை

குருநகர்,ஓக.14

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைகளில் மன நோய்த்தாக்கத்துக்குள்ளாகிச்சிகிச்சை பெற்றுவருவோருக்கு விசேட மருத்துவ ஆலோசனைகள் உரிய மருத்துவ நிபுணர்களால் வழங்கப்பட்டுவருவதாக யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

பேராசிரியர் தயா சோமசுந்தரம், டாக்டர் சிவயோகன், டாக்டர் விமலகாந்தன், டாக்டர் யூடி ரமேஸ் ஆகியோர் நேரடியாக இம் மருத்துவ ஆலோசனைகளை வழங்கிவருகிறார்கள்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் சிகிச்சை பெற்றுவரும் மன நோயாளிகளுக்கே வைத்திய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஓ-51)

**S.L.A.S**
வழிகாட்டல் வகுப்பு
பிரிவு-II 4.30 p.m.
15.08.2005 திங்கள்
**D.C.C.A**
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

## கதிர்காமரின் கொலைக்கு கண்டனங்கள்

கொழும்பு,ஓக.14

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டமை ஒரு அப்பட்டமான மனித உரிமை மீறல் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மனிதப் படுகொலைகளை யார் மீது யார் நிகழ்த்தினாலும் அதை நாகரிகமடைந்த எந்த ஒரு மனித சமூகமும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. சமாதானத்தை விரும்பும் எவரும் இந்தப் படுகொலையை நிகழ்த்தியிருக்க முடியாது.

மேலும் இவ்வாறான எந்தப் படுகொலைகளையும் ஈ.பி.டிபியினராகிய நாம் அன்றிலிருந்து இன்றுவரை வன்மையாகக் கண்டித்தே வந்திருக்கின்றோம். அந்தவகையில் புலிகளால் மேற் கொள்ளப்பட்ட அமைச்சர் கதிர்காமர் மீதான படுகொலையை ஈ.பி.டி.பியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

* * *

கொழும்பு,ஓக.14

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை இந்தியா கண்டித்துள்ளது.

இது குறித்து இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் நிருபமா ராவ் தெரிவித்ததாவது:-

கதிர்காமர் நீண்டகாலமாகவே இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டுவந்தார். இலங்கையின் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அவர் முன்னின்று செயற்பட்டார். தேசப்பற்றாளரான அவரது கொலைக்குப் பின்னர் ஏற்படும் சவால்களை இலங்கை மக்கள் எதிர்கொண்டு நாட்டின் ஒற்றுமையினை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார் இந்திய உயர்ஸ்தானிகர்.

**பிற்போடப்பட்டுள்ளது**

புகையிரத வீதி -மல்லாகம்
ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக
இன்று (14.08.2005) ஞாயிறு அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் தீபாவளித் தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.
(38874) (18-15-45-25) - கழகத்தினர்.

**PERSONAL CLASSES**

கணிதம்

தரம் 8-11 வரையிலான மாணவர்களுக்குத் தனிப்பட்ட ரீதியாகவும் குழு ரீதியாகவும் வீடுகளுக்கு வந்து இலகுவான முறையில் கற்பிக்கப்படும். (Paper Class Specially for O/L Students)
தொடர்புகளுக்கு: 021 222 3957

SPOKEN ENGLISH WITH GRAMMER

வெளிநாடு செல்லவிருப்பவர்களுக்காகவும் வேலைக்குச் செல்பவர்களுக்காகவும் G.C.E. A/L இல் தோற்றியவர்களுக்காகவும் 100% பேச்சுப் பயிற்சியுடன் இலகுவான முறையில் வீடுகளுக்கு வந்து தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது குழு ரீதியாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0777 250571
(38869) (18-15-45-25)



**உளமார வாழ்த்துகின்றோம்**

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள **உயர்திரு.ரி.ரகு** அவர்களை நாம் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது சேவை நல்லமுறையில் மேலும் தொடர மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

**மேசியா நகை மாடம்**
237, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(38864) (18-15-45-25)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ள
**உயர்திரு.ரி.ரகு**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அவரது சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

யாழ்ப்பாண மின்னகம்,
மகாநதி புடைவையகம் (சாவகச்சேரி, யாழ்ப்பாணம்),
மகேஸ் அன் சன்ஸ் (சாவகச்சேரி).
உரிமையாளரும் ஊழியர்களும்.
(சி-44089)(42-18-15-45-25)

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.) (சி-41187)

**நாதன்ஸ் சினிமா**

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேல் நடித்த



**சின்னா** (றீகல்)
அடிதடி, காதல், நகைச்சுவை
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-43363)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளம் புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த



**தாஸ்** (றீகல்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே). (சி-43380)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா, கோவைசரளா மற்றும் பலர் நடித்த
**பிரியசகி**
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (சி-44110)

## மரண அறிவித்தல்கள்

### தவராசா சுகந்தன்

(காசாளர் -நகரசபை, வல்வெட்டித்துறை)



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தவராசா சுகந்தன் அவர்கள் நேற்று (13.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கார்த்திகாவின் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்) அன்புக் கணவரும் திகழவனின் பாசமிகு தந்தையும் தவராசா -இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் வடிவானந்தம் - தவஞானசரஸ்வதி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருநெல்வேலி வடக்கு,*
*நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக*
*திருநெல்வேலி.*
T.P.: 0777 286139

தகவல்:
*சி.வடிவானந்தம் (மாமனார்).*
(38873) (18-15-45-25-29)

### பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம புகையிரத நிலைய அதிபர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டியை வாழ்விடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி சுந்தரலிங்கம் 11.08.2005 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புறொக்ரர் பொன்னுச்சாமி - நாகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் சிதம்பரப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரி, காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் அமிர்தாம்பிகை, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் குகஞானசோதி (கனடா), சிவஞானமதி (பிரான்ஸ்), Dr.விக்னேந்திரன் (பின்லாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசரத்தினம் (கனடா), வேலுப்பிள்ளை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வித்தியானி (கனடா), கஜாளினி (கனடா), கர்ஷினி (கனடா), வேலீசன் (பிரான்ஸ்), குமரேசன் (பிரான்ஸ்), அபிராமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் சுருதியின் (கனடா) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது அளவெட்டி இல்லத்தில் இன்று (14.08.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் வீதி,*
*கேணிக்கரை, அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.*

தகவல்:
*குடும்பத்தினர்.*
(38858) (18-15-45-25-29)

### திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பிராசா

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை தம்பிராசா அவர்கள் நேற்று (13.08.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*தம்பிராசா (கணவர்),*
*கருணாகரன்*
*(மருமகன் - லொறி கருணா ஆவரங்கால்).*

*பத்தமேனி,*
*அச்சுவேலி.*
(38876) (18-15-45-2..)

# அவசரகால நிலை பிரகடனம் பத்து நாள்களுக்கு நீடிக்கும்?

கொழும்பு, ஓக 14

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டிருப்பதை அடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துவதற்காக நாடு முழுவதும் அவசர காலநிலை பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று அதிகாலை முதல் அவசர காலநிலையைப் பிரகடனம் செய்தார்.

கதிர்காமரைச் சுட்டுக்கொன்றவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உதவியாக முப்படைகள் மற்றும் பொலீஸாருக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் நோக்குடன் அவசர காலநிலை பிரகடனப்படுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்படைகள் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் நேற்று அதிகாலை கூடி எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக விசேட பாதுகாப்புத் திட்டங்கள் உடனடியாக நடைமுறைப் படுத்தப்பட்டன. இந்த நடைமுறையின் கீழ் வடக்கு - கிழக்குப் பகுதிக்குச் செல்லும் நுழை வாயில்களைப் பயன்படுத்தும் சகல பயணிகளும் முழுமையாக சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குச் செல்லும் சகல வீதிகளிலும் உடனடியாக கூடுதல் வீதித்தடைகள் போடப்பட்டன. வாகனங்கள் மீதும் தனி நபர்கள் மீதும் தீவிர சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதேவேளை -

நாட்டில் அவசரகால நிலை அடுத்து வரும் பத்துதினங்களுக்கு அமுலில் இருக்கும் என்று பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ கூறியிருக்கிறார் என்று இணையத்தள செய்தி ஒன்று தெரிவித்தது.(ஐ-ஒ-9-13)

# கதிர்காமருக்கு போதிய பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது!

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.14

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு போதிய பாதுகாப்பு வழங்க அரசு தவறிவிட்டது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய தேசியக் கீட்சியின் துணைச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க, தமது ஆட்சிக் காலத்தில் கதிர்காமருக்கு கடும் பாதுகாப்பு வழங்கியிருந்ததாகவும் இப்போது அது சீர்குலைந்துள்ளதாகவும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை -

ஆயுததாரியின் தாக்குதலுக்கு மிகப் பெரிய உன்னதமான தலைவர் ஒருவரை நாடு இழந்துவிட்டது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

இன மத பேதம் இன்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர் குரூரமான முறையில் கொல்லப்பட்டமை அனைவராலும் கண்டிக்கப்படவேண்டியது. இந்த இழப்பு நாட்டில் உள்ள அனைவருக்கும் பாரிய இழப்பு எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ஐ-ஒ-9-13)

# படையினர் திடீரென...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது.

அமைச்சர் கதிர்காமர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டதையடுத்தே படையினர் இவ்வாறு தன்னிச்சையான இந்த முடிவை நடைமுறைப்படுத்தினர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் நேற்றுக் காலை வழமைபோல முகமாலை மற்றும் ஓமந்தை சூனியப் பிரதேசங்களிலுள்ள தமது நிலைகளுக்குச் சென்றிருந்தனர். ஆனால், ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக வன்னிப் பகுதிக்குள் பிரவேசிக்கப் பயணிகளை அனுமதிக்கப் படையினர் மறுத்துவிட்டனர். எனினும், வன்னிப் பகுதியிலிருந்து ஓமந்தை சோதனைச் சாவடியூடாக வெளியேற பயணிகளுக்குப் படைத்தரப்பு அனுமதி வழங்கியிருந்தது.

இதேவேளை -

முகமாலை சோதனைச் சாவடியூடாக பொது மக்களை உள் நுழையவோ வெளியேறவோ படையினர் அனுமதிக்கவில்லை. இவற்றின் காரணமாக சுமார் 700 வாகனங்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் தவங்கிடந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக்காலை முகமாலை நோக்கிச் சென்ற நூற்றுக்கணக்கான வாகனங்கள் பயணிகளுடன் மீண்டும் திரும்பி வந்தன.

உயிலங்குளம் பாதை மூடப்பட்டதால் - மடுமாதா ஆலய உற்சவத்துக்காக யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற நூற்றுக்கணக்கான பக்தர்களும் பெரும் சிரமமடைந்தனர்.

பாதை மூடப்பட்டமை தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், புலிகள் மற்றும்படைத்தரப்பினருடன் தொடர்பு கொண்டு பேசினர். எனினும், பயணிகள் போக்குவரத்துக்குத் தாங்கள் எவ்வித தடங்கலையும் ஏற்படுத்தவில்லை என்று புலிகள் தரப்பிலிருந்து பதிலளிக்கப்பட்டது. பொதுமக்களின் பயணத்துக்குப் படையினரே தடை விதித்துள்ளார்கள் என்பதனையும் புலிகள் கண்காணிப்புக் குழுவினரிடம் சுட்டிக்காட்டினர்.

கண்காணிப்புக்குழுவின் தலையீட்டை அடுத்து நண்பகல் 12 மணிக்குப் பின்னர் ஓமந்தை மற்றும் முகமாலை சோதனைச் சாவடிகள் ஊடாகப் பொதுமக்கள் தடையின்றிப்பயணம் செய்ய முடிந்தது எனினும், நேற்றைய தினம் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகமாக இருந்தமையால் பொது மக்கள் மிகவும் சிரமமடைந்தனர்.

இதற்கிடையில் - இந்தப் போக்குவரத்துத் தடை காரணமாக வவுனியா ஊடாக தாமதமாக வந்த பயணிகள் பலர் நேற்றுமாலை முகமாலை சோதனைச் சாவடியை உரியநேரத்தில் தாண்டிவர முடியாமற்போனதால் நேற்றிரவு அவர்கள் பளைப் பகுதியில் தங்கிநிற்க நேர்ந்தது.

(ஐ- 9-7-35)

# சினைப்பர் சுடுகலன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பாகப் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்திருப்பதாவது:-

இச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்துக்கு இடமானவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சம்பவம் இடம்பெற்ற பிரதேசம் கடும் சோதனைக்குள்ளாகியிருக்கிறது. மோப்பநாய்களைக் கொண்டு சோதனை நடத்தியதன் மூலம் கைவிரல் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் தொடர்பாகத் தகவல்கள் தெரிந்தால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் அறிவியுங்கள்.

கொலையாளிகளைத் தேடி வெள்ளி இரவு ஆரம்பமான தேடுதல்கள் இன்னும் தொடர்கின்றன. கொழும்பு நகரை மையமாகக் கொண்டே இந்தத் தேடுதல்கள் நடைபெறுகின்றன.

அரசுத் தலைவரினால் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதால் முக்கிய காரணங்கள் இல்லாமல் கொழும்பு நகருக்குள் எவரும் உள்நுழைய வேண்டாம் எனப் பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

அமைச்சர் கதிர்காமரைக் கொலை செய்வதற்காக உள்நுழைந்த குழுவினர் கொண்டு வந்ததாகச் சொல்லப்படும் சினைப்பர் சுடுகலன் ஒன்று வீடு ஒன்றிற்கு அருகில் இருந்து நேற்றுக்காலை பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை கதிர்காமரின் கொலை தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் அயல் வீட்டைச் சேர்ந்தவர். ஏனைய இருவர்களும் வீட்டின் சுற்றுப் புறத்தில் வசித்தவர்கள்.

பொலீஸார் முழு வீச்சுடன் இந்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, எமக்குப் பொதுமக்களின் உதவி தேவை. பொதுமக்கள் மிகவும் புத்திசாலித்தனமாக செயற்படவேண்டும். தமது தனிப்பட்ட வெறுப்புக்களை வைத்து எவரையும் கைது செய்விக்க முயலாமல் பொதுமக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். அத்துடன் சந்தேக நபர்கள் இன்னமும் அருகிலேயே உள்ளனர். கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் குறிப்பாக கொழும்பு தெற்குப் பிரதேசத்திலேயே இவர்கள் ஒளிந்திருக்கலாம் என்று தெரிவித்தார்.

(ஐ-9-13)

### புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணித்தியாலங்களின் பின்னர் இந்த உரையாடல் இடம்பெற்றிருக்கிறது. சமாதான செயலகம் ஊடாக இந்த உரை யாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாக அரசியல் துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

# வீடு ஒன்றின் மாடியில் தங்கியிருந்தே குறிபார்த்துச் சுட்டார் கொலையாளி!

கொழும்பு,ஓக.14

கொழும்பு, புல்லர்ஸ் வீதியில் உள்ள வீடொன்றின் மாடியிலிருந்தே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீது சினைப்பர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட இந்த வீட்டின் மாடிப்பகுதிக்குச் செல்லும் கதவை உடைத்து உள்ளே நுழைந்த தாக்குதலாளி அங்கிருந்த குளியலறை ஜன்னல் ஊடாக - சுமார் 100 மீற்றர் தூரத்தில் இருந்து - கதிர்காமரைச் சுட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

தாக்குதலாளியால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் குடிதண்ணீர் மற்றும் குளிர்பானப் போத்தல்களும், உணவு வகைகளும் ஒரு சோடி காலணியும் மாடி வீட்டிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. மாடிவீட்டின் குளியலறைக்குள் தாக்குதலாளி நிலையெடுக்கப் பயன்படுத்தியதாகக் கருதப்படும் ஏழு அடி உயர இரும்புத் தாங்கி ஒன்றும் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து இருவேறு கை ரேகைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இந்த வீட்டின் வெளிப்புறத்தில் நான்று வெற்றுத் தோட்டாக்களும், வீட்டிற்குச் சமீபமாக உள்ள பற்றைக்குள்ளிருந்து 8 தோட்டாக்களுடன் கூடிய கிரனேட் ஏவும் துப்பாக்கியும் கண்டெடுக்கப்பட்டுள்ளன - என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஒ-9)

# கதிர்காமரின் அயலவரான தமிழ்த் தம்பதியர் கைது!

கொழும்பு,ஓக.14

கதிர்காமர் மீது சினைப்பர் தாக்குதல் நடத்தியவர் தங்கி நிலை எடுத்ததாகக் கருதப்படும் வீட்டின் உரிமையாளர்களான தமிழ்த் தம்பதியர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கொழும்பின் முன்னணி வர்த்தக நிறுவனமொன்றின் நிறைவேற்று அதிகாரியான லக்ஷ்மன் தளையசிங்கம் (வயது 58) மற்றும் அவரது மனைவி திருமதி விவியன் செல்வலோஜினி தளையசிங்கம் ஆகியோரே கைதானவர்களாவர்.

கொலைச் சம்பவம் நடந்த போது வீட்டில் மனைவி மட்டுமே இருந்தார் என்றும் அறிய வந்துள்ளது.

இந்த வீட்டின் மாடிப் பகுதியை தாம் மிக அரிதாகவே பயன்படுத்துவார்கள் என்றும் -

சம்பவம் நடந்தவேளை மாடியில் மனித நடமாட்டம் குறித்து தாம் எதுவும் அறிந்திருக்கவில்லை என்றும் - அவர்கள் பொலீஸாரிடம் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் கதிர்காமர் கொலை தொடர்பாக சுமார் நூறு பேரிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும் -

அவர்களில் மூன்று சிங்களவர்கள் உட்பட 16 பேர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் -

பொலீஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-9)

## சர்வதேச ரீதியாக கண்டனம்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்டதற்கு சர்வதேச நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

கதிர்காமர் படுகொலை ஒரு பயங்கரவாத நிகழ்வு. அமைதி முயற்சிகளை இந்த படுகொலைச் சம்பவம் சீர்குலைக்கும் என்றும் சர்வதேச நாடுகள் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனானின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக், அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் கொண்டலிசா றைஸ், இங்கிலாந்து வெளியுறவுச் செயலர் ஜாக் ஸ்ட்றோ மற்றும் இந்திய, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு அமைச்சகங்கள் சார்பில் அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ருப் ஹொக்லன்ட் தனது அறிக்கையில், அமைதி முயற்சி நடவடிக்கைகளை முற்றிலும் பாதிக்கக்கூடிய ஒரு பொறுப்பற்ற செயல் என்று கண்டித்துள்ளார். (ஐ-ஒ)

## ஜே.வி.பியும் கடும் கண்டனம்

கொழும்பு,ஓக.14

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு வீரபுருசர் என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையின் ஊடாகவாவது உண்மையையும் யதார்த்தத்தையும் புரிந்து கொள்ளவேண்டும் எனத் தெரிவித்துள்ள அவர், மண்டியிட்டுப் பெற்றுக்கொள்ளும் கேவலமான சமாதானத்தால் எத்தனைபேரை நாடு இழக்கப்போகின்றதோ தெரியாது என்றும் கூறியிருக்கின்றார். (ஐ)

### புலிகள் கூறுவதை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வித தொடர்பும் இல்லை. இது அரசிற்குள் இருக்கும் சில வேறு பிரிவினரால் நடத்தப்பட்டிருக்கலாம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை மேற்கோள்காட்டி விடுதலைப் புலிகளின் இணையத்தளம் ஒன்று தெரிவித்திருப்பதை எம்மால் - அரசால் - ஏற்றுக்கொள்ள முடியாது. இது பாரிய யுத்த நிறுத்தமீறல் என்பதோடு, சமாதான முயற்சிகளிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆரம்ப விசாரணைகளில் இருந்து புலிகள்தான் இந்தக் கொலைக்குப் பொறுப்பு என அரசு கருதுகிறது. இப்படி அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

(ஐ-9)

### சுதந்திர சதுக்கத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்களான மங்கள சமரவீர, அமரசிறி தொடங்கொட மற்றும் அமைச்சர்களின் செயலாளர்களான ஜே.எஸ். கருணாரட்ன, மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா, எச். ஜே.எஸ். புண்ணியக்கார, திலக்ரணவிராஜா, டீ.திஸ நாயக்கா,கணேகல ஆகியோரும் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதர் கே.பாலபட்ட பென்டியும் இடம்பெற்றிருக்கின்றனர்.

(ஐ-ஒ-9-13)

### டக்ளஸ், சங்கரி உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புச் சபைக் கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. முப்படைத் தளபதிகள், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட அரச முக்கியஸ்தர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரமுகர்களின் பாதுகாப்பைப் பேணுவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதி தேவைப்படுவதாக கூட்டத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இதன்படி பொலீஸ் திணைக்களத்துக்குத் தேவையான நிதியை உடனடியாக வழங்குமாறு திறைசேரிக்கு உத்தரவிடப்பட்டது.

இந்த நிதி ஒதுக்கீடு தொடர்பாக திறைசேரியின் செயலாளர் பின்னர் பொலீஸ்மா அதிபருடன் தனியாகப் பேச்சு நடத்தினார்.

தலைநகரிலும் நாட்டின் முக்கிய பகுதிகளிலும் எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் நேற்றைய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அமைச்சர் கதிர்காமரின் படுகொலை தொடர்பான தேடுதல்கள், விசாரணைகள் முடிவடையும் வரை அவசரகாலநிலை வாபஸ் பெறப்படமாட்டாது என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது. (ஐ)


## மரண அறிவித்தல்

### திருமதி வேலுப்பிள்ளை நாகரத்தினம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை நாகரத்தினம் அவர்கள் நேற்று (13.08.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.08.2005) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கெள்ளவும்.

*இருபாலை கிழக்கு,*
*இருபாலை.*
*T.P.: 0777112095*

தகவல்:
(38877) (18-15-25) குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

14.08.2005





# ஈழப்போரின் அடுத்த நகர்வு: சர்வதேச அழுத்தம் குறுக்கே!

தமிழீழ விடுதலைப் போராட்டம் சர்வதேசத்திடம் சிக்கியதால் தடம் புரளுமோ என்ற அச்ச நிலை. ஒரு நாட்டுக்கு உரிய படைபலம், கட்டமைப்புக்களுடன் தமிழீழ விடுதலைப் போராட்டம் பரிணாமம் பெற்று உச்ச நிலையில் இருந்தபோதும், அடுத்த கட்டத்துக்கு நகர முடியாத இக்கட்டில் சிக்கித் தவிக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் பிரசன்னம் - அதாவது மறைமுக அழுத்தம் - காரணமாக அடுத்த நிலைக்கு அடியெடுத்து வைக்க முடியாத சிக்கலில் உள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை - தடைகளை மீறி - கட்டுப்பாடுகளை உடைத்து - அடுத்த கட்ட நகர்வாக யுத்தத்துக்கு இட்டுச் செல்லுமாறு அந்தப் போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் தலைமைக்கு மக்களின் அழுத்தம் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மக்களின் விருப்பை நிறைவேற்றுவதா? அல்லது சர்வதேசத்தின் பிரசன்னத்தை ஏற்றுச் செயற்படுவதா? என்ற இக்கட்டான நிலை விடுதலைப் புலிகளின் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது. இந்த இக்கட்டு நிலையைக் கடந்த வார இறுதியில் கிளிநொச்சிக்கு வந்த நோர்வே அனுசரணையாளர்களுக்கு புலிகளின் தலைமை விரிவாக விளக்கியிருக்கின்றது.

"தமிழ் மக்கள் பொறுமை இழந்து வருகிறார்கள். சமாதான முன்னெடுப்புகள் மீதான நம்பிக்கையை இழந்தவர்களாக அவர்கள் எமது தலைமைப் பீடத்துக்குப் பல்வேறு நெருக்குவாரங்களைக் கொடுக்கிறார்கள். மக்களுக்கு மதிப்பளிக்கவேண்டிய நெருக்கடி நிலையில் எமது தலைமைப்பீடம் இருக்கின்றது".

தமது தர்மசங்கட நிலையை இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தம்மைச் சந்தித்த நோர்வே அனுசரணைக்குழுவின் தலைவரும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிசனிடம் தமிழ்ச் செல்வன் இப்படித் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் கோரிக்கைக்கு அடிபணிந்து செயற்பட வேண்டிய இக்கட்டில் தாங்கள் இருப்பதை நோர்வே மூலம் சர்வதேச சமூகத்துக்கு விடுதலைப் புலிகள் பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

இந்த நாட்டில் கடந்த 40வருட காலமாகப் புரையோடிக் கிடக்கும் தமிழ் மக்களின் இனப்பிணக்குக்கு உரிய தீர்வைச் சிங்கள ஆட்சியாளர்கள் தர மாட்டார்கள். அவர்கள் தமது அரசியல் லாபத்துக்காக தமிழர் பிரச்சினையைப் பாவித்து, தமிழ்மக்கள் இந்த நாட்டின் இரண்டாம்தரப் பிரஜைகள்தான் என்பதை மறைமுகமாகச் செயலில் காட்டி வருகின்றனர். இதைச் சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

கடந்த மூன்றரை வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் போர் நிறுத்த சூழலில் தமிழர் தரப்பு சமாதானத்தின்பால் காட்டி வரும் பற்றுறுதியைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

போர் நிறுத்த உடன்படிக்கையை அரசுடன் செய்து, ஆறு கட்டப் பேச்சுக்களை அரசுடன் நடத்தி, சமாதானத்தின் மீதான தமது விருப்பை சர்வதேசத்துக்குத் தமிழர் தரப்பு வெளிப்படுத்தியிருந்தது.

ஆனால், மாறாக தமிழ் மக்களின் குரல்வளை நெரிக்கப்பட்டுள்ளது. பேரினவாதத்தின் குரல் உச்சம் பெற்றது. தமிழ் மக்கள் மீது இராணுவ நெருக்குவாரங்கள், அடக்குமுறைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. முழுமையாக அவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் இன்று விரக்தியின் விளிம்புக்கு வந்துள்ளனர். அதன் பிரதிபலிப்புத்தான் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு அவர்கள் கொடுக்கும் நெருக்குவாரங்கள். இந்த நெருக்குவாரங்களுக்கு விடுதலைப் புலிகளின் தலைமை எந்த விதத்தில் செயல் வடிவில் பதில் தரப்போகிறது ? இதுதான் இன்று சகலர் மனதிலும் எழும் கேள்வி.

கடந்த மூன்றரை வருடங்களாகத் தமது போராளிகளை, பொறுப்பாளர்களை இழந்த போதும் பொறுமை காத்து வந்த விடுதலைப் புலிகளின் தலைமை, தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கும் கட்டத்துக்கு வந்துள்ளது என்றே கருத வேண்டியுள்ளது.

### ஈழப்போர்களின் வரலாறு

கடந்த காலப் போராட்டத்தை திரும்பிப் பார்த்தால், ஈழப்போர் பல முக்கிய கட்டங்களைக் கடந்து வந்துள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படை இங்கு கால் ஊன்றுவதற்கு முற்பட்ட காலத்தில் 1983தொடக்கம் நடைபெற்ற யுத்தம் முதலாம் ஈழப் போராகவும் -

அதன் பின் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் நடத்திய பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்ததும் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி மட்டக்களப்பில் பொலீஸார் மீது மேற்கொண்ட தாக்குதலுடன் ஆரம்பமானது இரண்டாம் கட்ட ஈழப்போராகவும் -

1995 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்கவுடன் நடத்திய பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்து 95ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி திருகோணமலையில் கடற்படைக் கப்பல்கள் மீது மேற்கொண்ட தாக்குதலுடன் ஆரம்பமானது மூன்றாம் கட்ட ஈழப்போராகவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த மூன்று கட்டப் போரும் சர்வதேசத்தின் பிரசன்னமோ, அழுத்தமோ இன்றி சுயாதீனமாக எடுக்கப்பட்ட முடிவுகளின் படி ஆரம்பிக்கப்பட்டன.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியன்று ஸ்ரீலங்கா அரசின் பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவின் சிங்களத் தரப்புக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தமிழர் தரப்புக்கும் இடையில் நோர்வேயின் - சர்வதேசத்தின் - பிரசன்னத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

### சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாக நோர்வே

இலங்கை விடயத்தில் நோர்வே தனியொரு நாடாகப் பங்குபற்றவில்லை. அது சர்வதேச சமூகத்தின் பிரதிநிதியாக - அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதியாகவே - இலங்கை விடயத்தில் அனுசரணையாளராக வந்தது என்பதை அதன் பிந்திய காலச் செயற்பாடுகளில் இருந்து அறியமுடிகின்றது.

அனுசரணைப் பணிகளுக்காக இலங்கை வந்து இலங்கைத் தரப்புடனும் விடுதலைப் புலிகள் தரப்புடனும் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பும் நேரங்களில் நோர்வேக் குழுவினர் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சென்று சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் மற்றும் பின்னடைவுகளை விளக்கும் பணியையும் கூடவே செய்து வந்தனர்.

அத்துடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளை உள்ளடக்கி இணைத்தலைமை அமைப்பு ஒன்றையும் நோர்வே உருவாக்கியிருந்தது.

நோர்வே காட்டிய ஆர்வமும் விடுதலைப் புலிகள் காட்டிய கரிசனையும் பற்றுறுதியும் வெற்றி பெற்றிருந்தால் நோர்வேயின் ராஜதந்திரம் உச்ச நிலையை அடைந்திருப்பதுடன், தமிழ் மக்களுக்கும் நிரந்தரத் தீர்வு ஒன்று கிடைத்திருக்கக் கூடும்.

வெண்ணை திரண்டு வரும் நேரத்தில் தாழியை உடைத்த கதைபோல சிறிலங்காவில் கடந்த மூன்றரை வருட காலத்தில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்கவும் சந்திரிகா குமாரதுங்கவும் தங்கள் அரசியல் சித்து விளையாட்டில் ஈடுபட்டுச் சமாதான முன் நகர்வில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விட்டனர். அவர்களை வரலாறு மன்னிக்கப் போவதில்லை. யுத்தம் மீண்டும் ஆரம்பித்தால் அதற்கான முழுப்பொறுப்பையும் அந்த இரு தலைவர்களுமே ஏற்க வேண்டும்.

நோர்வேயில் தற்போது தேர்தல் காலம். செப்ரெம்பர் 12ஆம் திகதி அங்கு தேர்தல் நடக்கப்போகின்றது. தற்சமயம் ஆட்சியில் இருக்கும் வலதுசாரி கன்ஸர் வேட்டிங் மற்றும் லிபரல் கட்சி - கிறிஸ்தவக் கட்சிகளின் கூட்டமைப்புக்குப் பின்னடைவு ஏற்படலாம் என அவதானிகள் கூறுகின்றனர். புதிய ஆட்சி அமைத்து அனுசரணைக் குழுவில் புதியவர் இடம்பெற்று மீளவும் இலங்கை விடயத்தை அவர்கள் கையாளப் பெரும்பாலும் மூன்று மாதங்கள் செல்லலாம் எனக் கருதப்படுகின்றது.

அதேபோன்று இலங்கையிலும் அரசியல் குழப்ப நிலை - தளம்பல் நிலை - காணப்படுகின்றது. பொதுத் தேர்தலையா? ஜனாதிபதித் தேர்தலையா? நாடு எதிர்கொள்ளப்போகின்றது என்ற குழப்பநிலை கொழும்பில் காணப்படுகின்றது. தேர்தலை நடத்தும் விடயத்தில் நீதிமன்றத்திலேயே பேட்டா போட்டி.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இலங்கை விடயத்தில் சர்வதேசத்தின் பிரசன்னம் - அக்கறை - அடுத்த சில மாதங்களுக்கு இருக்காது. அப்படி இருந்தாலும் இலங்கையில் நிலவும் அரசியல் குழப்ப நிலையில் சர்வதேசத்தின் பிரசன்னம் பெரிய அளவில் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கேட்பார் யாருமின்றி - தமிழர்கள் மீதான நெருக்குவாரங்களை - அழுத்தங்களை - ஸ்ரீலங்காப் படைத்தரப்பு தீவிரமாக்கலாம். அவ்வாறு தீவிரமாக்கினால் மக்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்து போராடப் புறப்படும் போது, விடுதலைப் புலிகளின் தலைமையும் நல்ல தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படும். அது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அத்தகைய நிலை உருவாகும்போது, நான்காம் கட்டப் போருக்குள் நாடு மெல்ல மெல்லப் பிரவேசிக்கும் சூழல் ஏற்படலாம்.

### தற்காப்புப் பயிற்சியில் மக்கள்

மக்களின் எதிர்பார்ப்புக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லை தாண்டும் நிலையில் தம்மைப் பாதுகாக்கும் பயிற்சிக்கு அவர்கள் தயாராகிவிட்டனர். சகல மட்டத்தில் உள்ளவர்களும் அந்தப் பயிற்சிகளில் தங்களை இணைத்துக் கொள்ளும் கட்டாய வரலாற்றுத் தேவை உருவாகி வருகின்றது என்பதை கள நிலைமைகள் காட்டுகின்றன.

தமிழர் தாயகத்தில் மாவட்டம் தோறும் மக்கள் எழுச்சிபெற்று சர்வதேசத்துக்கு உரத்துக் கூறும் செய்தி - பிரகடனம் - "எங்களை அங்கீகரியுங்கள். சிங்களப் பேரினவாதத்தின் செயற்பாட்டை அவதானித்த சர்வதேசமே இன்னமும் எங்களைப் பொறுக்கச் சொல்கிறீர்களா?" என்பதுதான்.

— குகா

**பல** தரப்பு வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் அண்மித்து வருவதாகக் கருதமுடிகிறது. நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தத்தமது தரப்பின் சார்பில் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரைப் பகிரங்கப்படுத்தி விட்டன. இவ்விரு வேட்பாளர்களில் ஒருவரே எதிர்காலத்தில் நாட்டை நிர்வகிக்க இருக்கும் ஜனாதிபதி என்பதை நாட்டு மக்கள் சகலரும் அறிவர். ஆயினும், இவ்விரு வேட்பாளர்களின் குணவியல்புகள் குறித்தும் அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய அணுகுமுறைகள் குறித்தும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும்

என அனுரா ஒருசில சந்தர்ப்பங்களில் விமர்சித்ததுண்டு. ஆயினும், மஹிந்த தம்மை ஒரு தேசிய அரசியல்வாதியாக நிலை நிறுத்துவதற்கு அவருக்கு மேலும் அரசியல் அனுபவம் அவசியமாகிறது. தமது கருத்து வெளிப்பாடு, சிந்தனை என்பவற்றில் அவர் மேலும் பண்பட்டாக வேண்டியுள்ளது. சர்வதேச அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக அவருக்கு மேலும் நிறையவே அனுபவம் தேவையாகிறது. பொதுமக்களது அபிமானத்தை ஈட்டுவதற்கான அரசியல் அணுகுமுறைகளிலிருந்து அவர் சற்று விலகி இறுக்கமான கொள்கை நிலைப்பாட்டைக் கடைக்கொள்ளும் நிலைக்குத் தம்மை மாற்றிக்கொள்வது

ஆனால், இன்று இவ்விருவரும் கருத்தொருமித்துச் செயற்பட ஆரம்பித்துள்ளனர். அனுரா பிரதமராக ஆகவேண்டுமானால், தற்போதைய பிரதமர் மஹிந்த ஜனாதிபதித் தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வேண்டியுள்ளது.

பொது.ஐ.முன்னணி மற்றும் ஜே.வி.பி. ஆகிய இரு தரப்பினரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்விதத்திலாவது ஐ.தே.கட்சியைத் தோற்கடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இவ்விரு தரப்பினரதும் பொது எதிரி ஐ.தே.கட்சியும் அதன் தலைவர் ரணிலுமே. எனவே, ஜே.வி.பி. மீண்டும் பொ.ஐ. முன்னணியில் இணைய



# ரணிலுக்கா மஹிந்தவுக்கா ஆதரவுப் பலம் யாருக்கு?



லங்காதீப' சிங்கள நாளிதழில் அலசி ஆராய்கிறார் பத்திரிகையாளர் **ரங்கா கலன்சூரியா.**

• • •

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் சார்பான வேட்பாளர் குறித்த சர்ச்சை கடைசியில் முடிவுக்கு வந்துள்ளது.

அரச அதிகாரத்தைத் தற்போது தம் வசம் கொண்டுள்ள ஸ்ரீல.சு.கட்சி ஜனாதிபதி வேட்பாளரைப் பகிரங்கப்படுத்தியுள்ளமை பெரும்பாலும் எதிர்வரும் டிசெம்பரில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாய் அமைவதாகச் சிலர் கருதுகின்றனர். இதனை உறுதி செய்யும் வகையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புச் சீட்டுக்கள் அச்சிடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவருகின்றன.

ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெறும் என்பது குறித்த முடிவு தேர்தல் ஆணையாளராலேயே தீர்மானிக்கப்படும். பெரும்பாலும் இது குறித்த முடிவு விரைவில் வெளியாகக்கூடும்.

### ஸ்ரீல.சு.கவின் பலம்

ஸ்ரீல.சு.கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் குறித்துக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் மத்தியில் நிலவிய சர்ச்சைகள், வாதப் பிரதிவாதங்கள் யாவும் தற்போது முடிவுக்கு வந்துள்ளன. இதுவரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்காவும் தம்மிடையே விரோதமான கருத்துக்களை வெளிப்படுத்தி வந்தபோதிலும், பொது நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்து கொள்ளும் வேளைகளில் தாமிருவரும் நெருக்கமான நண்பர்கள் போன்று காட்டிக்கொள்ளத் தவறுவதில்லை.

ஆனால், இன்று அவர்கள் இருவரும் கைகோர்த்துக் கொண்டு அரசியல் போட்டியில் தமது எதிரணிகளுக்குச் சவால் விடுமளவுக்கு நெருக்கமாகி விட்டனர்.

இவ்விருவருக்கும் இடையே நிலவிய முறுகல் நிலை சுமுகமாகத் தீர்க்கப்பட்டமை ஸ்ரீல.சு.கட்சிக்கு மேலும் பலம் சேர்ப்பதாக அமைந்து விட்டதாகக் கருதப்படுகிறது.

அரசியலில் பிரவேசித்து குறுகிய காலத்தில் தம்மை ஒரு தேசிய அரசியல்வாதியாக வெளிக்காட்டுவதில் பிரதமர் மஹிந்த வெற்றியடைந்தவர். அவரது அரசியல் வாழ்வு முன்னைய பிரதமர் பிரேமதாசவின் அரசியல் வாழ்வை ஒத்தது. மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல்' அணுகுமுறைகளை 'மலர்த்தட்டு அரசியல் பிரபல்யம் பெறும் பிரயத்தனம்'

அவசியமாகிறது.

பொதுமக்களிடையே அவருக்கு இருக்கும் அபிமானம் குறித்து சந்தேகம் கிடையாது. ஆயினும், ஜனாதிபதிப் பதவிக்குப் பொதுமக்களது ஆதரவும் அபிமானமும் மட்டும் போதுமானதல்ல.

அன்று பிரதமர் மஹிந்தவைத் தூற்றியோர் இன்று அவர் பின்னால் அணி திரள்வதைக் காணமுடிகிறது. அன்று அவரைச் சந்தேகத்துடன் நோக்கிய மங்கள சமரவீர, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்தவின் வெற்றிக்காகத் தோளோடு தோள் நின்று உழைக்கத் தயாராகிறார். அன்று அவரது காலை வாரிவிட்ட அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க அவருக்கடுத்துத் தாம் பிரதமர் பதவியை அடைய முயல்கிறார்.

### நண்பர்களே எதிரிகளும்

இதில் குறிப்பிடப்படவேண்டிய மற்றோர் அம்சமும் காணப்படுகிறது. அன்று பிரதமர் மஹிந்தவுக்குப் பக்கபலமாக நின்று உதவியோர் இன்று அவருக்கு எதிராகச் செயற்பட முன்

மாட்டாது என்பதை உறுதியாகக் கூற முடியாதுள்ளது. ஆரம்பத்தில் மஹிந்த பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவதை எதிர்த்த ஜே.வி.பி. பின்னர் பிரதமர் மஹிந்தவுடன் நல்லுறவு பேணிச் செயற்பட்டது. அவ்வித நிலையை உருவாக்கியதில் மங்கள சமரவீர பெரும் பங்கு வகித்தார். எனவே, ஏதோ ஒரு வகையில் ஜே.வி.பியின் ஆதரவை மகிந்த தம்பக்கம் திருப்பிக்கொள்வார் என்றே சிலர் நம்புகின்றனர்.

### ரணிலின் தப்புக்கணக்கு

இவற்றின் அடிப்படையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். மஹிந்தவை மற்றொரு கொப்பேகடுவவாகக் கருத ஐ.தே.கட்சி முயலுமானால், அது நிச்சயம் தப்புக்கணக்காய் அமையும். இன்று பொ.ஐ.முன்னணி அரசு ஐ.தே.கட்சியின் ஆதரவை நாடுவதாக ஐ.தே.கட்சியினர் கற்பனை செய்கின்றனர். இது நிரந்தர மற்றதொரு மகிழ்ச்சியாகும். ஏனெனில், இன்று பலரது எதிர்பார்ப்பும் ஜனாதிபதித் தேர்தலேயன்றிப் பொதுத்தேர்தல் அல்ல.

### சிறுபான்மையினரின் ஆதரவு

இந்த நிலையில், இறுக்கமான போட்டி ஒன்றை எதிர்கொள்ள வேண்டுமானால், ரணில் தம்மிடமுள்ள குறைகளை உணர்ந்து, அவற்றை நிவர்த்தி செய்து கொள்ள இப்போதிருந்தே தயாராக வேண்டியுள்ளது. அதுவுமன்றி, சிறு கட்சிகளிடையேயும் சிறுபான்மையினரிடையேயும் தமது செல்வாக்கை உயர்த்திக்கொள்வதற்கு கவனம் செலுத்தியாக வேண்டும்.

பொதுவாக மஹிந்த, பௌத்த சிங்கள வாதத் தலைவராகவே செல்வாக்குச் செலுத்த முடிகிறது. சிறுபான்மை இனங்கள் மத்தியில் தமது செல்வாக்கைத் தேடுவதற்கு அவர் இன்னமும் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளது. தெற்கில் றுகுணைப் பகுதித் தலைவராகத் தம்மை இனங்காட்டிக்கொண்டு பௌத்த, சிங்கள மக்களின் ஆதரவை அவர் பெற்றிருந்த போதிலும், ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையினரின் கணிசமான வாக்குகளைப் பெறமுடிந்தால் மட்டுமே அவரது வெற்றி

# அடுத்த ஜனாதிபதிப் பதவி: தூக்கு மேடையா? பஞ்சு மெத்தையா?

நிற்கின்றனர்.

ஆயினும், இன்று மஹிந்தவும் அனுராவும் அரசியல் களத்தில் ஒன்றிணைந்து இறங்கியுள்ளமை ஐ.தே.கட்சிக்குப் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக ஒரு சில அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். பிரதமர் மஹிந்தவுக்குள்ள பொதுஜன ஆதரவும் அமைச்சர் அனுரா பண்டார நாயக்காவுக்குள்ள சர்வதேச செல்வாக்கும் இணைந்து ஸ்ரீல.சு. கட்சிக்குப் பெரும் பிரபல்யத்தை உருவாக்கியுள்ளதாக அந்த விமர்சகர்கள் நம்புகின்றனர்.

எவர் எதனைக் கூறிய போதிலும், குடும்பப் பின்னணி காரணமாக அனுராவுக்கு அரசியல் அரங்கில் கணிசமான செல்வாக்கு இருந்து வருகிறது என்பதே உண்மை. ஆனால், பண்டாரநாயக்கா குடும்பத்தின் இளைய தலைமுறையான போதிலும், அரசியல் தலைவர் ஒருவருக்குரிய லட்சணங்களில் எதனையும் அனுரா கொண்டிருக்கவில்லை. இல்லையேல், பல ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்க் கட்சித் தலைவராய் இயங்கும் வாய்ப்பைப் பெற்றிருந்த அனுரா, இன்று இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு மஹிந்தவின் நிலை உயர்ந்திருக்க முடியாது.

ஸ்ரீல.சு.கட்சியால் எதிர்காலத்திலும் அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள இயலுமானால், மஹிந்த மற்றும் அனுரா ஆகிய இருவரிடையேயும் நெருக்கம் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆனால், இது எந்த அளவுக்குச் சாத்தியமாகும் என்பதை எவராலும் எதிர்வு கூற இயலாது. முன்னர் ஸ்ரீல.சு.கட்சியில் அனுராவுடன் இணைந்து செயற்பட்ட மஹிந்த பின்னொரு சமயம் அனுராவுக்கு சவால் விடுமளவுக்கு மாறியிருந்தார்.

'மக்களது பலம்' என்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கை மூலம் திரட்டிய பொது மக்களது ஆதரவைத் தொடர்ந்து தக்க வைப்பது ஐ.தே.கட்சிக்குச் சவாலான தொன்றாகும்.

தனிப்பட்ட ரீதியில், மஹிந்தவை விட ரணில் அதிக அரசியல் அனுபவம் கொண்டவர் எனலாம். ஆனால், மஹிந்தவுக்கு ரணிலை விட கீழ்மட்டப் பொது மக்களது ஆதரவு நிறையவே உண்டு. ரணில் வெறுமனே பொய் வாக்குறுதிகளைப் பொதுமக்களுக்கு வழங்கப் பின் நிற்பதாலேயே தேர்தல்களில் ரணிலின் தரப்பு தோல்வியுற நேர்வதாக ஒரு சிலர் கருதுகின்றனர். ரணிலின் பார்வை நேரானது. நீண்ட கால நோக்கில் அமைந்தது. ஆயினும், அரசியல்வாதி ஒருவருக்கு அவசியமான பொது மக்களை ஆகர்சிக்கும் தன்மை ரணிலிடம் குறைந்தே காணப்படுகிறது. அவரது பேச்சும், சிந்தனையும் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கில் அமைந்தவை.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கூட ரணில் ஒரு தலைவராகக் கருதப்படுகிறாரேயன்றி, செல்வாக்கு மிக்கவராகக் கருதப்படவில்லை. அதேசமயம், மஹிந்த ஸ்ரீல.சு. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமன்றி, ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களிடையேயும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறார்.

உறுதியாகும். வடக்குத் தமிழர்கள் மற்றும் கிழக்கு முஸ்லிம்களின் கணிசமான வாக்குகளைப் பெற்றால் மட்டுமே அவரால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற இயலும்.

பிரதமராகப் பதவி வகித்த இச் சொற்ப காலத்தில் சிறுபான்மை மக்களின் ஆதரவைத் திரட்ட மஹிந்த கடும் பிரயத்தனம் மேற்கொண்டதாகக் கூற இயலாதுள்ளது. அவ்விதம் சிறுபான்மை

**வீயெஸ்ரீ**

மக்களின் செல்வாக்கைத் திரட்ட அவருக்கு நிறையவே வாய்ப்புக் கிட்டிய போதிலும், அவர் பௌத்த, சிங்கள மக்களது ஆதரவைத் திரட்டுவதிலேயே அதிக அக்கறை காட்டிச் செயற்பட்டுள்ளார்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் செல்வாக்குத் திரட்டிக்கொள்வதில் மஹிந்தவுக்கு சிரமம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. அண்மையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் கவுன்சிலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதமர் மஹிந்த வெளியிட்ட கருத்து பெரும்பாலான முஸ்லிம்களின் பாராட்டுக்களைப் பெற்றது. முஸ்லிம்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டுமாயின் அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமென அவர் அங்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

(VIII பக்கம் பார்க்க)

# தொழில் நிலையில் யாழ்ப்பாணப் பெண்கள்

உலகில் எப்பகுதியிலும் பெண்களின் வாழ்க்கைக் கோலமானது குடும்பம் என்னும் அமைப்பினுள் பின்னிப்பிணைந்த ஒன்றாகக் காணப்படுகிறது. அவர்களது சமூக நிலைப்பாட்டினைக் குடும்பத்துக்கு அப்பால் நின்று ஒருபோதும் ஆராயமுடியாது. ஒரு பெண் சமூகத்தில் என்ன நிலையில் வைத்து நோக்கப்படுகின்றாள் என்பதைப் பகுப்பாய்வு செய்யும்முன் 'பால்' (Sex) பால் ' நிலை' (Cender) இவ்விரு பதங்களையும் ஆழ்ந்து நோக்குதல் சாலச் சிறந்தது.

'பால்' என்பது உயிரியல் சார் பண்புகளைக் குறித்து நிற்கின்றது. ஆண், பெண் என்ற இரு சாராரையும் பிரித்துக் காட்டுவதற்கு உடல் உறுப்பு வடிவங்களை அடிப்படையாகக் கொண்டதுதான் பால். அதனால் 'பால் நிலையானது' ஒரு சமூகப் பண்பாட்டில் ஆண்,பெண் எனும் இருபாலாரும் கொண்டிருக்கும் அந்தஸ்து நிலைகளைக் குறித்து நிற்கின்றது. ''ஒரு குழந்தை பிறந்தவுடன் ஆண் குழந்தையாயின் நீல வர்ணப் போர்வையால் சுற்றப்படுவதும், பெண் குழந்தையாயின் இளஞ்சிவப்பு வர்ணப் போர்வையில் சுற்றப் படுவதும் பால் நிலைப் பங்கின் ஆரம்பமாகும் - என்கிறார் ஒரு சமூகவியலாளர்.

ஆனால், காலப்போக்கில் ஏற்பட்ட பால் நிலை அந்தஸ்துசார் மாற்றமானது உலகளாவிய ரீதியிலானதாகும். பொருளாதாரத்தில் பெண்களின் நுழைவு பால்நிலை சார் அம்சங்களின் படி 1960களிலேயே வேலைக்குச் செல்லும் பெண்களின் வீச்சு மூன்றில் இரண்டாக உயர்ந்துள்ளமை ஒரு மிகப்பெரிய சமூக மாற்றம்.

இலங்கையின் 'வட புலமான யாழ்ப்பாணத்தின் சமூகம், பண்பாடு பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகும். யாழ்ப்பாணம், பல இறுக்கமான பண்பாட்டம்சங்களைக் கொண்டது. அதாவது மக்கள் குழாம்களின் பல்வேறுபட்ட மரபுகள், நியமங்கள் மற்றும் வழக்காறுகள் யாவும் ஒருங்கிணைந்த வாழ்க்கைக் கோலங்களையும், மகளிர் சார் செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க சமூக அம்சங்களையும் இவை உள்ளடக்கியதுடன், மிக முக்கியமாக தென்னிந்தியப் பண்பாட்டுப் பின்னணியினையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. வட புலத்துப் பெண்கள் பற்றிய பொதுவான எண்ணக்கரு யாதெனில் , பெண்கள் கற்றவர்களோ, கல்லாதவர்களோ, கிராமத்தினரோ, நகரத்தவரோ, தொழில் செய்பவரோ, வீட்டில் இருப்பவரோ யாராகினும் அவர்கள் தமது பௌதிக பாதுகாப்பிற்கும், வாழ்வாதாரத்திற்கும் ஆண்களிலேயே-தங்கியிருத்தல் என்னும் நிலையைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதாகும். ஆயினும், ஆங்கிலேயர் அறிமுகம் செய்த பெண் கல்வி முறையினால் தோற்றுவிக்கப்பட்ட பெண் இனம் சார்ந்த விழிப்புணர்வானது கற்ற பெண்களைக் குரல் கொடுக்க வைத்தது. எனினும், கடந்த இரு தசாப்பதங்களாக இலங்கையில் இடம்பெற்ற இன முரண்பாடான தமிழ்ப் பெண்களில் குறிப்பாக யாழ்ப்பாணப் பெண்களில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்தது எனலாம்.



யாழ்ப்பாணத்தில் கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் எழுபது வீதத்திற்கும் அதிகமான பெண்கள் தொழில் புரிகின்றனர் . அவற்றில் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் ஆசிரியர்கள் ஆவர். தொழில் புரிபவர்களில் திருமணமாகாதவர்கள் – இளம் பெண்கள் தனியார் நிறுவனங்களிலும், அரச சார்பற்ற நிறுவனங்களிலும் (NGO) கடமையாற்றுகின்றனர். இவர்கள் பெற்றோர்களுடன் வாழ்பவர்களாகவும், குடும்பப் பொறுப்பற்றவர்களாகவும் காணப்படுவதனாலும் இவர்களிடமிருந்து கூடியளவு சேவை எதிர்பார்க்கப்படுகின்றது.

பகுதி நேர வேலையாக (PART TIME) தையல், அலங்காரம் முதலானவற்றில் ஈடுபடும் பெண்களையும் யாழ்ப்பாணத்தில் காணலாம். இவர்கள் மேலதிக வருமானத்திற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் இத் துறையில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், இளம் பருவ பிள்ளைகளிடம் தாய் வேலைக்கு செல்பவளாகவும் அதேவேளை, பிள்ளையை வளர்ப்பதில் அவள் பொறுப்பற்றவளாகவும் இருக்கின்ற போது அவர்களுக்கு ஏற்படும் பன்முகப் படுத்தப்பட்ட அழுத்தம் (MULTI PRESSURE) மிகவும் பாரதூரமானதாகும். இன்னொரு புறமாக கணவரில் குறிப்பிட்ட வீதத்தினர் மனைவியருக்கு வீட்டுப்பணி உட்பட சகல விடயங்களிலும் ஒத்தாசையாக இருக்கும்போதிலும் மனைவியர் குடும்பப் பொறுப்புக்களையும், சகல குடும்பம் சார் அம்சங்களையும் தாமே செய்யவேண்டும் என உணரும் நிலையானது தமிழர் பண்பாட்டினை ஒட்டி வந்ததாகும். தொழில் புரியும் தாய்மார் உள்ளிட்ட பெண்கள் எமது சமூகத்தைப் பொறுத்த வரை இரட்டை நடிபங்களை (DOUBLE ROLES) ஏற்றுக்கொள்கின்றார்கள். ஒன்று வீட்டில் மற்றையது வேலைத் தளத்தில். இந்நோக்கில் பார்க்கும் போது தொழில் நிலையில் யாழ்ப்பாணப் பெண்கள் இரு நிலைகளில் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது புலனாகின்றது.

- சிவகுமார் சிவரூபன்.

## சந்தியாவின் கடிதங்கள்



**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

கடந்த சில கடிதங்களில் உனக்கென்றொரு சிறு பரீட்சை வைத்தேன். ஆனால் நீ கடிதங்களில் பரீட்சை இருந்ததையே கண்டு பிடிக்கவில்லை. அதனால் நானே அதைப் பற்றி உனக்கு விளக்கமாக எழுதுகிறேன்.

சில கடிதங்களில் 'ஹாய்' பிரியா! என்று விளித்து எழுதியிருந்தேன். 'பிரியமுள்ள' விற்கும் 'ஹாய்' க்கும் உள்ள வித்தியாசத்தை நீ உணரவில்லையா?

'ஹாய்' என்ற இந்த வார்த்தை இன்று நம் இளைஞர், யுவதிகளிடம் சரளமாகப் புழங்குகின்றது. பெரியவர்களிடம் கூட இது மலிந்து வருகின்றது.

வெளிநாட்டு மோகத்தில் திளைத்திருக்கும் நம் சமூகம் அவர்கள் பயன்படுத்தும் சாதாரண வார்த்தைகளைக் கூட விட்டு வைக்கவில்லை.

வெளிநாட்டு மனிதர்கள் எதையாவது செய்தால் நாங்களும் செய்யவேண்டும். அதனால் நாங்கள் பெருமை அடைவோம் என்று நினைக்கின்றார்கள்.

ஆனால், அதிலுள்ள உள்விடயங்களைப் புரிந்து கொள்ள மறுக்கின்றார்கள். 'ஹாய்' என்ற வார்த்தை அங்கு தாராளம். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், புரிந்தவர்கள், புரியாதவர்கள் என யாராயிருந்தாலும் 'ஹாய்' சொல்லும் பழக்கம் அங்கு மலினம்.

ஆனால், மிக வேண்டியவர்களை - அவர்களுக்கும் 'ஹாய்' சொன்னாலும் – அவர்கள் வரவேற் கும் வகையே வேறு. (நம்மிடையே இன்னும் அந்தப் பழக்கம் தொற்றிக் கொள்ளாதவரை நாம் இன் னும் சுய வாழ்வு உடையவர்களே)

எனவே, இந்த 'ஹாய்' ஒரு சாதாரண மேம்போக்கான வார்த்தையே. ஆனால், இதை நாம் உணராமல் எமக்கு மிக வேண்டியவர்களைக் கூட 'ஹாய்..... ஹாய்.....' என்றே விளிக்கின்றோம்.

இதை எழுதியதும் என்னை பிற்போக்குவாதி என்று நினைப்பாய்! நான் பிற்போக்குவாதி அல்ல. அதற்காக என் சுயத்தை, என் தாய்ப் பண்பாட்டை மறந்து பிறமோகத்தில் முற்றாக அமிழ்ந்து வாழ்பவளல்ல.

கற்றுக் கொள்ளல் என்பது நிச்சயம் தேவையான – அவசியமான ஒன்று. தெரிந்தவர்களிடம் தெரியாதவற்றைக் கற்றுக்கொள்வது எம்மை மேலும் செம்மைப்படுத்தும். இந்த எண்ணத்திலேயே எமது முன்னோர்கள் பிறநாட்டவர்களிடம் அவர்களிடம் உள்ள நல்லதைக் கற்றார்கள்.

ஆனால், இன்று எம் இளம் சமுதாயம் அவர்களிடம் உள்ள தீயதையும் கற்க விளைகின்றது. (இந்த இடத்தில் நான் 'ஹாய்' சொல்வதைக் குறிப்பிடவில்லை. அந்த வார்த்தையைப் பயன்படுத்துவது தவறல்ல)

இதன் மூலமே எமது சமூகம் இன்று மிகக்கீழான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. மற்றவர்களிடம் உள்ள நல்லதைக் கற்று தீயதை விடுத்து வாழ்தலே எம் சமூகத்தை முன்னேற்றும்.

எது நல்லது எது தீயது என்று பகுத்தறிய வேண்டியது ஒவ்வொருவரின் மனங்களே.......

**பிரியமுடன் சந்தியா.**

# வாழ்க்கையைத் தீர்மானிக்கும் பல்வகைக் குணாதிசயம்

எமது சமூகத்தில் எத்தனையோ விதமான மனிதர்கள் உள்ளனர். ஒவ்வொருவரிடையேயும் ஒவ்வொருவிதமான குணாதிசயம் உள்ளது. அவை எல்லாவற்றையும் நாம் மாற்றியமைத்துக் கொள்ளமுடியாது. பொதுவாக மனிதர்கள் தம்மிடமுள்ள இயல்பான குணங்களை மாற்றிக் கொள்ளவே மாட்டார்கள்.

இதனால் பெரிதும் பாதிப்படைபவர்கள் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். சூழ்நிலைக்கேற்ப நடந்துகொள்ளாது தமது நிலையில் இருந்து நழுவமுடியாது என்ற பிடிவாதக் குணம் பெண்களிடமே அதிகமா உள்ளது. இவ்வகையான குணங்கள் எமது வாழ்க்கையில் சாதகமாக இருப்பது உண்டு. அதேவேளை பாதகமாக இருப்பதும் உண்டு. எம்மிடையே உள்ள குணங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்ற தவறான மனப்போக்கு எம் எல்லோரிடையேயும் நிறையவே உள்ளது.

இத்தகைய சில குணங்களால் நாம் பெரும் இழப்புகளைக்கூட அடைந்து விடுகின்றோம். வாழ்வில் நாம் முன்னேற்றம் அடையாது இருப்பதற்கும் இது ஒரு காரணமாக உள்ளது.

நம்முடைய குணங்களே நமக்கு எதிரியாக அமைய வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான ஒரு சூழலையும் நாம் ஏற்படுத்தக் கூடாது. நம் வெற்றிக்கு வழி அமைக்கக்கூடிய வகையில் எமது குணங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். வெற்றியோ தோல்வியோ அது எங்கள் மனதையும் குணங்களையும் பொறுத்தது.

– கங்கா கணேசன்

# கண்ணில் கருவளையமா?



கண்களின் கீழ் இருக்கும் கறுப்பு வளையங்கள் உங்களை வயதானவர்களாகக் காட்டுகின்றதா? கவலையை விடுங்கள்! அதை சிம்பிளாக நீக்கிவிடலாம்.

வெள்ளரி, உருளைக்கிழங்கு இரண்டையும் நன்றாக அரைத்து, கருவளையம் உள்ள இடத்தில் பற்றுப்போல் வைக்கவும். பிறகு ஒரு துணியை பன்னீரில் நனைத்து கண்களின் மீது வைத்து படுத்துத் தூங்க வேண்டும்.

இவ்வாறு 5நாள்கள் தொடர்ந்து செய்தாலே போதும் கண்ணின் கருவளையம் ஓடியே போச்சு.

# அழகுக்கு மட்டுமல்ல ஆரோக்கியத்திற்கும்......



உடல் நலம் என்பது சரியான உடல் எடையும் சத்தான உணவு உட்கொள்வதையும் கொண்டது. ஒரு கிலோ அதிக கொழுப்பு உடலில் இருந்தால் கிட்டத்தட்ட 9000 அடி நீளத்திற்கு ரத்த குழாய்கள் தேவைப்படுகிறது. இதனால் இதயத்தின் வேலைப்பளு அதிகமாகிறது. ஆக இதயநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கிறது.

உடற்பயிற்சியால், உணவுக் கட்டுப்பாட்டால் கொழுப்பைக் குறைக்கலாம். மேலும் உடலின் வளையும் தன்மை நல்ல அளவில் உள்ளதால் மூட்டுவலி, முதுகுவலி வராமல் தடுக்கலாம்.

சுவாசத் தன்மையும், இதயத்தின் பலமும் உடற்பயிற்சியால் அதிகரிக்கிறது. இதன் காரணமாக இ தயநோய், மூளையின் இரத்த ஓட்டத்தில் பாதிப்பு என்பன வராமல் நல்ல நலத்துடன் வாழ்நாள் முழுவதும் இருக்கலாம். தினமும் 15 நிமிடம் முதல் 45நிமிடம் வரை செய்யும் உடற்பயிற்சி இவ்வாறு பல நன்மைகளைச் செய்கிறது.



அதுபோன்று உணவுக்கட்டுப்பாடும் அவசியம். நமது உணவில் பெரும்பகுதியான உணவு மாப் பொருள்கள்தான். அரிசி, கோதுமை மற்றும் கிழங்கு வகைகளில் மாப் பொருள், புரதம், கொழுப்பு, விற்றமின்கள் இருக்கும். கைக்குத்தல் அரிசியில் சத்து உண்டு. ஆனால், தீட்டிய இயந்திரத்தில் அரிசி வெறும் மா. நாம் உட்கொள்ளும் உணவு உடம்பினுள் சென்று சக்கரை, கொழுப்புக்கள், அமினோ அமிலங்களாக மாறுகின்றன. அவை சீரான அளவில் இருந்தால்தான் உடலுக்குத் தேவையான சக்தி, பழுதுபார்த்தல் மற்றும் வலு ஏற்பட பயனுள்ளதாக இருக்கும். உடல் நலமாக இருக்கும். அதிக மாப்பொருள், கொழுப்பு உணவில் இருந்தால் அவை உடலில் கொழுப்பாக மாற்றப்பட்டு வயிறு மற்றும் ஏனைய பாகங்களில் சேர்ந்து விடும். உடல் பருமன் அதிகரிக்கவும், சர்க்கரை நோய் மற்றும் பல நோய்கள் ஏற்படவும் வாய்ப்பு அதிகம். உடற்பயிற்சி என்பது நம் உடலின் பாகங்களையும் தசைகளையும் நல்ல முறையில் உபயோகப்படுத்துவது தான்.

கிராமங்களில் வயல்களில், வெளியில் உடல் வலிக்க மண்வெட்டி, கடப்பாறை பிடித்து வேலை செய்வார்கள். அவர்களுடைய உடலின் பாகங்களை நல்ல முறையில் உபயோகிப்பதால் ஆரோக்கியமாக உள்ளார்கள். குண்டாக ஆவதில்லை. ஆனால், நகரங்களில் உடல் உழைப்பு குறைவு. எனவே உட்கொள்ளும் உணவிலுள்ள கலோரிகள் பயன்படுத்தப்படுவதில்லை. குறைந்த சக்தி செலவாகிறது.

அதில் மீதமுள்ளவை பயன்படுத்தப்படாமல் கொழுப்பாக மாறி பல இடங்களில் படிந்து விடுகிறது. முக்கியமான ரத்தக்குழாய்களிலும் அவை படிவதால், அடைப்புகள் ஏற்பட்டு அதனால் இதயநோய், மூளை நோய் ஏற்படுகிறது. உடற்பயிற்சி குழந்தைப் பருவத்திலிருந்தே ஆரம்பித்தால் நல்லது. அது பழக்கமாகி வாழ்நாள் முழுவதும் தொடரும். நீச்சல் ஒரு சிறந்த பயிற்சி. நடப்பது, மெதுவாக ஓடுவது சிறந்தது. தினசரி நடப்பது வயது அதிகமானவர்களுக்கு நல்லது. வெளியில் போய்தான் நடக்க வேண்டும் என்பதில்லை. வீட்டிற்குள்ளே நடக்கலாம். முதலில் 5 நிமிடத்தில் ஆரம்பித்து படிப்படியாக கால் மணி, அரை மணி,ஒரு மணி என நீடிக்கலாம்.

கை, கால்களை அசைப்பது, கயிறு தாண்டுவது, எதுமுடியுமோ அதைச் செய்யலாம். இருதயக் கோளாறு மற்றும் வியாதிகள் உள்ளவர்கள் டாக்டரின் அறிவுரைப்படி மட்டுமே நடக்கவேண்டும். ★.

அர்த்தமுள்ள வாழ்விற்கு...

**கணவனும் மனைவியும் தங்கள் தங்கள் நிலைகளிலேயே பிடிவாதமாக இருந்தால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.**

# துறைமுக மேலாண்மைக்கு பொருத்தமானது வல்வெட்டித்துறையே!

நா.க.சண்முகநாதபிள்ளை



அவர் Walker கொம்பனியினரிடம் அன்னபூரணி அம்மாளை ஒப்படைத்துப் புதுப்பொலிவூட்டினார். இரட்டைப் பாய்மரக் கப்பலாக இருந்த கப்பலுக்கு 50 குதிரை வலுவுள்ள இயந்திரமொன்றும் பொருத்தப்பட்டது. காற்றின் உதவியோடு அசைந்து செல்வதற்குப் பாய்கள்தான் இயக்கமாக இருந்தபோதிலும், சூனியப் பிரதேசங்களைச் சமாளிப்பதற்கு இயந்திரமும் தேவைப்படலாம் என்று தம்பிப்பிள்ளைத் தண்டயல் ஆலோசனை கூறியதாலேயே இயந்திரம் பொருத்தப்பட்டது. அமெரிக்காவிற்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை, தம்பிப்பிள்ளை தண்டயலின் யோசனைப்படி றொபின்சன் தனது மேற்பார்வையில் செய்துமுடித்தார்.

## அமெரிக்கப் பயணம் ஆரம்பம்

1937 ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் திகதி அன்னபூரணி அம்மாளின் அமெரிக்கப் பயணம் ஆரம்பமானது. தம்பிப்பிள்ளை(48) தண்டயலின் தலைமையில், வல்வெட்டித் துறைக் கடலோடிகளான சின்னத்தம்பி - சிதம்பரப்பிள்ளை (28), தாமோதரம்பிள்ளை- சபாரெத்தினம் (28), பூரண வேலுப்பிள்ளை - சுப்பிரமணியம் (29), ஐயாத்துரை- இரத்தினசாமி (24) ஆகியோருடன் கொழும்பிலிருந்து அமெரிக்கா செல்ல அன்னபூரணி புறப்பட்டது. ஆறாவதாகச் சென்றவர் இடையில் விலகிக் கொண்டார். எல்லோரும் வெகு உற்சாகமாகப் பெரும் பயங்கரம் நிறைந்த அந்தப் பயணத்தை ஆரம்பித்தனர். கப்பலில் ஆறு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களும் குடிதண்ணீரும் இருந்தன. கப்பலில் உலக வரைபடம், திசைஅறிகருவி, தூரத்தை அறியும் கருவி என்பனவும் இருந்தன. இவையெல்லாம் மாலுமிகளுக்கு உதவின. மணியம் என்ற சமையற்காரனும் இருந்தான். தம்பிப்பிள்ளையின் தலைமையில் அன்னபூரணி அம்மாளின் பயணம் தொடர்ந்தது. றொபின்சனும் தனக்குத் தெரிந்த மழலைத் தமிழில் மாலுமிகளோடு உரையாடி அவர்களை உற்சாகப்படுத்துவார். மேற்பார்வையும் செய்தார்.

மாலைதீவைத் தாண்டி ஏழு எட்டு மைல் வேகத்தில் கப்பல் சென்றது. ஏடன் துறைமுகத்தை அன்னபூரணி அம்மாள் சென்றடைந்தாள். இதுவரை 2000 மைல் தூரத்தைக் கப்பல் கடந்தது. இன்னும் 3000 மைல்களைத் தாண்ட வேண்டிருயிந்தது. பயணம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை கடலோடிகளுக்கு ஏற்பட்டது. குகையும், மலையுமாக வரண்டு கிடந்த ஏடன் துறைமுகத்தில் அன்னபூரணி அன்னப்பறவை மிதப்பது போல் ஒய்யாரமாக நின்றாள். றொபின்சன் அமெரிக்காவிற்குச் சென்று புளோறினை அழைத்து வரமுடிவு செய்தார். கப்பலைத் தம்பிப்பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டு கப்பலில் உள்ளவர்களுக்கு உணவு, உடை, ஊதியம் என்பவற்றைத் திருப்தியாகக் கொடுத்துவிட்டுப் புறப்பட்டார். தம்பிப்பிள்ளையும் ஒருதரம் ஈழம் சென்று வரவிரும்பினார். இவருடன் சுப்பிரமணியமும் சென்று வர எண்ணினார். எனவே, இரத்தினசாமி, சபாரெத்தினம், சிதம்பரப்பிள்ளை என்போரிடம் கப்பலை ஒப்படைத்துவிட்டு பிரான்ஸ் நாட்டுப் பிரயாணிகள் கப்பலான 'அலெக்ஸ்சாந்திரியா' வில் தம்பிப்பிள்ளையும் சுப்பிரமணியும் ஈழம் சென்றனர். இதனால், கப்பல் ஏடனில் சில காலம் தரித்திருந்தது. எப்படியோ ஏடனில் ஆறுமாதங்கள் சென்று விட்டது. இந்த இடைவெளியில் றொபின்சன் தனது துணைவியார் புளொறினை அழைத்துக் கொண்டு ஏடன் வந்து சேர்ந்தார். தம்பிப்பிள்ளையும் சுப்பிரமணியமும் ஈழத்திலிருந்து வந்தார்கள்.

அடுத்துச் செங்கடலூடாகச் சூடானை நோக்கிப் புறப்பட்டனர். ஏடனில் சோமாலியர்கள் வாழ்ந்தார்கள். சூடானில் அராபியர்கள் அதிகம் வாழ்ந்தார்கள். சூடானை அடைந்ததும் அங்கு நாற்பது நாள்கள் தங்கவேண்டி ஏற்பட்டது. அதனை அடுத்து சுயெஸ் என்ற இடத்திற்குச் சென்றனர். சுயெஸ்ஸிலிருந்து 120மைல் நீளமான சுயெஸ் கால்வாய் ஊடாக இஸ்மாலியா சென்றனர். அங்கிருந்து சுயெஸ் கால்வாயின் முடிவிடமான போட்செயிட் என்ற துறைமுகத்தை அன்னபூரணி சென்றடைந்தாள். அடுத்து பேரூட் துறைமுகத்தில் சில காலம் தரித்து நின்று கீறீட் என்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். கிறீபயில் **Captain Mc Cuish** என்ற கடலோடியை தம்பிப்பிள்ளைக்கு உதவியாக **Robinsan** நியமித்தார். மத்தியதரைக்கடல், அத்திலாந்திச் சமுத்திரம் பற்றிய கடல்நிலை ஆலோசனைக்காக மட்டும். இந்த இடத்திலிருந்து தான் அத்திலாந்திச் சமுத்திரத்தைத் தாண்டி ஜிபி றோல்டருக்குப் போய்ச் சேரவேண்டும். எப்படியோ பாய்களின் உதவியுடன் இது சாத்தியமானது. மத்திய தரைக்கடலூடாக பயணம் நடந்தது.

ஜிபிறோல்டரிலிருந்து மீண்டும் புறப்படும் போது டொஸ்ரர் என்ற ஓர் அமெரிக்கன் றொபின்சனின் சம்மதத்தோடு கப்பலில் சேர்த்துக் கொள்ளப்பட்டான். வேதனைகளையும் கடற்சோதனைகளையும் தாண்டி இறையருளால் பயணம் நிறைவாகப்போகும் சாத்தியங்கள் தென்பட்டன. கனேரியத் தீவுகளைத் தாண்டி, பேர்மியூடாவிற்குக் கப்பல் வந்து சேர்ந்தது. இந்த இடத்தில் இருந்தவர்கள் இஸ்மாலியாவிலிருந்து அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்களாவர். இஸ்மாலியாவிலிருந்து அன்னபூரணி புறப்படும் போது - கப்பல் ஆட்டம் காணாதிருப்பதற்காக மண்மூடைகள் ஏற்றப்பட்டன. பேர்மிடாவில் உள்ள இஸ்மாலியர்கள் அது தங்கள் நாட்டு மண் என்பதை அறிந்ததும் கண்ணில் ஒற்றிமுத்தமிட்டுக் கொண்டார்கள். பிறந்த பொன் நாட்டின் நிறைந்த நினைவுகள் பல ஆண்டுகள் தாண்டியும் அவர்கள் நெஞ்சில் பசுமையாக இருந்தது. இது எமக்கும் கற்பிதமாக அமையவேண்டும்.

பேர்மியூடாவிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட அழகிய தீவுகளினூடாகப் பயணம் தொடர்ந்தது. எத்தனையோ சவால்கள், எத்தனையோ இடர்கள், உயிரையே துச்சமாக மதித்துப் பயங்கரப் பயணத்தை நடத்திய அன்னபூரணி அம்மாளுக்கு அமெரிக்காவை அடைவதற்கு இன்னும் அறுநூறு மைல்கள் மட்டுமே இருந்தது. முன்பு போட் செயிட் துறைமுகத்தில் அன்னபூரணி அம்மாள் நின்றபோது றொபின்சன் இரட்டிப்பு மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார். ஒன்று அன்னபூரணி அமெரிக்கா போகப் போகின்றாள் என்பது, மற்றையது அவருக்கு ஒரு குழந்தை பிறக்கப் போகிறது என்பதாகும்.

றொபின்சன் தனது துணைவியாருடன் போட் செயிட்டிலிருந்து அன்னபூரணியை வரவேற்பதற்காக அமெரிக்கா சென்றிருந்தார். ஒன்றரை வருடத்திற்கும் மேலான நீண்ட பயணம் றொபின்சன் என்ற அமெரிக்கச் செல்வந்தர் நினைத்ததை, வல்வெட்டித்துறைக் கடலோடிகள் செய்து முடித்துச் சாதனையை நிலை நாட்டினர். பிரசித்தி பெற்ற அமெரிக்க குளோசெஸ்ரர் துறைமுகத்திற்கு 1938ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதலாம் திகதி அன்னபூரணி சென்று சேர்ந்தாள். அவளுக்கு எக்கச்சக்கமான வரவேற்பு நடந்தது. அன்னபூரணி நங்கூரமிட்டிருந்த இடத்திற்கு ஏராளமான அமெரிக்கர்கள் வந்தனர். கப்பலுக்கு உள்ளும் புறமும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தலைப்பாகை அணிந்து சிவசின்னங்கள் பூண்டு மெய்த் தவவேடத்தோடிருந்த தம்பிப்பிள்ளையயும் ஏனைய ஈழ நாட்டுக் கடலோடிகளையும் கண்ணாரக் கண்டு மூக்கின் மேல் விரல் வைத்து அவர்களின் மேதாவிலாசத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்பதை அமெரிக்கர் அன்று அறிந்து கொண்டனர். அமெரிக்கர் கொடுத்த அன்புத் தொல்லையில் எம்மவர் திணறிப் போனார்கள். வல்வெட்டித்துறைக் கடலோடிகளின் சுவையான அனுபவங்கள் பேட்டிகள் அமெரிக்கப் பத்திரிகைகளில் முன்பக்கச் செய்திகளாக வெளியாகின. எடுத்துக்காட்டாக சில செய்திகளை வாசகர்கள் வாசித்து புளகாங்கிதம் கொள்ள ஆங்கிலத்தில் கீழே தரப்படுகிறது. அமெரிக்கன் தினசரி

"This famous port which has seen many a colourful arrival in its day , turned out, skippers dorymen, tourists, for a sight that had not been seen in a hundred years, if then, coast guard look - outs flashed the word to town, even as the vessel stood in the offing, Ther Hindus climnbing the yards with a bare - footed agility hat left the old timers gasping in admiration"

A copy of the pertinent paragraphs from Mr.Robinsons letter appeared in Times of Ceylon on March 26.1939 and for your information are quoted below.

"At one time I had six men from Jaffna and during the whole trip they were the only crew I had...... they helped me with rigging, carpentry, painting and sailmaking. I remember that every one in Ceylon said that I was mad to take such a crew. I never reggretted it . They were all fine characters and my wife feels the same about them"

கடல்சூழ்ந்த நாடுகளுக்குக் கடலாதிக்கம் மிக முக்கியமானது. பொருளாதார வளம், பாதுகாப்பு, பிறநாட்டுத் தொடர்பு, போக்குவரத்து என்பவற்றிற்குச் கடல் கட்டுப்பாடு மிக முக்கியமானது. தமிழீழத்தைப் பொறுத்த வரையில் மதிநுட்பமான தூரதிருஷ்டியோடு எமது தேசியத் தலைவர் கடற்புலிகளின் அணி யொன்றினைக் கட்டி எழுப்பித் திண்ணி மறவரைத் திரைகடலோடித் செய்து சீரும் திருவும் பெறச் செய்துள்ளார். இது வாழையடி வாழையாக மரவு வழி வந்த மரபணுக்களின் மகத்துவத்தால் மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ள ஒரு கொடையாகும். இந்த அணியை மேலும் வலுவும் வனப்புமுறச் செய்து "மேலைக்கடல் முழுவதும் கப்பல்" விட்டு, ஆழக் கடலெல்லாம் ஆண்டு ஆட்சி செய்யவேண்டியது ஈழத்தமிழர் கடமையாகும்.

துறைமுக மேலாண்மைக்கு எல்லாவகையிலும் சிறந்தது வல்வெட்டித்துறைதான் என்பதைப் பிரபல்யம் வாய்ந்த கடலோடிகளும், கடல்துறைப் பொறியியலாளர்களும் ஒன்று சேர்ந்து அன்றும் இன்றும் ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே, எதிர்காலத்தில் அத்துறைமுகம் தமிழீழத் தனியரசின் தலைமைத் துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் அதேவேளை, பருத்தித்துறை, தொண்டைமானாறு, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் போன்றவையும் புனரமைப்புச் செய்யப்படவேண்டும். கிழக்கு மற்றும் மேற்கிலுள்ள துறைமுகங்களும் செப்பனிடப்படவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இயற்கைத்துறை முகமாக விளங்கும் திருகோணமலைத் துறைமுகத்தைத் தமிழர் பிரதேசத்துச் சர்வதேசக் கடல்துறைமுகமாக மிளிரச் செய்வதற்கு எமது பகைவரைப் புறக்கண்டு - பணிசெய்யவேண்டும். அப்படிச் செய்தால் அன்னபூரணி போன்ற எண்ணிலடங்காத கடற்கலங்கள் நவீன தொழில் நுட்பங்களுடன் ஐந்து சமுத்திரங்களிலும் ஆற்றலுடன் பவனிவரும் என்பதற்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

*முற்றும்*

# யாழ் பயணம்



# "அமுதமேயாயினும் அளவோடு......"

எனது மகள் சுவிற்ஸர்லாந்து நாட்டில் குடும்பத்துடன் வாழ்வதால், அங்கு சென்று சில நாள்கள் தங்கித் திரும்பும் சந்தர்ப்பமொன்று ஆறு மாதங்களுக்கு முன்னர் எனக்கு வாய்த்தது.

அங்கு தங்கிய குறுகிய கால இடைவெளியில் புதிய அனுபவமொன்றைப் பெறும் வாய்ப்புக் கிட்டியது. இங்கிருந்து புலம்பெயர்ந்து சென்று அங்கு வாழும் யாழ்ப்பாணத்துக் குடும்பமொன்றில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொள்ளக் கிட்டிய வாய்ப்பே அது. மணமகன் தரப்பினர் எமதூரைச் சேர்ந்தவர்களாகையால் எனக்கும் தனியான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

உரிய நேரத்தில் நிகழ்வு நடைபெறவிருந்த மண்டபத்தைச் சென்றடைய வேண்டுமென்பதில் எனது மகள் காட்டிய அக்கறை எனக்கு வியப்பளித்தது. மணமகன் மற்றும் மணமகள் ஆகிய இரு தரப்பினரும் எனது மகளது குடும்பத்துடன் அன்னியோன்யமானவர்கள் என்பதால் அவ்விதம் அவசரம் காட்டியிருக்கலாம் என எண்ணினேன். ஆனால், மேற்குலக நாடுகளில் வாழ்வோர் நேரத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பவர்கள் என்பதையும் எந்தவொரு நிகழ்ச்சியையும் திட்டமிட்டு குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் பழக்கம் கொண்டவர்கள் என்பதையும் பின்னர் தெரிந்துகொண்டேன்.

குறித்ததொரு மண்டபத்தில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்து மத பண்பாடு, தமிழ் கலாசாரம் என்பவற்றுக்கு அமைவான விதத்திலான ஏற்பாடுகள் அவை. வாசலில் பன்னீர் தெளித்து சந்தனப் பொட்டிட்டு வணக்கம் கூறி அன்பான வரவேற்பு.

எங்கிருந்தோ தருவிக்கப்பட்ட மங்கலப் பொருள்கள், மாவிலை- குருத்தோலை தோரணம், மலர்மாலை அலங்காரம், மணவறை, இந்துமத புரோகிதர் ஓமம் வளர்த்து முறைப்படி மாங்கல்ய தாரணம் செய்து வைப்பிப்பதற்கான கனகச்சித ஏற்பாடுகள்.

மொத்தத்தில் யாழ்ப்பாணத்தில் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொள்வது போன்ற உணர்வு.

வேற்றுமொழி பல பேசப்படும் - பல தரப்பட்ட கலாசாரப் பின்னணி கொண்ட அந் நாட்டு நண்பர்கள் கூட அழைப்புக்கிணங்க அங்கு பிரசன்னமாயிருந்தனர். அவர்கள் மத்தியில் நெற்றில் சந்தனப்பொட்டு - பட்டு வேட்டி சால்வையுடன் நம்மூர் ஆண்களும், பட்டுப் புடைவை சரசரக்க - தலை நிறையப் பூச்சூடி தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நம்மூர் பெண்களும் வளைய வந்து யாழ்ப்பாணத்தாரைத் தனியாக அடையாளம் காட்டியதைக் கண்டு மனம் பெருமையில் பூரித்தது.

இத்தனைக்கும் மத்தியில் குறிக்கப்பட்ட சுபமுகூர்த்தத்தில் மாங்கல்ய தாரணம் இடம்பெற்றாக வேண்டும் என்பதில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் மிகுந்த அக்கறை காட்டிச் செயற்பட்டதை அவதானிக்க முடிந்தது. நிகழ்வுகள் யாவும் ஏற்கனவே ஒரு தடவை ஒத்திகை பார்க்கப்பட்டமை போன்று அதததற்குரிய வேளையில் - உரிய ஒழுங்குமுறையில் இடம் பெற்று முடிந்தமை கண்டு பெருமிதம் பொங்கியது.

புதுமணத் தம்பதியரை வாழ்த்தி, விருந்தினர் அனைவரும் முற்றிலும் யாழ்ப்பாணத்துப் பாணியில் அமைந்த விருந்துண்டு களித்தமை மனதுக்கு மன நிறைவு தந்தது.

சரி, நிகழ்வுகள் யாவும் சிறப்புற நடந்தேறி - கால் மணி நேரம் கூட ஆகியிருக்காது. திருமணத்துக்கு வந்திருந்தோர் அனைவரும் - எனது மகளது குடும்பத்தினர் - நான் உட்பட அவரவர் பாட்டில் அவரவர் இடம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றமை, நேரத்துக்கு அந்நாட்டு மக்கள் எத்துணை முக்கியத்துவம் வழங்குகின்றனர் என்பதை உணர்த்துவதாய் அமைந்தது.

இத்தனை மைல்கள் தாண்டி வந்து வேற்று நாடொன்றில், யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தை இயன்றவரை நிலைநிறுத்திப் பெருமை சேர்க்கும் எம்மவரின் பண்பு குறித்து வாய்ப்புக் கிட்டும் வேளை உங்களுடன் பகிர்ந்து கொள்வதென அன்றே தீர்மானித்திருந்தேன்.

நான் ஊர்திரும்பி வந்த பின்னர் அண்மையில் சுசப்பான அனுபவமொன்று - இங்கு எனதூரில் எனக்குக் கிட்டும் என நான் ஒருபோதும் எண்ணியதில்லை. அதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ளாது இப் பத்தி நிறைவு பெறாது.

எனது அயலவர் வீட்டில் திருமண நிகழ்வு.

மணமகளின் தந்தை அயலவர் மட்டுமன்றி, எனது நீண்டகால நெருங்கிய நண்பரும் கூட.

ஒரே மகளானதால் மகளது திருமணத்தை வீட்டிலேயே நடத்த நண்பர் தீர்மானித்தார். திருமணத்துக்கு நான்கைந்து நாள்களுக்கு முன்பிருந்தே ஆயத்தங்களில் நண்பருக்கு நானும் உதவவேண்டி நேர்ந்தது. யாழ்ப்பாணத் திருமண நிகழ்வுகளில் கலகலப்புக்கு ஒருபோதும் பஞ்சம் இருப்பதில்லை. ஆனால், அத்தனை கலகலப்புக்கள் இருப்பினும் முக்கிய முடிவுகள் மற்றும் ஒழுங்குகள் யாவும் பொறுப்பு மிக்க ஓரிருவராலேயே மேற்கொள்ளப்படுவதுண்டு. நிகழ்வு எவ்வித சிக்கலோ, தாமதமோ இன்றிச் சிறப்புற நடந்தேற இது வழி வகுக்கும். ஆனால், எனது நண்பரது வீட்டுத் திருணத்தில் அவ்வித ஒழுங்கு முறைகள் எதுவும் காணப்படவில்லை. சின்னச்சிறு விடயங்களுக்கெல்லாம் பலரிடமிருந்து அபிப்பிராயங்களும் விமர்சனங்களும் வெளிவந்தமை ஏற்பாடுகளில் ஓர் ஒழுங்கின்மையும் தாமதமும் ஏற்பட வழி வகுத்தன. இது ஆரம்ப முதல் திருமண நிகழ்வு முடிவுறும் வரை தொடர்ந்திருந்தது.

திருமணத்தன்று. திருமாங்கல்யதாரணம் இடம்பெறவேண்டிய சுபமுகூர்த்த வேளை முடிவுறும் தருணத்திலேயே மணமகன் திருமண நிகழ்வுக்காக மணமகளின் இல்லத்திற்கு வந்து சேர நேர்ந்தது. வைதீக முறைப்படி, குறிப்பிட்ட சுபமுகூர்த்த வேளையிலேயே மங்கல நாண் அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற வேண்டியது மிக அவசியமானதாகக் கொள்ளப்படும் நிலையில், குறிப்பிட்ட சுபமுகூர்த்த வேளை தாண்டி ஒரு மணி நேரத் தாமதத்தின் பின்னரே - தமிழர் திருமணத்தில் மிக முக்கிய நிகழ்வாகக் கொள்ளத்தக்க - மங்கல நாண் அணிவிக்கும் நிகழ்வு நடந்தேறியமை எனது மனதை நெருடியது.

வசதி வாய்ப்புகளின்றி, பல்வேறு சிரமங்கள் மத்தியில் வேற்று நாடொன்றில் நம்மவர்கள் எமது இனமத பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் கடைக்கொள்ளக் காட்டிய ஆர்வம் கண்டு இறும்பூதெய்திய நான், சகல வசதிகளையும் இலகுவில் பெற முடிந்த எம்மூர் திருமண நிகழ்வில் முக்கிய நிகழ்வினை உரிய வேளையில் நிறைவேற்ற இயலாத நிலை கண்டு சலிப்படைந்தேன். இதற்கான முக்கிய காரணமொன்றையும் என்னால் அவதானிக்க முடிந்தது. அதைச் சொல்ல விளைவதால் 'பழசு, எயிற்றி' என்றெல்லாம் பட்டம் சூட்டப்பட நேரும் என்பதை நானறிவேன். ஆனால், அதை எப்படியும் சொல்லித்தான் ஆக வேண்டிய நிலை எனக்கு.

வாழ்க்கை நிகழ்வுகளை - அதிலும் மகிழ்ச்சிதரும் நிகழ்வுகளை ஆவணப்படுத்தி, மீட்டிப்பார்ப்பது சகலருக்கும் ஆர்வமும் மகிழ்வும் தரவல்லதொன்றே. அதற்கெனப் பல வசதிகள் இருந்தபோதிலும், நவீன தொழில்நுட்பத்துறை முன்னேற்றம் மிக்க இன்று நம்மில் பெரும்பாலானோரை ஆர்வமுற வைக்கும் 'வீடியோ படப்பிடிப்பு' தவறானதொன்றென வாதிடுவது எனது நோக்கமல்ல. மங்கலகரமான நிகழ்வுகள் உரிய வேளையில் உரிய முறையில் நடந்தேற வேண்டுமாயின், இத்தகைய 'வீடியோ படப்பிடிப்பு' முறையினை நிகழ்வுடன் சம்பந்தப்படுபவர்கள் ஒழுங்கமைந்த வகையில் நெறிப்படுத்திப் பூரணப்படுத்துதல் தாமதங்களைத் தவிர்த்து உரிய நிகழ்வுகள் உரிய வேளையில் உரிய ஆகம, பண்பாட்டு விதிமுறைகளுக்கமைய நடந்தேற வழிவகுக்கும். இதனால் ஆயிரம் காலத்துப் பயிர்' எனப்படும் புனிதமான - ஆகம விதிமுறைகளுக்கமைய நிறைவேற்றப் படவேண்டிய - திருமண நிகழ்வுகள் சிறப்புற நடந்தேற வழிவகுக்கும்.

'நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும்' என்றொரு முதுமொழி வழக்கில் உள்ளது. புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களுக்கு அது புரிகிறது. நாம் உணர்வது எப்போது?

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் குறிப்பிடுவதில்லை. (ஆ-ர்)

பொன்வேளன்

## ஆற்றங்கரையோரம் ஓர் இரவு

பளபளத்தோடுகிறது ஆறு.....
நிலவு எட்டிப் பார்த்து
ஒளிந்து விளையாடுகிறது.
ஆற்றில்.....

விண் மீன்கள்
சொட்டிச் சொட்டி
ஒளிர்கின்றன வானத்தில்!

இரவு ரம்மியமாயிருக்கிறது!

எங்கோ ஒரு
மோன கீதம்
கூடி வருகிறது இரவின்
இராகத்தோடு!

ஆற்றங்கரையோரம்
ஒரு படகு மிதந்து போகிறது!

யாரோ ஒருவன்
புல்லாங்குழல் வாசித்தபடி
மிதந்தபடியிருக்கிறான் படகில்......

ஆறு ...... கரை......
மனிதர்களில்லாத
தனிமை!

அந்த ஒருவனுக்கு மட்டும்
இனிமை தரும்
சூழல்....

போதும்....
இந்த சூழலின்
இனிமையை யாரும்
கெடுத்து விடாதீர்கள்!

ச.ஜனனி சங்கத்தானை.

## சோதனைக் காலம்

இது சோதனைக் காலம்
படித்துக் கொண்டிருக்கிறேன்
படலை தூக்கித் திறக்கப்படுகிறது.....

பக்கத்து வீட்டுப் பவளமக்கா
அம்மாவோடு மரக்கறிப் பண்டமாற்று
செய்ய வந்திருக்கலாம்

'ஊருக்கு விடப்போறாங்களாம்'
தேயாத நம்பிக்கைச் செய்தியோடு
நடேசண்ணை தூக்கித் திறந்திருக்கலாம்

கோடியிலை படர்ந்திருக்கிற
சிறுகுறிஞ்சாவுக்காக ஆரும்
சலரோகக் காரர்
தலைநீட்டியிருக்கலாம்

சத்தியமாய் அப்பாட்டை
ஒருதரும் வரமாட்டினம்
காலை மிதிவெடி திண்டு கன வருசம்

திக்! திக்!! திக்!!!
வீட்டுக்காரராக மட்டும்
இருக்கக்கூடாது

வீட்டை விடச் சொல்லி
மூன்றாவது முறையும்
நாலைந்து நாள்கள் கடந்திட்டு
மூன்றாந் தவணைப் பரீட்சைக்கு
மூன்றே நாள்கள் பாக்கி
இது சோதனைக்காலம் தான்!!!

ந.வினோதரன்

## அந்த நாள்கள்!

உன்னை
சேர்ந்த பின்னாடி
உயர்வு
பெற்றேன் நான்
உணர்வு இன்றி
அலைந்தபோது
உறவு
பெற்றேன் நான்

கனவே
எந்தன் வாழ்வாகி
காலம்
கடத்த முனைந்தபோது
கல்வி என்ற
வழி காட்டி
உயர வைத்தது
நீதானே......

உறவு என்ற
உணர்வுக்குள்
உனை இருத்தி
மகிழ்ந்தபோது
காலம் தந்த கோலத்தில்
பிரிவு வந்து
அணைத்ததுவே

போர் முழக்கம்
எமக்குள்ளே
பொய் முகங்களும்
எமக்குள்ளே

பொய்மை வேஷம்
போட்டு நின்று
விலகி நிற்பது
முறைதானோ.......?

என் விழியின் ஓரத்தில்
துளிர்த்து நிற்கும்
கண்ணீரும்
நெஞ்சினுள்ளே சுடராகி
வீற்றிருக்கும் பேரொளியும்
உன் முகத்தை ஏற்றித்தான்
நிதம் இருத்தி
துதி பாடும்

ஆனாலும் எமக்குள்ளே
சண்டைகளே பல உண்டு
உன் முகத்தை
நான் வெறுக்க
காரணங்கள் பல உண்டு

இருந்தபோதும் உன்னை
நான்
மனதினுள்ளே ருசிக்க
காத்திருக்கும் நாள்கள் தான்
கூட வரும் என்னோடே.

அ.சூரியன்

# பூக்கள் நறுமணம் வீசக் காரணம் என்ன?

வசந்தகாலத்தில் பூக்கள் மலர்ந்து கண்ணுக்கு விருந்தளிப்பதைப் பார்த்திருக்கிறோம்.

பூக்களில் இயற்கையாக உள்ள அழகு, நறுமணம், தேன், மகரந்தம் ஆகியன மனிதன் அனுபவிப்பதற்கு என்று சிலர் நினைக்கலாம். ஆனால், உண்மை அதுவல்ல. பறக்கும் பூச்சிகளைத் தன்பால் ஈர்ப்பதற்கானவே இவையெல்லாம் பூக்களில் இயற்கையாக அமைந்துள்ளன.



பூக்களின் மணம், நிறம் மற்றும் மகரந்தத்தினால் கவரப்படும் பூச்சிகள் இவற்றின் மேல் வந்து அமருகின்றன. ஒரு பூவிலிருந்து இன்னொரு பூவிற்குத் தாவிப் பறக்கும் போது தம் சிறகுகளில் மகரந்தப் பொடியை எடுத்துச் செல்கின்றன. இந்த மகரந்தச் சேர்க்கையின் விளைவாகத்தான் பூக்கள் கருத்தரிக்கின்றன. பின்னர் காயாகி, பழமாகி, விதையாகி தனது இனவிருத்தியை மேற்கொள்கிறது.

பூக்களில் ஒவ்வொரு வகைக்கும் தனியான சுவை, நறுமணம் என்பன உள்ளன. திரவ வடிவில் உள்ள இவை வெயில் அதிகரிக்கும் போது நீராவியாக மாறி காற்றில் பரவும்போது தான் நறுமணத்தை உணருகிறோம்.

பூக்களின் இந்த வாசனை மிக்க திரவத்திலிருந்தே வாசனைத் திரவியங்கள் தயாரிக்கிறார்கள்.

பல்வேறு மலர்களின் வாசனைத் திரவியங்கள் இன்று சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. மல்லிகை, ரோஜா, முல்லை, தாழம்பு, மருக்கொழுந்து போன்றன அனை வராலும் விரும்பப்படுகின்றன.

- கவிதா

## சிந்தனைக்கு...

இறந்த காலத்தில் தொலைத்ததை நிகழ் காலத்தில் தேடாதே! எதிர்காலத்திற்கான வழியைத் தேர்ந்தெடுத்துக்கொள்.!

வாழ்க்கை ஒரு போர்க்களம். புறமுதுகிட்டு ஓடாதே. போராடி வெற்றியைப் பெறு.

மற்றவர்களது அபிப்பிராயங்களிற்கு இடங் கொடு. அப்போதுதான் உனது அபிப்பிராயங் களும் அங்கீகரிக்கப்படும்.

துன்பங்களைக் கண்டு, துவண்டு விடாதே. அவை தான் உன்னைப் பண்படுத்தும்.

– க.சிவசொரூபன்
யா.சென்ஜோன்ஸ் கல்லூரி.

## தெரிந்து கொள்ளுங்கள்

* விண்வெளி ஆராய்ச்சியில் முதலில் இறங்கிய நாடு - ***ரஷ்யா***
* இரத்தம் உறையத் தேவையான தாது - ***கல்சியம்***
* திமிங்கிலத்தின் இதயத்தின் எடை - ***500 கிலோ கிராம் (அரை தொன்)***
* ஒட்டகச் சிவிங்கியின் நாக்கின் நீளம் - ***55 சென்ரி மீற்றர்***
* குதிரையின் மேல்அமர்ந்தபடி விளையாடப்படும் விளையாட்டு - ***போலோ***
* அமெரிக்காவின் முதற் பணக்காரர் - ***கம்பியூட்டர் மன்னன் 'பில்கேட்ஸ்'***
* சுத்தமான களி மண்ணின் நிறம் - ***வெள்ளை***
* உலகத்தின் கண்ணாடி எனக் கூறப்படுவது - ***பத்திரிகைகள்***

அழகராசா - அபிராமி
சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை.

## வார்த்தை விளையாட்டு

| கு | ரு | வி | க் | க | ர | ம் | பை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |

- சிறிய பறவை - 123
- ஆயுதத்தின் மறுபெயர் - 523
- உதவிக்குக் கொடுப்பது - 567
- இளநீரின் பிஞ்சு - 1278
- பாடலின் மறுபெயர் - 53
- தேவலோக மங்கை - 678

ஆக்கம் : வி.கீர்த்தனா
தரம் 10A, மானிப்பாய் மகளிர் கல்லூரி.






ஆக்கம்:-
மாதங்கி கோபாலகிஷ்ணன்
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை.

**தம்பி, தங்கைகளே!**

'சிறுவர் பொழில்' பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். அவை தரமாக இருப்பின் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

## நல்ல உறுதி நாமெடுப்போம்!

சின்னச் சின்ன உயிரினமும்
சிறப்பாய் வாழுது எதனாலே?
திட்டம் போட்டு உழைப்பதிலே
திடமாய் இருக்குது அதனாலே!

உயரே பறக்கும் பறவைகளும்
ஊர்ந்து செல்லும் எறும்புகளும்
கடமை தவறா பண்பாலே
கடிதில் உயருது பொய்யில்லை!

சோம்பித் திரியும் மனிதர்களால்
சோரம் போகுது திட்டமெல்லாம்
சட்டம் போட்டுப் பார்த்தாலும்
சரியாய் உழைப்பவர் இங்கில்லை

நாட்டின் நிலையை மாற்றிடவே
நல்ல உறுதி நாமெடுப்போம்
உழைப்பால் உயர்ந்த ஜப்பான்
உணர்வில் நிறுத்தி கரம் இணைப்போம்

– கி.துவசிகரன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# அன்னமும் காகமும்

ஒரு பூஞ்சோலையில் அன்னமும் காகமும் வசித்து வந்தன. இரண்டும் நல்ல நண்பர்கள். தாம் கண்டதை, கேட்டதை ஒன்றுடன் ஒன்று பகிர்ந்து கொள்ளும்.

ஒருநாள் அன்னம் எங்கோ சென்று விட்டு திரும்பி வந்தது. சிறிது நேரத்திற்கு பின்னர் அது திரும்பவும் புறப்பட்டது.

இதனைக் கண்ட காகம் 'அன்னம்மா மிக்க சந்தோசமாய் இருக்கிறாய். எங்கே போகிறாய்? என்று கேட்டது.



'காக்கையாரே இந்தச் சோலையை அடுத்தாற் போல அழகான குளம் ஒன்று இருக்கிறது. அங்கு சிவப்பு நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் அழகான தாமரை மலர்கள் பூத்துள்ளன. அவை அந்தக் குளத்தின் அழகுக்கு மேலும் அழகூட்டுகின்றன. அந்தக் குளத்துக் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாலே போதும் எந்தக் கவலையும் தோன்றாது. அதனால் தான் அங்கு போகிறேன்' என்றது அன்னப்பறவை.

'இவ்வளவு அழகான குளமா? நானும் வருகிறேன் என்னையும் கூட்டிச் செல்' என்றது காகம்.

அவை போகும் வழியில் கழுதை ஒன்று இறந்து கிடந்தது. அதிலிருந்து அழுகிய நாற்றம் காற்றில் மிதந்து வந்தது.

காற்றில் வந்த நாற்றத்தை உணர்ந்ததும் காகம் 'நான் வரவில்லை. நீ போய் தாமரைக் குளத்துக் காற்றை அனுபவி' என்று கூறி விட்டுப் பறந்து சென்றது. நேரே கழுதையின் இறந்த உடலுக்கு அருகில் சென்ற காகம், அதனைக் கொத்தி உண்டது. இதல் லவா இன்பம் என மனதில் கூறி கொண்டது.

'நல்லவர்கள் நல்லதையே விரும்புவர். தீயவர்கள் தீயதையே விரும்புவர்.'

– அப்பம்மா

# செல்லையாத் தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்....-08

வீதி செப்பனிடப்பட்டுக் கொண்டிருந்தது. கற்களைப் பரப்பி உருளையினால் அவற்றை இறுகச்செய்து கொண்டிருந்தனர். சிறுவர்கள் அந்தச் செயற்பாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, செல்லையாத் தாத்தா அவ்விடத்திற்கு வந்தார்.

'உருளை கற்களை நசித்து இறுக்குகிறதே தாத்தா! அது நிறையப் பாரமாக இருக்கும் என்ன?' என்றான் இனியன். 'இது உருளை போல இருக்கு. ஆனால் இதை நாங்கள் சில்லு அல்லது சக்கரம் என்றுதான் சொல்ல வேணும்' என்றார் தாத்தா. 'சில்லு என்பது வாகனங்களின் பகுதியல்லோ' என்றாள் பிரியங்கா. 'ஓம் தாத்தா.... சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார், வான், பஸ், லொறி, ஒட்டோ.... ஒவ்வொண்டுக்கும் வேறை வேறை அளவிலை..... வேறை வேறை எண்ணிக்கையிலை சில்லுகள் இருக்கு...' என்றான் பிரியன். 'மாட்டு வண்டி, குதிரை வண்டி, வீல்பரோ, விமானம், புகையிரதம்... இதுகளெல்லாம் வித்தியாசமான சில்லுகளைக் கொண்டவை' என்றான் அகிலங்கன்.

'பெரிய இயந்திரங்கள், மணிக்கூடுகள், வாகனங்களின் இயக்கத்துக்குக் காரணமான பற்சக்கரங்களும் சில்லுகள் தானே! அவை தானே இவ்வளவு இயக்கத்துக்குக் காரணமாக இருக்கின்றன' என்றான் பிரியன்.

'ஓமோம்... அதுவும் சக்கரங்கள் தான். நாங்கள் தண்ணி அள்ளுற கப்பி, கஸ்பர் வீல் எல்லாமே சக்கரந்தானே! என்றாள் பிரியங்கா.

எல்லாவற்றையும் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்த தாத்தா சொன்னார். 'மனித நாகரிக வளர்ச்சியிலை சில்லு கண்டு பிடிக்கப்பட்டது மிக முக்கியமான புரட்சி எண்டு சொல்லலாம். பொருள்களையும் ஆட்களையும் கொண்டு போறதுக்கு மனிதர்களையும் மிருகங்களையும் பயன்படுத்திய மனிதன் சில்லுகளைக் கண்டுபிடிச்ச பிறகுதான் இலகுவாக இவற்றைக்கொண்டு போக முடிஞ்சது'.

'சில்லுகளைக் கண்டுபிடிச்சது ஆர் தாத்தா?' என்றுகேட்டான் பிரியன்.

'ஆரோ ஒரு புனைவாற்றல் மிகுந்தவனோ... புதுமையை நாடும் குழுவினரோ இதைக் கண்டுபிடுச்சி ருக்கலாம். ஆனால், ஆர் கண்டுபிடிச்சதெண்டு தெரியாது. இண்டைக்கு ஈரான், ஈராக் பகுதியாக இருக்கிற இடத்திலை



5ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமியா என்ற நாகரிகம் வளர்ந்திருந்தது. அங்கைதான் முதன் முதலில இந்தச் சில்லுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. மூன்று பலகைகளை இணைத்து இந்தச் சில்லு அமைக்கப்பட்டி ருந்தது. ஆனால், அதுக்கு முன்னமே தோல், மரப்பட்டை, குடைந்து எடுக்கப்பட்ட மரம் முதலியவற்றைப் பயன்படுத்தி சறுக்கு வண்டிகளைச் செய்து பயன்படுத்தியிருக்கினை வட ஐரோப்பாவிலை வாழ்ந்த மக்கள். இந்தச் சறுக்குவண்டிகள் தான் மனிதனுடைய முதல் வாகனம். இதுகளுக்குச் சில்லுகள் இருக்கேல்லை. அதுக்குப் பிறகு மரக்குற்றிகளை அடுக்கி பாரமான பொருள்களை அவற்றின் மீது வைத்து உருட்டுவதன் மூலம் பொருள்களை வேறு இடங்களுக்குக் கொண்டு போனார்கள். இதனுடைய அடுத்த கட்டமாகத் தான் சில்லு கண்டு பிடிக்கப்பட்டிருக்கும்' என்றார் தாத்தா.

சில்லுக் கண்டுபிடிக்க முன்னம் பெரிதும் சிரமப்பட்டிருப்பினை என்ன தாத்தா?' என்றான் இனியன்.

''ஓமோம்... கண்டு பிடிச்ச பிறகும் பல பிரச்சினைகள் இருந்தன. ஆரம்பத்திலை, வட்டமாக இருக்கிற மரத்தை இரு துண்டுகளாக்கி அந்தத் துண்டுகளுக்கு நடுவில் துளையிட்டு, அந்தத் துளைகளுக்குள் தடிகளைச் செருகி, அத்தடிகள் இரண்டையும் பக்கவாட்டாக இருதடிகளால் இணைத்துக்கட்டி ஒரு வாகனமாக்கினர்.

இப்படிச் சக்கரங்கள் பெரிசாக, பாரமாக.. இருந்ததால் அந்த வாகனத்தை இழுப்பதில் சிரமப்பட்டனர். அதாலை இரும்புச் சட்டங்களைப் பாவிச்சு சில்லுகளின் பாகங்களை இணைத்தனர். இதனாலை மரத்தின் பகுதிகளைக் குறைத்தனர். பாரமும் குறைந்தது.

பொருள்களை ஏற்றிச் செல்லும் போது மழை காலத்திலை சில்லுகள் புதைந்தன. இதுக்குத் தீர்வு காண்பதற்காகவே கற்களாலை பாதைகளை அமைத்தனர். பாதைகளை அமைக்கவென்று கற்களை உடைச்சு,பொழிஞ்சு பயன்படுத்தினர். பாதையின் மேற்பரப்பு சமமாகவும் உறுதியாகவும் இருப்பதற்காக உருளையைப் பயன்படுத்திச்சினை.'

'அப்ப சில்லுத்தான் பாதையையும் உருவாக்கிச்சு இல்லையா தாத்தா?.' என்றான் அகிலங்கன். உண்மைதான்! ஆனால், இந்த மரச்சில்லுகள் பாதையில் போகேக்கை ஒரேஅதிர்வாக இருந்தது. குலுங்கிக் குலுங்கித்தான் போக வேண்டியிருந்தது. இதைக்குறைப்பதற்கு இரும்பினால் வெளிப் பகுதிகளை அமைத்தனர். பின்னர் இறப்பரால் வெளிப்பகுதிகளை அமைத்தனர். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போலை 1888ஆம் ஆண்டிலை பிரித்தானியாவிலுள்ள கால்நடை மருத்துவரான ஜோன் போய்ட் டன்லப் என்பவர் காற்றடைத்த சக்கரக் குழாய்களைக் கண்டு பிடித்தார். அதைத்தான் நாங்கள் ரியுப் என்று சொல்லுகிறோம். இன்றைக்கு இந்த ரயரும் ரியுப்புமே பெரும்பாலான போக்குவரத்துச் சாதனங்களிலை பயன்படுத்தப்படுகுது.' என்று சொல்லி முடித்தார் தாத்தா.

'அந்தப் பெயர் தெரியாத மேதைக்கும், டன்லப்புக்கும் நாங்கள் நன்றி சொல்ல வேணும்... என்ன தாத்தா?' என்றான் இனியன்.

'நிச்சயமாக....' என்றபடி தாத்தா புறப்பட்டார். உருளை இயந்திரம் தன்வேலையை முடித்து, ஓரமாக நிறுத்தப்பட, தார் ஊற்றும் பணி நடைபெறத் தொடங்கியது. சிறுவர்களும் கலைந்தனர்.

*(தாத்தா மீண்டும் வருவார்)*

பாபு அண்ணா

# ஊர் ஊராகச் சென்று சேகரித்து எழுதி

# 38 நாட்டுக் கூத்துக்களை ஆவணப்படுத்தியவர்



*பெயர் பூத்த நாட்டுக் கூத்து அண்ணாவியாரான கலாபூஷணம் அ. முருகவேள், தமிழ் உணர்வும் சமயப்பற்றும் மிக்கவர். 'முத்தான முத்தவர்கள்' பகுதியில் அவரை அறிமுகம் செய்ய விழைந்து நாடிய போது தமக்கு பிரசாரம் தேவை இல்லை என்று மறுத்தார்.*

*அதன் பின்னர் சற்று நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் சுகமாகிய பின்னர் இரண்டாது தடவை அணுகி, அவரது கலைத்துறை அனுபவம் ஏனையோருக்கு ஓர் ஊக்குவிப்பாக அமையும் என்று எடுத்துக் கூறினோம். சில நாள்களில் வருமாறு கூறிச் சம்மதம் தெரிவித்தார்.*

*நேர்காணலுக்குச் சென்ற போது மீண்டும் தளர்ந்து காணப்பட்டார். தமது முயற்சிகள், செயற்பாடுகளை ஞாபகப்படுத்திக் கொள்ளக் கஷ்டப்பட்டார். வயது எண்பதல்லவா? எனினும், எங்கள் முயற்சி தோற்கக்கூடாது, என்பதற்காக அவரிடம் இருந்து இங்கு தரப்படும் தகவல்களைப் பெற்றுக்கொண்டோம்.*

*அதனைக் கோர்த்து எழுதிப் பத்திரிகையில் சேர்ப்பதற்கு முன்னர் அவர் உயிர் துறந்துவிட்டார். நான்கு நாள்களுக்கு முன்னர் வலிகாமம் மேற்குப் பிரதேச செயலக கலாசாரப்பேரவை நடத்திய இலக்கியப் பெருவிழா அரங்கு ஒன்றுக்கு அவரின் பெயரை இட்டுக் கௌரவித்தது.*

*கலாபூஷணம் முருகவேள் அமரராக முன்னர் உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டவற்றின் தொகுப்பை இங்கு தருகிறோம்.*

முத்தான முத்தவர்கள் - 20

# ஒரு கலைப்பித்தனாகச் செயற்பட்ட மூத்த அண்ணாவி அ.முருகவேள்

**கேள்வி:** உங்களுடைய வாழ்க்கை விவரம் குறித்து வாசகர்களுக்குச் சுருக்கமாகச் சொல்வீர்களா?

**பதில்:** வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சரவணமுத்து அப்புக்குட்டிக்கும் வேலு சின்னத்தங்கத்துக்கும் மகனாக 24.10.1925இல் வட்டுக்கோட்டை மேற்கில் பிறந்தேன்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையில் ஆரம்பம் முதல் கல்விகற்று, 1942ஆம் ஆண்டு சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தேன். தமிழ், கணிதம், சமயம் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றேன்.

இதே பாடசாலையில் 1943ஆம் ஆண்டு ஆசிரியராகக் கடமை ஏற்றேன். சில மாதங்களில் ஆசிரியர் பணியை நிறுத்தினார்கள். அதனைத் தொடர்ந்து 1944ஆம், 1945ஆம், 1946ஆம் ஆண்டுகளில் வட்டு.சிவன் ஐக்கிய பண்டசாலையில் எழுதுவினைஞராகப் பணியாற்றினேன். 1947ஆம் ஆண்டு மாத்தளையிலுள்ள தோட்டப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமை ஏற்றேன். அங்கு ஐந்து ஆண்டுகள் சேவையாற்றினேன். பின்னர் 1953ஆம் - 1955ஆம் ஆண்டு வரை பதில் தலைமை ஆசிரியராகக் கண்டியிலுள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றினேன். 1956ஆம், 1957ஆம் ஆண்டுகளில் பலாலி ஆசிரிய கலாசாலையில் கல்வித் தேசியத்திட்டம் தொடர்பாகப் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறினேன்.

அதன் பின்னர் 1958ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டுவரை கண்டியிலுள்ள தமிழ்ப்பாடசாலை ஒன்றில் ஆசிரியராகவும் 1971ஆம் ஆண்டு தொடக்கம் 1974ஆம் ஆண்டுவரை அதிபராகவும் கடமையாற்றினேன்.

### சிங்கள மாணவர்கள் குருபக்தி மிக்கவர்கள்

இக்காலப் பகுதியில் எமது பாடசாலைக்கு அருகில் உள்ள சிங்களப் பாடசாலைக்குச் செல்கின்ற சிங்கள மாணவர்கள் என்னிடம் வந்து வெற்றிலை பாக்குவைத்து எனது காலில் வீழ்ந்து வணங்கிய பின்னர் தமது பாடசாலைக்குச் செல்வார்கள். குருவுக்கு மிகவும் மதிப்புக்கொடுப்பவர்கள் சிங்கள மாணவர்கள்.

1975ஆம் ஆண்டு தொடக்கம் 1985ஆம் ஆண்டுவரை யாழ். மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் அதிபராகச் சேவையாற்றி, இறுதியில் நான் கல்வி பயின்ற வட்டு.திருநாவுக்கரசு வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறினேன்.

**கேள்வி:** நீங்கள் ஒரு சிறந்த நாட்டுக் கூத்துக் கலைஞராக மதிக்கப்படுகிறீர்கள். அத்துறையில் உங்களுக்குக் இருந்த ஈடுபாடு மற்றும் செயற்பாடுகள் குறித்து வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்களேன்.....?

**பதில்:** வட்டுக்கோட்டையில், எமது உறவினர்கள் அனைவரும் நாட்டுக் கூத்து ஆடுபவர்களாகவும் பாடுபவர்களாகவும் இருந்தார்கள். இதனால், எனது 13ஆவது வயதில், கல்விகற்கும் போதே நாட்டுக்கூத்துப் பாடல்களை எமது முதியோரிடம் கேட்டு அவர்களுடன் சேர்ந்து பாடினேன்.

நாட்டுக் கூத்தில் எனக்குள்ள ஆர்வத்தினால் அவர்களை துருவித் துருவிக் கேட்பேன். அப்போதெல்லாம் அவர்கள் நாட்டுக்கூத்துப் பற்றிய பல உள்ளார்ந்த விவரங்களை விளக்கிக் கூறினார்கள். எனது ஆர்வம் செயற்பாடாக மாறியது. உறவினர்கள் வசம் இருந்த நாட்டுக் கூத்துக்களின் ஏட்டுச் சுவடிகளைப் படித்துக் கூத்துக்களையும் பாடல்களையும் நிரல்படுத்தினேன்.

நாட்டுக்கூத்துக் கலை எமது கிராமத்தில் 100,200 வருடங்களாகச் சந்ததி சந்ததியாக நிலைகொண்டிருந்தது. எனினும் சிறிது காலம் இடைவெளி நிலவியது. அதனை மீட்டு அந்தக் கலையைப் பேணவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டானது. அக்கலைக்கு எமது ஊரில் மீள உயிர் கொடுக்க முடிந்தது மகிழ்ச்சியே!

1942ஆம் ஆண்டு எமது ஊரில் பாலர் கலைவளர்ச்சிச் சங்கம் ஒன்றை ஆரம்பித்துச் சிறுவர்களுக்குத் தாச்சி, கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்குப் பயிற்சிகளையும் உதவிகளையும் வழங்கினேன். அதன் போது, அதாவது சம காலத்தில் எமது முதியோர்களிடமிருந்து நான் கற்ற நாட்டுக்கூத்தை அன்றைய எமது இளம் தலைமுறையினருக்குப் பழக்கினேன்.

தருமபுத்திரன் நாட்டுக்கூத்தையே முதன் முதலில் முதியோர்களிடம் பாட்டுக்களாகக் கேட்டு அப்பியாசக் கொப்பிகளில் எழுதினேன். பெரியவர்கள் வசம் இருந்த கலைச் சொத்தைப் பதிவு செய்யும் ஆரம்பம் அதுவாகவே இருந்தது. அதனைத் தொடர்ந்து அலுப்புச்சலிப்பு இல்லாமல் தருமபுத்திர நாட்டுக் கூத்தைக் கையெழுத்துப் பிரதியாக்கினேன். 1956ஆம் ஆண்டளவில் அது நடைபெற்றது.

1961ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக்குழுவை ஆரம்பித்தேன். எமது முன்னோர்களான பிரபல அண்ணாவிமார்கள் ம.வல்லிபுரம், வே. நாகலிங்கம், செ. அமிர்தலிங்கம் போன்றோரின் உதவியுடன் 14.04.1961ஆம் திகதியன்று முதன் முதலில், வட்டுக்கோட்டை வீயோடை முத்து மாரியம்மன் ஆலய வீதியில், வட்டக் கொட்டகைப் பாணியில் 'தரும புத்திர நாடகம்' மேடையேற்றப்பட்டது. எமது பாரம்பரிய கலைச் செல்வத்தை இளைய சந்ததியினருக்குப் பயிற்றுவித்து வழிவழியாக அதனை மீண்டும் மேன் நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் எனது வயதை ஒத்த ஏனைய பலருக்கும் ஏற்பட்டது. அதன் விளைவாகவே 1961ஆம் ஆண்டில், எமது கிராமத்தின் பழம் பெரும் சொத்தான இக்கலையைப் புத்துயிர் பெறச் செய்ய முடிந்தது. முதலாவது அணியில் இக்கலையைப் பயின்றவர்கள் அநேகர், உயர் வகுப்புகளில் படித்துக் கொண்டிருந்தவர்கள். அவர்களில் பலர், பட்டதாரிகளாகப் பெரும் பதவிகளை வகித்து ஓய்வு பெறும் காலத்தை அடைந்துள்ளனர். முதலாவது அணியைத் தொடர்ந்து ஒவ்வொரு சந்ததியினரும் தமது மாணவப் பருவத்தில் தொடர்ந்து நாட்டுக்கூத்து ஆடிவருகிறார்கள். எமதுகலை வளர்ந்து வருவது கண்டு நான் பெரும் பூரிப்படைகிறேன்.

### வெளியூர்களுக்குச் சென்று தேடியவை

**கேள்வி:** நாட்டுக் கூத்துக் கலையை வேறு எந்தவிதங்களில் தெரிந்து கொண்டீர்கள்? அது குறித்த அனுபவத்தைச் சொல்வீர்களா?

**பதில்:** நாட்டுக்கூத்தில் எனக்கு ஏற்பட்ட அதிக ஆர்வத்தினால் சுழிபுரம், பெரிய - புலோ, நெல்லியான் அராலி, கொட்டைக் காடு போன்ற அயல் ஊர்களுக்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடி நாட்டுக் கூத்துக்களின் ஆட்டங்கள், பாட்டுக்கள் பற்றிய நுணுக்கங்களை அறிந்து கொண்டேன். எனது இளமை தொடக்கம் ஒரு கலைப் பித்தனாகி விட்டேனோ என்று எனக்குள் நானே நினைப்பதுண்டு.

**கேள்வி:** சுழிபுரம், கொட்டைக்காடு ஆகிய இடங்களிலும் நாட்டுக் கூத்து பேணப்பட்டு வந்ததா?

**பதில்:** ஆம், அங்குள்ள மக்களும் நாட்டுக் கூத்தில் அதிக ஆர்வம் உள்ளவர்களே. வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் நாட்டுக்கூத்து சுழிபுரம், அராலி, வட்டுக்கோட்டை ஆகிய ஊர்களிலேயே அக்கறையுடனும், கலைத்துவத்துடனும் பேணப்பட்டு வளர்ந்து வருகின்றது.

**கேள்வி:** உங்களுக்கு கலாபூஷணம் விருது வழங்கி அரசு கௌரவித்தது. அது குறித்து சிறிது கூறுங்கள்?

**பதில்:** 1988ஆம் ஆண்டு கலாசாரத் திணைக்களத்தினால் கலா பூசணம் விருது வழங்கப்பட்டது. மேலும் வலிகாமம் மேற்கு கலாசாரப் பேரவையினர் கலைவிழாவில் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர் .

யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட பல போட்டிகளில் கலந்துகொண்ட எமது கிராமத்து நாட்டுக் கூத்துக்கள் பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளன.

**கேள்வி:** நாட்டுக் கூத்துக் கலையைக் குறித்து சில வார்த்தைகள் கூறுங்கள்?

**பதில்:** மட்டக்களப்பு நாட்டுக்கூத்து தென்மோடி நாட்டுக் கூத்து வகையைச் சேர்ந்தது.மலைநாடுகளில் காமாங்கி கூத்துக்களும், சிங்கள மக்களுடைய கூத்துக்கள் சிந்து சொக்களி கூத்துக்களாகவும் இருக்கின்றன.

எமது வடமோடியிலான நாட்டுக் கூத்துக்களுக்கும் மற்றைய இடங்களில் ஆடப்படும் நாட்டுக்கூத்துக்களுக்கும் இடையே ஆட்டத்திலும் பாடலிலும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

**கேள்வி:** நீங்கள் நாட்டுக்கூத்துப் பிரதிகள் பலவற்றைச்சேகரித்து வைத்திருப்பதாக அறிகிறோம். இவற்றை என்ன செய்வதாக உத்தேசம்?

**பதில்:** 38நாட்டுக் கூத்துக்களின் கையெழுத்துப் பிரதிகளும் மூன்று நாட்டுக் கூத்துக்களின் ஏட்டுச் சுவடிகளும் என்னிடம் இருக்கின்றன. இந்திர குமாரன், வாழ்அபிமன்னன், மார்க்கண்டர், வள்ளியம்மன், நளச் சக்கரவர்த்தி போன்ற கையெழுத்துப் பிரதிகளும், சிறுத்தொண்டர், அனுருத்தன் போன்ற ஏட்டுச் சுவடி களும் இருக்கின்றன. சகல நாட்டுக் கூத்துக்களின் பிரதிகளையும் எனது வழித்தோன்றல்களிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ளேன். அவர்கள் காலத்திற்கு ஏற்ற வகையில் பேணுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு.

**கேள்வி:** நாட்டுக்கூத்து பற்றி மக்களுக்கு என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

**பதில்:** நாட்டுக் கூத்துக்கள் என்றும் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டுக் கூத்துக்களில் இருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியும். தமிழ் மக்களின் பாரம்பரிய கலை அது. மிக மூத்த ஆடல் பாடல் கலையும் அதுவே. நவீன சினிமாவில் நடிப்பவர் ஒருவர், ஆடுபவர் மற்றவர், பாடுபவர் வேறு ஒருவர் என்று தனித்தனியே நடை பெறுகிறது. நடிகர்களுக்குப் பதிலாக வேறு எவரோ வசனம் இரவல் கொடுப்பது மிகவும் சிரிப்புக்குரியது.

நாட்டுக் கூத்துக் கலையின் சிறப்பும் தனித்துவமும் சிலாகித்துக் கூறத்தக்கது. ஆடும் கலைஞரே பாடவும் வேண்டும், வசனம் பேசவும் வேண்டும். எல்லாக் கலை அம்சங்களும் ஒன்று சேர்ந்து காணப்படுவது நாட்டுக்கூத்து. இந்தப் பண்டைய கலையின் சிறப்புக்களைக் கூறின் விரிந்து விரிந்து செல்லும்.

**கேள்வி:** நீங்கள் கலையில் மட்டுமன்றி தமிழ், சமயம் ஆகியவற்றிலும் துறைதோய்ந்தவர் என்று கேள்விப்பட்டேன். அது பற்றிச் சிறிது கூறுங்கள்?

### சமய அறிவைப் பெருக்கினால் வாழ்க்கையைச் சீராக்கலாம்

**பதில் :** தமிழ் எங்கள் தாய்மொழி. அதில் பற்றும், பாசமும் ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியம். தமிழை ஆழமாகவும் ஆய்ந்தும் பயின்றால் அதன் சிறப்பும் உயர்வும் தெரியும். எமது மொழி பற்றி நிறையப் படிக்கும் ஆர்வம் சிறுவயதிலிருந்தே என்னிடம் இருந்தது.

ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் என்ற மட்டத்தில் நிற்காமல் தமிழ் இலக்கண இலக்கியத்தையும் ஆழமாகக் கற்றேன் அவ்வளவு தான். கவிதைகள் எழுதும் ஆற்றல் இருந்தாலும் அவற்றைப் பத்திரிகைகளுக்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணியதில்லை.

நாங்கள் சைவசமயிகள் என்றால், சமயத்தைப் பற்றி முழுக்க முழுக்க இல்லாவிடினும் நிறையக் கற்க வேண்டும். எமது சமயம் வாழ்க்கையோடு கலந்தது. எனவே, சமயம் குறித்த அறிவைப் பெருக்கினாலேயே வாழ்க்கையைச் சீராக்கலாம்.

இந்தக் கருத்தை மனதில் இருத்தியே சமய நூல்களையும் கற்றுத் தேறினேன். ஊன்றிப் பயின்றேன். அதனால், சமயக் கருத்துக்களைத் தவறாக எவரும் கூறினால் பிழையைச் சுட்டிக் காட்டுவேன். கோயில் கிரியைகள் உரிய முறையில் செய்யப்படாவிடில் மனதுக்குள் நொந்துகொள்வேன். பொறுக்க முடியாதகட்டத்தில் வெளிப் படையாக எடுத்துக்கூறுவேன். இது எனது பலவீனமா அல்லது பலமா என்று நான் மீள்பரிசோதனை செய்வது கிடையாது.

இன்றைய போக்குகள் மாறிக் கொண்டே வருகின்றன. எமது பண்பாடு, கலாசாரம், சமயம் சார்ந்த வாழ்க்கை என்பவற்றின் சிறப்பை இளம் சந்ததியினருக்குப் பக்குவமாக எடுத்துச் சொன்னால் - சொல்ல வேண்டிய வகையில் சொன்னால் - அவர்களாகவே உணர்ந்து திருந்துவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. முதியவர்களாகிய நாம் அந்த முறையில் செயற்பட்டால் நல்ல பயன் கிடைக்கும்.

செவ்வி : வி.ரி.கதிர்காமநாதன்

# "...காத்திரமான சினிமா உருவாக்கத்தில் அக்கறை செலுத்துகின்றோம்..."



**ஸ்ரீ.சாந்தகுணம் புலம் பெயர்ந்து லண்டனில் வதிபவர். அங்குள்ள கலை, இலக்கியச் செயற்பாடுகளில் அக்கறை யோடு பணியாற்றுபவர். நாடக நடிகராகவும் புகைப்படக் கலைஞராகவும் உள்ள இவர் அங்குள்ள 'விம்பம்' என்ற அமைப்பில் பணியாற்றுகிறார். சென்ற வாரம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஈழத்தவர்களின் தயாரிப்பில் உருவான பதினான்கு குறுப் படங்களைக் காண்பித்தார். உடுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்தோம்.**

● விம்பம் அமைப்பின் செயற்பாடுகள் பற்றிக் கூறுங்கள்?

❐ விம்பம் அமைப்பு பல நோக்கங்களை முன்நிறுத்தி உருவாக்கப்பட்டது. தேடலின் தாகம் கொண்ட சாமானியர்களின் கலைவெளி என்று இதனைக் கூறலாம். சமகால கலை, இலக்கிய, ஓவிய, நாடக, சினிமாத்துறைகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கும் புரிந்தவற்றைப் பகிர்ந்து கொள்வதற்குமான களம் இது. நம் வாழ்வைப் பாதிக்கும் அனைத்துக் கலை இலக்கிய முயற்சிகளும் விம்பத்தின் விச்சிற்குள் வரவல்லன. கலை, இலக்கியக் கோட்பாடுகள், விமர்சனங்கள், நூல் வெளியீடுகள், நவீன ஓவியக் கண்காட்சிகள், புகைப்

## "..இந்திய சினிமாவோடு உடன்பாடில்லை...."

படங்கள், நாடகங்கள், திரைப்படங்கள் என சகல கலை, இலக்கியச் செயற்பாடுகளிலும் விம்பம் கவனத்தைக் குவிக்க முனைகிறது.

உலகப் பந்தெங்கும் சிதறுண்டு கிடக்கும் தமிழ்மக்கள் மத்தியில் உருவாகிக் கொண்டிக்கும் புதிய சிந்தனைப் போக்குகளை, கலைப் புத்தாக்கங்களை இனங்கண்டு அவற்றை ஊக்குவிப்பதிலும் 'விம்பம்' கவனஞ் செலுத்துகிறது. புதிய சிந்தனைகள் காட்டாற்று வெள்ளமாய் பிரவகிக்கும் சூழலில் பழக்கப்பட்டுப்போன பழைய கருத்தோட்டங்களைப் புதிய ஒளியில் பரிசிலனை செய்யும் பக்குவம் ஏற்பட்டால்தான் நவீன உலகை நாம் தரிசிக்க முடியும்.

விம்பத்தின் முயற்சிகளுக்குத் தேச எல்லைகள் கடந்து கிடைத்திருக்கும் ஆதரவு நம்பிக்கையைத் தருவதோடு, நமது பார்வையை விசாலப்படுத்தவும் துணை செய்திருக்கிறது.

● 'விம்பம்' அமைப்பில் யார் யார் இணைந்து பணியாற்றுகிறீர்கள்?

❐ இ.பத்மநாப ஐயர், மு.புஷ்பராஜன், சபேசன், ஓவியர் கிருஸ்ணராசா, மு.நித்தியானந்தன் எனக் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் பலரும் சேர்ந்த அமைப்பே விம்பமாகும்.

● திரைப்படத்துறை தொடர்பாக 'விம்பம்' அதிகம் கவனம் செலுத்துகின்றது. எவ்வாறு சினிமாத்துறை வளர்ச்சிக்கு நீங்கள் உதவுகிறீர்கள்?

❐ காத்திரமான சினிமாவின் உருவாக்கத்தில் நாங்கள் அக்கறை செலுத்துகின்றோம். இந்திய சினிமாவோடு எமக்கு உடன்பாடில்லை. அதன் மாயைத் தனங்களிலிருந்து நீங்கி உலகத் தரம் வாய்ந்ததாக எமது சினிமாவை உருவாக்குவதில்தான் எமது கவனம் குவிந்துள்ளது.

● நீங்கள் பல்வேறு திரைப்படங்களையும் பார்த்திருக்கிறீர்கள். புலம்பெயர்ந்தவர்களின் சினிமாவோடு பரிச்சயமானவர். இங்கு தயாரிக்கப்பட்ட படங்களையும் பார்த்திருக்கிறீர்கள். இங்கு தயாரிக்கப்படும் படங்கள் தொடர்பான உங்களது மதிப்பீடென்ன?

❐ நான் எல்லாப் படங்களையும் பார்க்கவில்லை. பார்த்தவற்றில் கதை மற்றும் கலை அம்சங்களில் குறிப்பிடத்தக்க நல்ல அம்சங்கள் உள்ளன. ஆனால், தொழில்நுட்ப விடயங்களில் குறைபாடுகளை உணர முடிகிறது. நவீன தொழிநுட்பங்கள் தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்வதனூடாகவும் நவீன தொழிநுட்ப சாதனங்களைக் கையாளும் போதும் இக் குறைபாடுகள் நிவர்த்திக்கப்படலாம். இந்தியச் சினிமா மனப்பாதிப்பு எங்களை அணுகாது பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

● புலம் பெயர்ந்த நாடுகளில் திரைப்பட முயற்சிகள் பற்றிக் கூறுங்கள்?

❐ புகலிட வாழ்வின் வேலை நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அங்கு திரைப்படங்கள் தயாரிக்கப்படுவதும் கலை இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபவதும் ஆரோக்கியமான விடயம். ஆனால், அங்கு இரு வகையான படங்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு வகை இந்தியச் சினிமாவை அடியொற்றி ஆடல், பாடல், காதல், சண்டைக் காட்சிகளு டன் ஜனரஞ்சகமாகத் தயாரிக்கப்படுகின்றவை. மற்றது யதார்த்தமாகப் புகலிட வாழ்வைப் பேசுவன. ஆனால், அங்கும் தொழிநுட்பப் பிரச்சினைகள் உணரப்படுகின்றன. பிரான்ஸில் வாழும் அருந்ததி இயக்கிய 'முகம்' படம் குறிப்பிடத்தக்கது. புதியவன் 'மாற்று கனவுகள், நிஜமானால் ஆகிய படங்களை இயக்கியுள்ளார். அவரது இரண்டாவது படம் முன்னையதிலிருந்து மேம்பாடு கண்டிருக்கிறது. டென்மார்க்கில் தயாரிக்கப்பட்ட 'பூக்கள்' படம் முற்றுமுழுதாக இந்தியப் பாணியில் தயாரிக்கப்பட்டது. குறும் படங்கள் பல வெளிவந்துள்ளன. போரினால் சிதைந்து போன மக்கள் எல்லாக் கனவுகளுடனும் புலம்பெயர்ந்து, பின் கனவுகள் கலைந்து, ஆசைகள் கருக, நம்பிக்கைகள் சிதற ஏதிலிகளாய் எல்லா அவமானங்களையும் இழிவுகளையும் பொருமலுடன் தாங்கிக் கொண்டு குடும்பச் சுமைக்காக உழைத்து மடிகிற வாழ்வை இப்படங்கள் பேசுகின்றன. ஜீவன், சுமதிருபன், சுதன் மகாலிங்கம் , அருந்ததி என நம்பிக்கையூட்டும் இயக்குநர்கள் அங்கு உருவாகியுள்ளனர்.

● 'விம்பம்' அமைப்பு 2004 ஆம் ஆண்டிற்கான குறும்பட விருதுகளை வழங்கியுள்ளது. அதில் வெற்றி பெற்றவை பற்றிக் கூறுங்கள்?

❐ சிறந்த படமாக 'The Addicted' (அடிமை) தெரிவாகியுள்ளது. இதை இயக்கி நடித்த சுதன் மகாலிங்கத்துக்குச் சிறந்த நடிகர். சிறந்த இயக்குநர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த கதைக்கான விருதும் சிறந்த குழந்தை நட்சத்திரத்துக்கான விருதும் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட படமான 'மூக்குப்பேணி'க்குக் கிடைத்துள்ளன. இதனை ச.இராகவன், பிரசன்னா ஆகியோர் பெற்றுள்ளனர். சிறந்த திரைச் சுவடிக்கான விருதை 'சைக்கிள்' படத்துக்காக மட்டக்களப் பைச் சேர்ந்த கோபிநாத் பெற்றுள்ளார். சிறந்த நடிகைக்கான விருது மனுஷி படத்தில் நடித்த சுமதி ரூபனுக்கு வழங்கப்பட்டுள்ளது. சிறந்த ஒளிப்பதிவுக்கான விருதை 'விலாசமும்', சிறந்த படத்தொகுப்புக்கான விருதை 'கோப்பையும்' பெற்றுள்ளன. நல்ல திரைப்பட உருவாக்கத்தைக் கருத்திற் கொண்டு இத்தகைய விருதுகளை இவ்வாண்டும் வழங்கவுள்ளோம்.

● நீங்கள் ஒரு நாடக நடிகர். புலம்பெயர் நாடுகளில் நாடக முயற்சிள் எவ்வாறுள்ளது? நீங்கள் நடித்த நாடகங்கள் எவை?

❐ நான் லண்டனை மையமாக வைத்துத்தான் கூறலாம். அங்கு இரு விதமான நாடக முயற்சிகள் உள்ளன. ஒன்று அங்குள்ள தமிழ்ச் சங்கங்கள், கழகங்களுக்காகப் போடப்படும் நாடகங்கள், அவர்களே தமக்காகத் தயாரித்து மேடையேற்றுவார்கள். மற்றது நாடக வளர்ச்சிக் காகத் தயாரிக்கப்படும் நாடகங்கள் அங்கு தாசீசியஸின் களரி அமைப்பு, பாலேந்திராவின் அவைக் காற்றுக்கலைக்கழகம் ஆகிய அமைப்புக்கள் காத்திரமான நாடக முயற்சிகளில் ஈடுபடுகின்றன. இப்போது

**நேர்காணல்**

அரங்காற்றுக்கலைக்கழகம் என்ற அமைப்பு சுவிஸில் உள்ள அன்ரன் பொன்ராஜா போன்றோரால் உருவாக்கப்பட்டுள்ளது. நான் பல நாடகங்களில் நடித்துள்ளேன். வன்னி நோக்கிய இடப்பெயர்வை வைத்து குந்தவை எழுதிய 'பெயர்வு' கதையை பாலேந்திரா நாடகமாக்கினார். அதில் நடித்தேன். பதல்சர்க்காரின் 'முகமில்லா மனிதர்கள்' ரஞ்சித் ராஜ்சௌத்திரியின் 'பாரத தர்மம்' ஆகியவற்றிலும் நடித்ததைக் குறிப்பிடலாம்.

● நீங்கள் ஒரு புகைப் படக்காரர் என்ற வகையில் புலம்பெயர் வாழ்வை புலப்படுத்தும் புகைப்பட ஆவணங்கள் உள்ளனவா? இங்குள்ள புகைப்படங்களைப் பார்த்திருக்கிறீர்களா?

❐ பெரியளவில் இல்லையென்றே சொல்வேன். ஆனால், லண்டனில் தமிழர்கள் என்ற தலைப்பில் ஒரு புகைப்படக் கண்காட்சியை நடத்தும் ஈடுபாட்டோடு இருக்கிறேன். நோர்வேயிலிருந்து தமயந்தி என்பவர் இந்த முயற்சியில் குறிப்பிடத்தக்கவர்.

இங்குள்ள படங்களை உதிரிகளாக அன்றி பெரிதாகப் பார்க்கவில்லை. ஆனால், வெள்ளைக்காரர் ஒருவர் 80களின் பிற்பகுதியில் இங்கு எடுத்த படங்களைப் பார்த்தேன். போருக்குள் வாழ்ந்த வாழ்வை அது அழகாகப் பிரதிபலித்தது.

● லண்டனில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எவை?

❐ இப்போது ஒன்றுமில்லை. முன்னர் நாழிகை, தாகம், பனிமலர், நிருபம் என்பன வெளிவந்தன. 'ஒரு பேப்பர்' என்ற பத்திரிகை மட்டும் வருகிறது.

செவ்வியும் படமும் : **இயல்வாணன்**

## ரணிலுக்கா மஹிந்தவுக்கா.....

(IIபக்கத் தொடர்ச்சி)

### வடபகுதி வாக்குகள்

இந்த விடயத்தில் ரணில் முன்னிலை வகித்து வருகின்றார். ஒரு சில பிரச்சினைகள் தலைதூக்கியுள்ள போதிலும், சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியில் - அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில்- ரணிலுக்குக் கணிசமான செல்வாக்குண்டு. ஆயினும், சிறுபான்மைத் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் அரசியல் முடிவு களைச் சுயமாக மேற்கொள்ள இயலாத வகையில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தீர்மானங்களுக்கமையவே அரசியல் முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய நிலையே நிலவுகின்றது. எனவே, வடபகுதித் தமிழ் மக்களின் வாக்குகளை ரணிலாலோ அல்லது மஹறந்தவாலோ தத்தமது வேண்டுகோள்களின் பேரில் பெற்றுக்கொள்வது இயலாத காரியமாகிறது.

இந்த நாட்டின் பௌத்த சிங்களவர்களின் வாக்குகளை ஈட்டுவதற்கு ரணிலை விட மஹிந்தவுக்கு அதிக வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது. ஆயினும், ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பதற்கு அவை மட்டும் போதுமானவை அல்ல. முன்னைய பல தேர்தல்களின் போது சிறுபான்மை மக்களது வாக்குகளே வெற்றியை நிர்ணயித்துள்ளன.

### சந்திரிகாவின் எதிர்காலம்

இந்த நிலையில், பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ள சந்திரிகாவின் எதிர்காலச் செயற்றிட்டங்கள் எவ்விதம் அமையவுள்ளன என்பதனை எதிர்வு கூற இயலாதுள்ளது.

பெரும்பாலும் அவர் தென்னாபிரிக்காவின் மண்டேலா மற்றும் சிங்கப்பூரின் லீகுவான் யூ ஆகியாரின் பாணியில் அரசியல் செயற்பாடுகளில் தம்மை இணைத்துக்கொள்ளக் கூடுமென ஒரு சிலர் கருதுகின்றனர். தத்தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் மண்டேலாவும் லீகுவான்யூவும் தத்தமது நாட்டு அரசியல் அரங்கிலும், தாம் சார்ந்திருந்த கட்சிகளின் மத்தியிலும் குறிப்பிட்ட பங்காற்றி வருகின்றனர். திரைமறைவிலிருந்து தத்தம் நாடுகளின் அரசியல் செயற்பாடுகளில் அவர்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர். ஆனால், நம் நாட்டில் பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் சந்திரிகாவுக்கு அவர்கள் போன்று அரசியலில் பங்காற்றச் சந்தர்ப்பமொன்று வழங்கப்படுமா என்பது சந்தேகத்துக்கு உரியதொன்றே!

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தம்வசமிருந்த அதிகாரங்களும், வாய்ப்புக்களும் மஹிந்தவின் கைகளுக்குச் சென்றடைவதைப் பார்த்திருக்கும் நிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது. மஹிந்தவின் வெற்றிக்காகப் பொது மக்களிடம் ஆதரவுகோரி மேடைகளில் ஏறி இறங்க அவர் தயாராகவுள்ளாரா என்பதைத் தற்போது தெளிவுபடுத்திக் கொள்ள இயலவில்லை.

ஜே.வி.பி.யின் ஆதரவை மஹிந்த பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், தேசியப் பிரச்சினைகளில், குறிப்பாக ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிபோன்றவற்றில் - ஜே.வி.பியுடன் இணக்கப்பாடொன்றோ அல்லது ஒப்பந்தமொன்றே மேற்கொண்டாக வேண்டும். முன்னரைப் போன்று இத்தகைய விடயங்களில் நழுவல் போக்கை அவரால் கைக்கொள்ள இயலாது போகலாம். இவ்வாறான விடயங்களில் எதிர்காலத்தில் ராஜதந்திர ரீதியிலான அணுகுமுறையைக் கைக்கொள்ள வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்படக்கூடும்.

பொது மக்களின் பேராதரவை ஈட்டும் நோக்கில் பௌத்த சிங்கள மக்களை மகிழ்ச்சியுறவைப்பதற்கான - நாடாளுமன்ற 'கலரி'யில் வைத்து நோர்வே சமாதான அனுசரணையாளர்களைத் திட்டித் தீர்த்தமை போன்ற தான்தோன்றியத்தனமான நடவடிக்கைகளை அவர் எதிர்காலத்தில் மாற்றிக் கொள்ள நேரிடும்.

### புதிய ஜனாதிபதியின் சவால்

தேர்தல் ஜுரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அண்மைய நாள்களில் இடம்பெறும் அரசியல் சம்பவங்கள் மற்றும், அரசியல் வாதிகளின் கருத்து வெளிப்பாடுகள் என்பவற்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தல் இவ்வாண்டின் இறுதியில் இடம்பெறும் வாய்ப்பு அதிகரித்து வருவதாகத் தோன்றுகிறது.

நாட்டின் பிரதான கட்சிகள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான தத்தமது கட்சி சார்பான வேட்பாளர்களை வெளிப்படுத்தியுள்ள நிலையில், ஏனைய கட்சிகளின் நிலைப்பாடு குறித்து நாட்டு மக்களுக்கு எவ்வித முடிவும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

முக்கியமாக ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தத்தமது கட்சிசார்பாக ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர்களை நிறுத்த முடிவுசெய்யுமானால், அதனால் ரணிலை விட மஹிந்தவுக்கே அதிக பாதிப்பு, தாக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. ஏனெனில், இக்கட்சிகளின் தேர்தல் களம் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளை ஈட்டும் வகையிலே அமைந்துள்ளன. அவ்வித நிலையில் சிங்கள, பௌத்தர்களின் வாக்குகள் பல தரப்புக்கள் மத்தியில் சிதறுண்டு போகும் நிலை உருவாகும்.

ரணில், மஹிந்த ஆகிய இருவரில் எவர்தான் ஜனாதிபதியாக வாய்ப்புக்கிட்டிய போதிலும்; நாட்டின் சிக்கல் நிறைந்த சிரமமான பயணமொன்றினையே அவர் மேற்கொள்ள நேரிடும். கடந்த இரு ஆண்டுகளாக ஸ்தம்பித்துப் போயுள்ள சமாதான முயற்சிகள், செயலிழந்து அற்றுப் போய்விடாது அதற்குப் புத்துயிர் அளித்து நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டிய சிரமமான பணியைப் புதிய ஜனாதிபதி சவாலாக ஏற்றுச் செயற்பட வேண்டியுள்ளது. நாட்டின் சரிந்து போய்க் கொண்டிருக்கும் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப, ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புற்ற மக்களுக்கான மீள் கட்டுமானப் பணிகள், நிவாரண நடவடிக்கைகள் என்பவற்றை முன்னெடுத்துச் செல்ல என பல சுமைமிக்க சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை புதிய ஜனாதிபதிக்கு ஏற்படவுள்ளது.

நாடு எதிர்நோக்கியுள்ள இப் பாரிய சவால்களை எதிர் கொள்வது, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைவதை விடச் சிரமமானதொரு விடயமாகும். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு நாட்டின் எதிர்காலம் குறித்த சிந்தனையும், கடப்பாடும் இருந்தாகவேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான செயற்றிட்டப் பிரகடனம் தயாரிப்பது போன்றே, நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான செயற்றிட்டப் பிரகடனம் தெளிவான வகையில் பொதுமக்கள் முன்வைக்கப்படுவது அவசியமாகிறது.